பாரதமணி

13877

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
12, பிருந்தாவனம் தெரு,
மயிலாப்பூர், மதராஸ்

வருஷ சந்தா { உள்நாடு ரூ. 3
வெளிநாடு ரூ. 5

மாலை 5	செவ்வாய் 14-1-41 விக்ரமஹு தை மீ 1உ	முத்து 1

பொருள் அடக்கம்

விஷயம் ... பக்கம்

பொங்கல் வாழ்த்து 2
போகிற போக்கில் 3
பொன் ஸ்பரிசம் ... ... கா. சி. வேங்கடரமணி 6
தரித்திரம் ஏன் ? ... டாக்டர் பி. எஸ். லோகநாதன், எம். ஏ. 16
சிருங்கார நாடகம் ... ... வே. நாராயணன், எம். ஏ., எம். எல். 19
பவள இருக்கமும் பாழிடமும் ... ஆர். கே. விசுவநாதன், எம். ஏ. 20
நமது தேசம் ... ... ராவ் சாகிப். கே. சுப்ரமண்யம் 23
பால்ய ஸ்நேகம் ... ... "ரஸிகன்" 27
பொன் ஏர் ... ... கு. ப. ரா. 32
வைத்யம் ... ... வரகவி. திரு. அ. சுப்ரமண்யபாரதி 33
அருள் ஒளி ... ... எஸ். சந்திரசேகர சாஸ்திரி 36
மடத்தின் உபயோகம் என்ன ? 38
விதியின் விநோதம் ... ... எஸ். ஸோமாஸ்கந்தன் 41
தியாகம் ... ... ஸ்ரீமதி எல். ராஜலக்ஷ்மி 45
புதுமைப் பெண் ... ... ஸ்ரீமதி சேது அம்மாள் 49
சம்பந்தம் ... ... ஆ. வே. ஜெயராமன் 51
குழந்தை பராமரிப்பு ... ... ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாஸன் 55
சிறுவர் பகுதி ... ய. மஹாலிங்க சாஸ்திரி, எம். ஏ., பி. எல். 59
யார் பலசாலி ? ... ... "பாஸ்கரன்" 62

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

விக்ரம வருஷத்துப்

பொங்கல் வாழ்த்து

[வரகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதி]

பொங்குக பொங்கல்—பொங்குக பால்
பொங்கல் பொங்குக—பொங்குகவே—(பொங்)

புகழும் பொருளும் புண்ணியமும்
திகழும் திருவும் செய்தவமும்
பகையில் கேளும் பதியன்பும்
இகழ்வில் மாண்பும் இனிதிலக—(பொங்) 1

தானம் விரும்பும் தனிமனமும்
ஞானம் பயக்கும் நன்னிலையும்
மானம் காக்கும் மதிநலமும்
ஈன மொழிக்கும் இதத்திலக—(பொங்) 2

பெண்கள் கற்பிற் பீடுபெற
பெரியாராசி கூடி வர
எண்கொள் செங்கோல் எழிலமைய
எய்ப்பில் மாரி வளமலிய
மண்வின் தீகால் வளியெனவே
மருவும் முருகன் கருணையுற
விண்கண் விளங்கும் மதிகண்ட
வேலை பொங்கும் பான்மையெனப்—(பொங்) 3

போகிற போக்கில்

'நச, நச' வென்று மழை தூறிக் கொண்டிருந்தாலும் ஒருநாள் காலையில் ஒரு பழைய நண்பரைக் கண்டேன்—கோபுவல்ல. கொஞ்ச காலமாய் அவரைக் காண எனக்குச் சங்கோஜமா யிருக்கிறது. ஏனென்றால், காபி கொண்டுவருவதற்கு முன் ஸரஸ்வதியின் முதல் கேள்வி, "ஏன் இந்த வாரம் "பாரதமணி" வரவில்லை?"

"இந்த வாரம்தானா?" என்று 'உம்' போட்டுக்கொண்டு முனகிக்கொண்டே நான் சொல்லுவது வழக்கம். "நீ ஒரு 'கப்' நல்ல காப்பியாய்க் கொடுத்தால், "பாரதமணி" உடனேவெளிவரும்-உனக்குக் கை ராசி யிருக்கிறது."

* * *

இன்றைய தினம் சந்தித்த பழைய நண்பர் கொஞ்சம் வயசானவர். பல துறைகளில் உழைத்துச் சலித்தாலும் அலுக்காதவர். தமிழ் மக்களின் உண்மையான மனப்பாங்கை ஆராய்ச்சி செய்து அறிந்தவர். முப்பது வருஷகாலம் அரசியலிலும் உயர்தரப் பத்திரிகைகளிலும் பாடுபட்டவர். உண்மையான தொண்டர். ஆனாலும் இப் பெருந் தொண்டால் ஆயாசம் அடைந்தவர். அதனால் சாந்தத்தையும் தெய்வபக்தியையும் தூய்மையையும் இழந்தவரல்ல. தொண்டினால் மேலும் மேலும் இந்தக் குணங்களை அபிவிருத்தி செய்து கொண்டவர்.

* * *

அவர் முகத்தில் பிரம்ம தேஜஸ் ஜ்வலித்தது—சாந்தம் குடிகொண்டு நின்றது—அவர் அந்தணரல்ல, அது சொல்லவேண்டியதில்லை. தற்காலம் பிராமண தேஜஸெல்லாம் காபிகிளப் அடுப்பங்கரையில் புகையுடன் கலந்து நிற்கிறது. இந்த நண்பர் முப்பது வருஷம் பத்திரிகைத் துறையில் லாபத்தை எதிர்பாராமல் பாடுபட்டவர். என்னைக் கண்டவுடன் புன் சிரிப்புடன் அவர் என்னை யழைத்தார். நான் அவரைப் பார்க்க வந்த விஷயம் தெரிந்துகொண்டுவிட்டார்.

"ஸார், நான்தான் இரண்டு வருஷங்களுக்கு முன்பே தமிழ்நாட்டில் இருநூற்றைம்பது லக்ஷம் தமிழர்களில் தமிழில் உண்மையான ஊக்க முள்ளவர்கள் நூறு பேர்கூட கிடையாது என்று சொன்னேனே."

"வாஸ்தவம்தான். தங்கள் வாய்மொழியை நான் இப்பொழுது ஸ்வாநுபவத்திலும் தெரிந்துகொண்டேன். ஆனால் அதை இப்பொழுது நான் ஒப்புக்கொள்ளவில்லை. தமிழ்நாடு கடப்பை ஜில்லாக் கிணறு போல்—காவேரி ஓடினாலும், ஜலம் பாதாளத்தில்தான். பாடுபட வேண்டும். பாடுபட்டால் பாதாளத்தில் அற்புதமான ஜலம். "பாரதமணி"யை வெற்றி பெறச் செய்ய எனக்குத் தபஸ் போதவில்லை. உங்களைப்போல் நானும் இன்னும் இருபத் தெட்டு வருஷங்கள் பாடுபட்டால் இந்த அளர் பூமியைக்கூடப் புஷ்பத் தோட்டமாக அடித்துவிடலாம். அளர் பூமியில் உண்டான புஷ்பத்துக்குத்தான் மணம் அதிகம்."

"நடத்தும் ஐயா, நடத்தும். ஜமாயும்! என்னாலான உதவியை நானும் செய்கிறேன்."

* * *

யுத்தம் பயங்கரமாகப் பெருகிவருகிறது; காட்டு வெள்ளம்போல் கரைகளை உடைத்துப் பொழில்களை அழித்து வருகிறது. குட்டித் தேசங்களுக்கும் குட்டிப் பத்திரிகைகளுக்கும் ஆற்றோரத்தில் வளரும் அரச மரம்போல் எப்பொழுதும் ஆபத்துத்தான். இந்த யுத்தத்தினால் இராணுவ சப்ளை இலாகா கண்டிராக்டர்களைத் தவிர வேறொருவரும் லாப மடைந்தாகத் தெரியவில்லை. ஆனால் இவர்களுக்குக் கும்பிடு போடத் தெரியுமே யொழியக் கல்வியில் பக்தியேது? நவீன நாகரிகத்தில் அதுவும் முக்கியமாய் நமது நாட்டில் பணமிருப்பவர் வாயில் படிப்பில்லை. படித்தோர் கையில் பணமில்லை—காபி கிளப் செலவுக்குத் தவிர. இந்த நிலையில் தமிழ் நாட்டில் பத்திரிகைகளை எப்படி வளரச் செய்வது என்று எனக்குத் தெரியவில்லை.

* * *

இந்த யுத்தம் முடியும் வரையில் "பாரத மணி"யை மாதப் பத்திரிகையாக மாற்றி யிருக்கிறேன். வாரப் பதிப்பை விடத் திறமாய் மாதப் பதிப்பைநடத்தலாமெனத் தீர்மானமாய் நம்புகிறேன். இதையும் நிறைவேற்ற நமது நண்பர்களின் பூரண ஆதரவு வேண்டுமல்லவா? அந்த ஆதரவையும் எதிர்பார்க்கிறேன்.

* * *

பழைய கொள்கைதான் என் உள்ளத்தில் இன்னும் நிலை நிற்கிறது. கல்விப் பெருக்கில்லாமல் வாழ்வில் பெருக்கேது? சுவை யேது—உப்பில்லாப் பண்டம் போல்!

* * *

என் தபஸ் குறைவால்தான் "பாரத மணி"யை வாரப் பத்திரிகையாகச் சிரோடும் சிறப்போடும் நடத்த முடியவில்லை. அதற்காகத்தான் மூன்று மாதங்கள் நான் ஏற்றுக்கொண்ட உபவாசம் — "பாரத மணி"யின் மௌனம். இன்றைய தினம் மௌன விரதம் முடிவு. பாரத மணி மாதப் பதிப்பாக வெளிவந்து உங்கள் வாழ்த்தை விரும்புகிறது.

—மணி

மோட்டார் ஆயுள் இன்ஷ்யூரென்ஸிற்கு

வான்கார்ட்

உங்கள் காரை இன்ஷ்யூர் செய்தீர்களா?
உங்கள் ஆயுளை இன்ஷ்யூர் செய்தீர்களா?

வான்கார்ட்டில்
இன்ஷ்யூர் செய்யுங்கள்

வான்கார்ட் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனி
லிமிடெட்
மவுண்டு ரோட், மதராஸ்,

Phone: 8558. Grams: VANGUARD.

ரூபாய் 250 இனாம்!



வசீகரண யந்திரம்:—நீங்கள் யாரை விரும்பினாலும் சரி அவர்கள் எவ்வளவு கடின சித்தமுடையவர்களாயிருந்தாலும், இந்த யந்திரத்தினால் அவர்களை உங்கள் விருப்பப்படி நடக்கச் செய்யலாம், அவர்களாகவே கீழ்ப்படிந்து விடுவார்கள்! உங்களுடன் பேச விரும்பாமல் வெறுப்புடன் இருப்பவர்கள்கூட இந்த யந்திரத்தினால் தாமாகவே வலியவந்து உங்களுடன் பேசுவார்கள்! வெள்ளித் தாயத்து விலை ரூ. 2-13-0. தாமிரம் ரூ. 1-15-0. தங்கம் ரூ. 5-8-0.

லக்ஷ்மி யந்திரம்:—இது வியாபாரத்தில் லாபம் கொடுக்கும். உத்தியோகம் கிடைக்கும்; லாட்டரியில் ஜயம்! பரீக்ஷையில் வெற்றி! கோர்ட்டு விவகாரம் ஜயமாகும்; நவக்ரஹ தோஷம் நிவர்த்தியாகும். இந்த யந்திரம் உங்களுக்கு அதிர்ஷ்டத்தைக் கொடுக்கும். வெள்ளித் தாயத்து விலை ரூ. 2-13-0, தாமிரம் ரூ. 1-15-0, தங்கம் ரூ. 5-8-0.

குறிப்பு:—இதில் குணமில்லையென்று ரூபிப்பவர்களுக்கு ரூ. 250 இனாம்!

AMERICAN MESMERISM HOUSE,

Post Box No. 27. (D. 1283) AMRITSAR (India)

சந்தா நேயர்களுக்கு அறிக்கை

யுத்த நிலைமையினால் "பாரதமணி"யின் வாரப்பதிப்பை மாதப் பதிப்பாக மாற்றியமைத்திருக்கிறோம். உயர்ந்த கட்டுரைகளையும் அரிய விஷயங்களையும் தாங்கி "பாரதமணி"யின் மாத சஞ்சிகை வெளிவரும். சிரமமிருந்தபோதிலும் அதைப் பொருட்படுத்தாமல் வருஷ சந்தா 4 ரூபாயை 3 ரூபாயாகக் குறைத்திருக்கிறோம்.

அக்டோபர்மீ முதல் தேதிவரையில் 4 ரூபா வீதம் கணக்குப் பார்த்துப் பாக்கி நிற்கும் சந்தாவை வருஷத்திற்கு 3 ரூபா வீதம் மாதப்பதிப்புக்கு வைத்துக் கொள்ளப்படும். இதற்குடன் படாதவர்கள் காரியாலயத்திற் கெழுதினால் பாக்கித் தொகை திருப்பி யனுப்பப்படும்.

மானேஜர்,
"பாரதமணி" காரியாலயம்,
12, பிருந்தாவனம் தெரு, மயிலாப்பூர், சென்னை.

பொன் ஸ்பரிசம்

எழுதியவர்
(கா. சி. வேங்கட ரமணி)

மொழி பெயர்த்தவர்
(கு. ப. ராஜகோபாலன், பீ. ஏ.)

1

ஆக்கூர் ஓர் அழகிய சிறு ஸ்டேஷன். புது 'மாடல்' கட்டிடம். ரயில் பாதை சுருண்டு வளையும் இடத்தில், தோப்பின் நடுவில் மாங்கிளையி லிருக்கும் பறவை போல் அமைந்திருக்கிறது. மாயவரம்—தரங்கம்பாடி கிளைப் பாதையில் அதுதான் மிகவும் ரம்மியமான இடம்—கீழ்க் கரையிலேயே ஈடு ஜோடியற்றது.

பேஷான மண். எங்கே பார்த்தாலும் பச்சைப் பசேலென்று மரஞ் செடிகள்—கடற்கரை யோரமானாலும், தென்னைகள் நல்ல உயரம். விரிந்த ஆல மரங்களும் அடர்ந்த மாமரங்களுமாக அந்தப் பிரதேசம் முழுவதும் தளதளவென்று கொழுத்த செழுமையின் நிழல் தட்டி யிருக்கும். ரயில்வேகூட அதன் அழகைக் கொஞ்சம் அதிகம்தான் படுத்துகிறது—சாரை போல அதன் அருகில் படுத்துக்கொண்டு.

ரயில்வே 'காம்பவுண்டு'க்குள் இருக்கும் சிறு வெள்ளைக் கட்டிடங்கள் வனாந்தரத்தில் ஆசிரமங்கள் இருப்பது போல இருக்கின்றன. ஸ்டேஷனே உட்கார்ந்து தவம் செய்யலாம் போல அவ்வளவு சாந்திமயமாக இருக்கிறது. எனவே ரயில் வண்டிகள்கூட மெதுவாக ஊர்ந்து போகும் போது கடற் காற்றில் ஒரு காதல் பாட்டை ஊதிக்கொண்டே செல்வதில் என்ன ஆச்சரியம்?

2

ஆகாயம் பரிசுத்தமாக இருந்தது. மிதந்து போகும் மெல்லிய மேகங்களிடையே பிறை தவழ்ந்து விளையாடுவது போல் இருந்தது. கடலி லிருந்து ஓர் இதமான காற்று ஒரே தினுசாக அடித்துக் கொண் டிருந்தது. சற்று உயர்ந்த இடத்தில் அமைந்த ஆக்கூர் அதை முழு மூச்சுடன் வாங்கிக்கொண் டிருந்தது.

8. கே. வண்டி அப்பொழுது தான் தரங்கம்பாடியை நோக்கிப் புறப்பட்டு மாலைக் காற்றின் மெது நடைக்கிணங்கச் சாவதானமாகச் சென்றது.

மணி எட்டு அடித்தது. ராமாநுஜம் ஸ்டேஷன் வேலையை முடித்துக் கொண்டான். அருகேதான் வீடு. நாள் முழுவதும் உழைத்த மாடு கட்டுத் துறைக்குப் போவது போல அவன் வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

“இந்த மாதிரி என் தலையில் எழுதியிருக்கிறது என்பது அன்றே எனக்குத் தெரியுமே!” என்று லக்ஷ்மி அவனுக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்தாள்.

கடுகடுப்பான அந்தக் குரலில் மென்மையும் இனிமையும் இல்லாமல் இல்லை. ஆனால் அதில் ஒரு வேகம் இருந்தது. ஸ்டேஷன் மாஸ்டர் அல்லவா? ராமாநுஜத்திற்குக் கண்ணும் காதும் எப்பொழுதும் கூர்மை. அந்த அதிர்க் குரலில் ததும்பிய அபாயக் குறியை உடனே அறிந்தான்.

இரவில் அவன் எதிர்பார்த்த அமைதிக்கு ஆபத்தா என்ன? அந்த மோதலை எப்படி மெதுவாகத் தவிர்ப்பது?

அன்று வீட்டில் லக்ஷ்மிக்கு எல்லாம் திண்டாட்டம். புதுத் துடைப்பம் முதல் புதுக் கிணறு வரை எல்லாவற்றின் பேரிலும் அவளுக்கு எரிச்சலாக வந்தது. அது துடைப்பமாகவா இருந்தது? முள்ளும் முரடுமாக நீண்டு யாரையாவது சரியாகத் தீட்டத் தான் அது லாயக்காக இருந்தது. கிணறோ தனிப் பெருமையுடன் தூர இருந்தது. ரயில்வே கம்பெனியார்

சளோ தங்களுடைய புனிதமான பூமியில் கால்களையைப் பரப்பிச் சள்ளேப்படுத்துவதி லேயே ஆனந்தம்கொண் டிருந்தார்கள். லக்ஷ்மியின் காலில் மிதியடியா மண்ணு? அவளுடைய மெல்லிய உள்ளங்கால்கள் பொத்துப் புண்ணுகிவிட்டன. அவ்வ ளவுதான், அவளுடைய பெண் கோபம் பொங்கிவிட்டது.

"என்ன சமாசாரம், லக்ஷ்மி? இங்கே தான் எல்லாம் ரொம்ப சௌகரியமாக இருக்கிறதே! வந்த தினமே வம்பு பண்ண ஆரம்பிக்கிறுயே!" என்று ராமா நுஜம் வெகு நேரம் கழித்து இரங்கும் குரலில் ஆற்றலாக ஆரம்பித்தான்.

"சுற்றிப் பாரேன், இடம் எவ்வளவு நன்றாக இருக்கிறது! ஸ்டேஷன் ஓர் அழ கிய தோப்பில்—"

"என்ன சமாசார மென்று கேட்கிறீர் கள்?" என்று லக்ஷ்மி குறுக்கிட்டு அவன் வர்ணனையை ஓங்கவிடாமல் தடுத்தாள்.

"இந்தக் காட்டிலே காடியும் குரங்கும் தான் இருக்கும்போல் இருக்கிறது. சுற்றி முற்றி மனித வாசனையே காணும். எங்கே பார்த்தாலும் ஆந்தைகளும், பாம்பு களும் தவளைகளும்தான். இங்கே ஒரு நாள்கூட என்னுலே குடித்தனம் பண்ண முடியாது. இன்றிரவே தந்தி மூலமாக எங்கேயாவது மாற்றிக் கொள்ளுங்கள். ஆயுள் பூராவும் பிறருக்காகத் தந்தி யடித்தே கழித்திருக்கிறீர்கள். ஒருதரம் உங்களுக்காக அடித்துக்கொள்ளுங்கள். உடனே மேலதிகாரிக்குத் தந்தி கொடுத்து இறக்கிக்கொள்ளுங்கள். இல்லையானல் இன்று ராத்திரியே என்னை போட் மெயி லில் ஏற்றி விட்டுவிடுங்கள். நான் குண்டு வக்கு என் உடன்பிறந்தானிடம் போய் மருகிறேன். இந்தச் சுகம் போதும்."

இவ்வாறு லக்ஷ்மி தன் தீர்மானத்தைச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு வெள்ளிப் பஞ்ச பாத்திரத்தை எடுத்து அவன் பக் கம் வீசினுள். பாவம், அதுவும் வெகு நாளாக அவளுடைய கோப தாபங் களுக்கு ஏற்றவா றெல்லாம் பணிந்து கொடுத்துக்கொண்டு வந்திருக்கிறது.

ராமாநுஜம் அதை 'டக்'கென்று பிடித்துக் கொண்டான். வாடிக்கை அவனுக்கு! நாற்பது மைல் வேகத்தில் ஓடும் ரயில் முதல், வட்டங்களிட்டுப் பாயும் வீட்டுச் சாமான்கள் வரை — எல்லாவற்றையும் யாத்திரா மார்க்கத்திலேயே அறியும் பழக்கம் அவனுக்கு இருந்தது.

அது அவன் சந்தியாவந்தனம் செய் வதற்காக! ரயில்வே உத்தியோகம் செய்து ராமாநுஜம் மூட்டை கட்டும் பாபத்திற்கு ஒரு சிறு பிராயச் சித்தம் சந்தியாவந்தனம் என்பது லக்ஷ்மியின் அபிப்பிராயம். ரயில்கள் வந்து போகும் ரயில்வே கால அட்டவணையின் காரண மாக அவன் அதைச் சரியான சந்தியா காலத்தில் சாஸ்திரோக்தமாகச் செய்ய முடியவில்லை. ஆனல் செய்யாமலே இருப் பதற்குத் தாமதமாகவாவது செய்வது தேவலை என்பது லக்ஷ்மியின் கட்சி. பர பரத்த ரயில்வே உத்தியோகஸ்தன் அந்த மாதிரி ஜபம் செய்துகொண்டு உட்கார்ந் திருக்கும் காட்சியைப் பார்ப்பதில் லக்ஷ் மிக்குக் கொஞ்சம் திருப்தி. மேலும் அந்தக் காரியம் முடிவதற்குள் அவளுடு இலை போடுவதற்கான முன் ஏற்பாடு களைச் செய்யலாம்.

பாத்திரத்தைக் கையில் இரண்டு மூன்றுதரம் கவிழ்த்து நிமிர்த்தினுன் ராமாநுஜம். ஜலம் எங்கே என்று கேட் கத் தயங்கினுன். தூரத்தில் அழகாக விளங்கிய கிணற்றின் பக்கமாகக் கண் ஜாடை காட்டினுள் லக்ஷ்மி. பிறகு கொஞ் சம் இளகி, அருகே இருந்த கல்கிணற் றைக் காண்பித்தாள்.

ராமாநுஜம் ஜலம் எடுக்கப் போனுன். முதல் நாளே விஷயம் இப்படிப் போவ தைப் பார்த்தான். அதை முளையிலேயே கிள்ளி எறிவது என்று தீர்மானித்தான். மாயவரம் ஜங்க்ஷன் ஸ்டேஷனில் வேலை பார்த்தபொழுது நடந்த வாழ்க்கை முறை இனி மறுபடி தலை காட்டவிடக்கூடாது, ஆக்கூரி லாவது விச்ராந்தியாகக் குடும்ப சுகம் அனுபவிக்கவேண்டும் என்பது அவன் எண்ணம்.

"இதை நீ காடியும் குரங்கும் இருக்கிற இடம் என்கிறாய். இந்த வயனிலேயே இது யாரும் ஆசைப்படக்கூடிய இடம்! தெரியுமா உனக்கு? ஜாஸ்தி வண்டிகள் கிடையாது. கூட்டமோ கிடையாது. தரங்கம்பாடி அடுத்தாற்போல. தேவ லோகம்னு இது! இதை அனுபவிக்க நாம் கொடுத்து வைக்கவேண்டாமா?" என்று ராமானுஜம் கவிதையில் இறங்கினான்.

"இரவும் பகலும் ஓய்வு உறக்கமில்லாமல் நான் ஜங்க்ஷன்களில் உயிர்விட்டது போதும். இங்கே வேலையே கிடையாது. சம்பளம் பென்ஷன் மாதிரிதான்."

"ஆமாம், உங்கள் சம்பளம் என்னமோ பென்ஷன் மாதிரிதான். மாதம் இருபது ரூபாய்! மேல் வரும்படி தம்பிடி கிடையாது. என்னைத் தங்கை என்று சொல்லிக்கொள்ளக்கூட என் உடன் பிறந்தவனுக்கு வெட்கமாயிருக்கும். உங்களுடைய ஒரு மாதச் சம்பளம் அவனுக்கு ஒருநாள் சம்பளம். நீங்களும் கொடியைத்தான் பிடிக்கிறீர்கள். அவன் கொடியே வேறே" என்று லக்ஷ்மி கொஞ்சம் கடுமையாக ஸ்டேஷன் மாஸ்டருடைய சின்னத்தைப்பற்றிக் குத்தல் செய்தாள்.

"சாரங்கன் கொடுத்து வைத்த பயல்தான். காலிப் பயலாக இருந்தான்; இன்று ஐ. ஸி. எஸ். ஆகி குண்டூரில் அஸிஸ்டெண்ட் கலெக்டர் உத்தியோகம் பார்க்கிறான். ஆனால் எல்லோரும் கலெக்டர்கள் ஆகிவிட்டால் ரயில்தான் ஓடுவது எப்படி? சொல்!" என்று ராமானுஜம் ஹாஸ்யத் துறையில் சற்று இறங்கி லக்ஷ்மியின் செந்தாமரை முகத்தில் வண்டுகள்போல் மொய்த்திருந்த கடுகடுப்புச் சின்னங்களை அகற்ற முயன்றான்.

"ஆமாம், அவன் ஏனடி இப்பொழுது உனக்குக் கடிதமே எழுதவில்லை? அவனுக்கு எப்பொழுது கலியாணம்? நாம் டிக்கட் இல்லாமல் எங்கே வேண்டுமானாலும் போகலாம்" என்று அவன் மேலும் பேசலானான்.

ஆனால் லக்ஷ்மி அவன் கேள்வியைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை. அவள் வேறு கேள்வி கேட்டாள்.

"ஆமாம், எதுக்கு பிராமணார்த்தக்காரர் மாதிரி இவ்வளவு பெரிய இலையைப் பரப்பிக்கொண்டிருக்கிறீர்கள்?" என்றாள் அவள்.

சாப்பாடு ஒரு வேளை அவளைச் சாந்தப்படுத்தக்கூடும் என்று எண்ணி ராமானுஜம் சந்தியா வந்தனத்தை ரயில் ஓட்டத்தில் விட்டு ஜலத்தைக் கையில் வேகமாக வாங்கிக் கீழேவிட்டான். இல்லாவிட்டால் தகராறு வளர்ந்தால் அதன்பிறகு பலன்களை மாற்றிப் பல முறைகளை வெகு நேரம் கையாண்டுதான் அமைதியை நிலவச் செய்யமுடியும். எனவே அவள் ஒரு பெரிய இலையைத் தானே எடுத்துப் போட்டுக்கொண்டு ஜலம் தெளித்துச் சாப்பிடத் தயார் என்பதை ஜாடைகள் மூலம் அவளுக்கு அறிவித்தான்.

இதைப் பார்த்துத்தான் லக்ஷ்மி மேலே கண்ட மூலாதாரமான கேள்வியைப் போட்டாள்.

"வாழை இலைதான் இங்கே யதேஷ்டமாக இருக்கிறதே! ஆக்கூரைப் போல இவ்வளவு செழிப்பான பிரதேசம் சுற்றுமுற்றும் கிடையாது."

"அப்படியானால் இலையையே சாப்பிட்டுடுங்களேன். அரிசி மூட்டைகள் இங்கே விளைகிறதில்லையே! இரண்டு பேருக்கு இருபது ரூபாய் எப்படிப் போதும்?"

"அதுகூட இனிமேல் இங்கே விளையும்டி! கொஞ்சம் பொறுத்துக்கொள் கடவுள் கிருபையில்—"

"நீங்கள் முதலில் ரயில்வே தெய்வங்களின் கிருபையைச் சம்பாதியுங்கள்."

"கடவுள் கிருபையுடன் அது தானாக வரும். ஆச்சு, குட்ஸ் செக்ஷன் இங்கே ஆரம்பிக்கப் போகிறார்கள். அப்புறம் நீ கேட்டதெல்லாம் கிடைக்கும். முதல் தரமான அரிசி, பருப்பு, உளுந்து! ஈசிவரன் சம்பளம் குறைந்தவர்களுக்கு ஏதோவொரு வழியாகப் படியளக்கத்தான்

செய்கிறார்" என்று ராமாநுஜம் ஆசை வார்த்தை கூறி ஆறுதல்கொண்டான்.

அடிமை நாட்டைப் போல அடிமைப் புருஷனும் அடி விழ விழ இடம்கொடுத்து அமுங்குகிறான் அல்லவா?

ராமாநுஜம் இலையின் முன் உட்கார்ந்து கொண்டு இலையைத் துடைத்துக் கொண்டே பேசினான். நீர்த் திவலைகள் முத்துக்களைப் போல இலையில் அங்குமிங்கும் அழகாகச் சிதறி ஓடின. கோபாவேசம்கொண்ட கோவில் அம்மன் போல நின்றாள் லக்ஷ்மி. அவன் இலையில் தத்தளித்த தண்ணீர்த் திவலைபோல சண்டையும் சமாதானமும் தராசு முனையில் நின்றன. சமாதானம் வெற்றி பெற்றது.

லக்ஷ்மிக்கு மனது வந்தது. சர்ரென்று உள்ளே போய்த் தட்டில் சாதத்துடன் வந்தாள். தட்டுச் சாதத்தைச் சிதறி போடும்படி கோபங்கொண்ட மனைவிக்கென்றே ஏற்பட்ட திறமையுடன் பரிமாறினாள்.

அந்த அலட்சியத்திற்காக ராமாநுஜத்தினுடைய புருஷகோபம் பொங்கி இருக்கலாம். ஆனால் இலை நிறையக் கிடந்த அந்த சுத்தான்னத்தின் அழகு அதை மாற்றி விட்டது. சாப்பிட்டுக்கொண்டே தான் தன் பெண்சாதிக்காகச் சாதித்ததையெல்லாம் கொட்டி அளக்கலானான்.

"லக்ஷ்மி, இந்த ஊர்ப் பெரிய முதலாளி ஏற்கனவே எனக்குச் சிநேகமாகிவிட்டார். அவருக்கு எவ்வளவு சொத்தென்று தெரியுமா உனக்கு? முந்நூறு வேலி—முதல்தரமான நஞ்சையில் இரண்டாயிரம் ஏக்கர்! இங்கே இருந்து பார்த்தாலே தெரியும்—மலைபோன்ற அவர் போர்களும் நெல் கோட்டைகளும்."

உணர்ச்சி வசமான பெண்கள் பெரிய மனிதர்களைப் பற்றிய கதைகளைக் கேட்டுப் பரவசமாவதைப்பற்றி ராமாநுஜம் நாவல்களில் படித்திருக்கிறான். அந்த ஊர் முதலாளியைப் பற்றிய கதையைச் சொல்லி லக்ஷ்மியை ஏன் தன் வசமாக்கக் கூடாது என்று அவன் யோசித்தான்.

"முதலியார் எனக்கு ரொம்ப ஆப்தமாகிவிட்டார். இந்த லயனே அவர் முயற்சிதான். இந்த ஆக்கூர் ஸ்டேஷனே அவரால் ஏற்பட்டதுதான். வேறொருவருக்கும் இது உபயோகமில்லை. இங்கே ஒரு ஸ்டேஷன் வேண்டுமென்றார். கிடைத்துவிட்டது. அவர் தாலுகா ஜில்லா போர்டுகளில் மெம்பர். அவர் தமிழில் கையெழுத்துப் போடுவது பார்ப்பதற்கு இங்கிலீஷ் போலவே இருக்கும் என்பதைக் கிதாபாகச் சொல்லிக்கொள்ளுவார். சட்ட சபைக்குக்கூடத் தேர்தலுக்கு நிற்கப் போகிறதாகச் சொல்லுகிறார். பணக்காரன் என்னதான் செய்யக் கூடாது?"

லக்ஷ்மி கொஞ்சம் வாயை மூடிக் கொண்டு கேட்டாள்; ராமாநுஜத்திற்கு உற்சாகம். சந்தேகமென்ன! படிப்பில் பிரயோஜனம் இருக்கத்தான் இருக்கிறது. நாவல் படிப்பு வாழ்க்கைக் கடலின் கொந்தளிப்பைக் கூடச் சமாளிக்க உபயோகமாகிறது!

"இன்று மாலை 6 மணி வண்டிக்குப் போக முதலியார் தன் புதுக்காரில் வந்தார். வெகு அழகாக அலங்காரம் செய்து கொண்டிருந்தார். மேகங்கள் கவிழ்ந்து வானத்தில் மின்னல் போல பிரகாசித்தன. ஸ்தூலமான அவருடைய சரீரம் மெருகு கொடுத்து இரும்பின்மேல் எண்ணெய் பூசினதுபோல் இருந்தது. பணக்காரர்களெல்லாம் அப்படித்தான்!"

மேலே நடக்கட்டும் என்பதற்கடையாளமாக லக்ஷ்மி தலை அசைத்தாள். ஆனால் நடுவில் வேதாந்தம் மட்டும் நுழைய வேண்டாம் என்று சூசனை செய்தாள்.

"நல்ல வேளையாக வண்டி அரைமணி 'லேட்'. டிரைவர் தாங்கம்பாடியில் காதலியுடன் கொஞ்சம் சல்லாபம் செய்து கொண்டிருந்து விட்டான். முதலியார் அது வரையில் என்னுடன்தான் இருந்தார். இதற்குள் நல்ல நாற்காலியாக ஒன்று கொடுத்தேன். கால் ஒடிந்திருந்தாலும் நன்றாக நாட்டாணி அடித்து அதை நம்ப போர்ட்டர் கரியன் ஒட்டை பண்ணிவிட்டான்! அவன் அப்பன் கொல்லன் அதைச் சரிபண்ணி தச்சக்

2

கூலியை வாங்கிவிட்டான்! முதலியார் தங்கமான மனிதன். இரண்டு மூன்று நாட்களில் முதல்தரமான ஈர்க்குச் சம்பா அரிசி இரண்டு மூட்டை அனுப்புவதாகச் சொல்லி இருக்கிறார். இப்பொழுது தெரிந்ததா — ஆக்கூரிலே அரிசி மூட்டை கூட விளையு மென்று ஏன் சொன்னே னென்று? ஸ்டேஷன் மாஸ்டர் அவர் வீட்டு மனிதர்களில் ஒருத்தர் என்பது அவர் எண்ணம்."

ராமாநுஜம் தைரியமாகக் கயிறு திரித்தான். பாதி நிஜம்; பாதி அவன் எதிர் பார்த்தது. லக்ஷ்மியின் அழகிய முகத்தில் ஒரு புன்சிரிப்பை வரவழைக்க என்ன மூட்டைதான் அவிழ்க்கக்கூடாது? தேவி அருள் புரிந்துவிட்டாள் என்பதற் கடையாளமாக அவள் முகத்தில் லேசாக ஒரு திருட்டுப் புன்னகை தலை காட்டிற்று.

ராமாநுஜத்திற்குத் தலை கால் தெரியவில்லை. ஸந்தோஷத்தில் கை தட்டிக் கூத்தாடி யிருப்பான். ஆனால் வலது கை சிதறின சாதத்தைச் சேர்த்துக் குவித்துக் கொண்டிருந்தது. நல்ல வேளை! இலை பெரியதாய் இருந்தது.

"ஆச்சு, குட்ஸ் செக்ஷன் ஏற்பட்டது போலத்தான்—இன்றைக்கோ நாளைக்கோ! அப்புறம் உனக்கென்ன குறைச்சல். கேவலம் காய் கறி முதல் முட்டை கோஸ் வரை, பொறுக்கின சிராய் முதல், அரிசி, பருப்பு, உளுந்து ஜாடா சாமானும் காசு செலவில்லாமல் வரும். முதலியாரே கொழும்புக்கு வருஷா வருஷம் இருபதினாயிரம் மூட்டை அரிசி ஏற்றுமதி செய்கிறார். பதிலாக காச்மீரத்திலிருந்து கன்யாகுமரி வரையில் என்னென்ன நல்ல சாமான் உண்டோ புஷ்பங்கள், பழங்கள், தமிழ்ப் பதார்த்தங்கள் எல்லாம் இறக்குமதி செய்கிறார். எல்லாம் நம் மூலமாகத்தான் போகும். தெரிகிறதா, அடியே!"

"இருபதினாயிரம் மூட்டை அரிசியா! அடே யப்பா! லக்ஷாதிபதி போலிருக்கே! அவ்வளவு பணத்தை வச்சுண்டு என்ன பண்றார்!

லக்ஷ்மியின் குரலில் தன்னை அறியாத ஒரு மாறுதல் உண்டாயிற்று. பிரஸன்ன வேளையில் அவளுடைய பேச்சின் பிறவி அழகு எவ்வளவு என்பது அப்பொழுது தெரிந்தது.

தன் யுக்தி பலித்ததைக் கண்டான் ராமாநுஜம். அதைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு மேலும் ஏகாக்கிரமாகப் பேசலானான்.

"அசாத்தியப் பணக்காரர்கள் இவர்கள் எல்லாம். ஆனால் முழுக்க முழுக்க சோம்பேறிகள், போக்கிரிகள் மூன்று தலைமுறையில் கருமிகள் நெற்றி வியர்வை நிலத்தில் சொட்டச் சேமித்த பணம் இப்பொழுதுதான் சூரிய வெளிச்சத்திற்கு வருகிறது! முதலியாருக்குச் சரியான சகாக்கள் அமைந்திருக்கிறார்கள். அந்தக் கோஷ்டியில் ஆக்கூர் ஸ்டேஷன் மாஸ்டருக்குக் கூட ஒரு ஸ்தானம் உண்டாம். ரொக்கம் பூராவும் இப்பொழுதே கரைந்துவிட்டது. இன்று மாயவரத்திற்குக் கடன் வாங்கத்தான் போகிறார் என்று கேள்வி. நான் ஹரித்வாரத்திலிருந்து ராமேசுவரம் வரையில் சுற்றியிருக்கிறேன். சின்ன வயதிலே—இந்தத் தமிழ் தேசத்தைப் போலே வேறெங்கேயும் பணம் படைத்தவர்கள் இவ்வளவு சபலக்காரர்களாயும், இரக்கமற்றவர்களாயும் அற்பர்களாயும் இல்லை. அரிசிச் சாதம் தின்று தின்று மனிதத் தன்மையையே இழந்துவிட்டார்கள். புளியும் சேர்ந்துகொண்டு நம்மைப் படுகுழியில் ஆழ்த்திவிட்டது."

லக்ஷ்மிக்குக் கணவு வரவர ஸ்வாரஸ்யமாகத் தென்பட்டது. கணவன் வாயிலிருந்து கவிதை கிளம்புவதைக் கூடக் கண்டாள். அந்த மாதிரி ரிஷியாசிரமம் போன்ற இடமும் கடற் காற்றும் அரை வயிற்றுச் சோற்றுடன் அல்லும் பகலும் உழைத்து மாயும் மனிதனைக்கூட, கவி மயக்கம் கொள்ளச் செய்யுமோ?

வரம் கேட்பதற்கு அந்த அனுக்கிரக வேளைதான் சரியான சமயம் என்று ராமாநுஜம் தீர்மானித்தான். குழம்பு

வராததால் கைமேலே ஓடவில்லை. இலையில் சாதத்தை அவ்வளவு அழகாகப் பரிமாறிவிட்டுக் கதையைக் கேட்ட வண்ணம் அவன் எதிரில் உட்கார்ந்துவிட்டாள் லக்ஷ்மி—விக்கிரக அழகுடனும் விரையும் மனதுடனும்.

"சாதம் ஆறிப் போகிறதேடி! கொஞ்சம் சாம்பார் பரிமாறேன்?" என்று மெல்ல ஆரம்பித்தான் ராமாநுஜம்.

லக்ஷ்மி, தேவதை ஸ்தானத்திலிருந்து குதித்தாள் கீழே.

"சாம்பாரா! இன்னிக்கு விருந்தா? சாம்பார் சாம்பார்னு ஏன் இப்படி அடிச்சுக்கிறேள்? இப்பத்தான் தெரியறது. சாம்பார்ப்புளிதான் ஜனங்களை இப்படிப்புளிப்பு கொள்ளச் செய்துடுத்து நீங்க சொன்னாப்போலே."

இரண்டாம் பாடம்.

"சாம்பார்! விருந்தோ இன்னிக்கி! இன்னும் சாமானை எறக்கல்லே, சரியாக் குளிக்கல்லே புது வீட்லே பொங்கின சோறு கிடச்சாப் போறாதா? புருஷாளெல்லாம் பொம்மண்டாட்டிகள் மிருகங்கள்னு நினைக்கறு"

அவளுடைய கண்களில் ஒரு விபரீதமான வெறுப்பும் முகத்தில் ஒரு ஏக்கமும் தென்பட்டன. சாம்பார் கேட்டதால் வந்த கோபம் அல்ல அது என்பது தெரிந்தது. எடுத்ததற்கெல்லாம் அவளுக்கு எரிச்சல் ஏற்பட்டது. தனிமை அவளுக்குத் தாங்க முடியவில்லை. அவளுக்குக் குழந்தை இல்லை.

தங்கள் இன்பத்திற்கிடையே வந்த அந்தக் கசப்பின் காரணம் ராமாநுஜத்தின் ஊகத்திற் கெட்டியது இயற்கைதானே? ஒரு மகத்தான தெய்வக் கட்டளைக் கிணங்கித் தானே மனிதன் மாதை நேசிக்கிறான்?

வெகு நேரம் இருவரும் வாயடைத்துப் போய் உட்கார்ந்திருந்தார்கள்.

4

லக்ஷ்மி நடுத்தர உயரம்; கார்வையும் குழைவும் கொந்தளிக்கும் தேகம். தங்க ரேக்குப் போன்ற சாயலும் அதுவுமாக அவள் அப்பழுக்கின்றி இருந்தாள். வளைந்த புருவமும், உயர்ந்த நெற்றியும் எடுத்த 'மூக்கும் விழியும்' ஓர் உயர் குடிச் சாயலை அவளுக்கு ஏற்றின.

அவள் பிறந்த தென்னவோ ஓர் ஏழைக் குடும்பத்தில். அந்த நிலைமையில் அவளுடைய பொற்பு ஒரு பெரிய விபரீதமாக இருந்தது.

தஞ்சாவூரில் செல்வவந்தரான ஒரு மகாராஷ்டிரப் பிராமணரிடம் அவளுடைய தகப்பனர் காரியஸ்தராக இருந்தார். சம்பளம் மாதம் ஐந்து ரூபாயும் பத்து கலம் நெல்லும் என்றாலும் அவர் தான் உண்மையில் வீட்டு நிர்வாகஸ்தராக இருந்தார். நாகரிகமும் நயமும் நிறைந்த அந்த உயர்ந்த குடும்பத்தின் நடுவில் லக்ஷ்மி பத்தாவது வயது முடிய வளர்ந்தாள்.

பெரிய குடும்பம் திடீரென்று கவிழ்ந்தது. ஏற்ற வருவாயின்றி எப்பொழுதும் போல தான தர்மங்கள் தாட்டாக நடந்தன. மூன்று முக்கியமான தாவாக்களில் அவர்கள் கட்சி தோற்றது. யஜமானனைப் போல லக்ஷ்மியின் தகப்பனும் மனமுடைந்து இறந்தார். அவளுக்குக் கலியாணம் செய்துவிட்டுத் தாயாரும் இறந்தாள்.

ராமாநுஜம் அவளுக்கு தூரபந்துதான். ஏழை, கலியாணத்தின்போது அவன் துடியாகக் காலேஜில் படித்துக் கொண்டிருந்தான். பிறகென்னமோ திடீரென்று அவன் போக்கு மாறிற்று. பூகோள சாஸ்திரத்தில் பெரும் மோகமுண்டு அவனுக்கு. அதனாலோ என்னவோ ஊர் சுற்றக் கிளம்பிவிட்டான். கையில் ஒரு காசில்லாமல் இந்தியா முழுவதும் சுற்றினன். சாதுவேஷம் பூண்டால் ரயில்வே அதிகாரிகள்கூடச் சரியென்று விட்டுவிடுகிறார்களே! டிக்கட் 'கலக்டர்' வந்து டக்கென்று பென்ஸிலைத் தட்டிக் கையை நீட்டும்போது திருநீறு பூசித் திருமணிமாலை உருட்டிக்கொண்டிருந்தால் 'தொலைந்து போ!' என்று போகிறார்கள் அல்லவா?

இந்த ஊர் சுற்றும் வாழ்வு எப்படியோ திடீரென்று முடிவடைந்தது

ராமாநுஜத்துக்கு. புதிதாக வேலைக்கு வந்த இளம் ஏ. டி. எஸ். ஒருவர் இந்தப் போலிப் பரதேசியை மதுரையில் கண்டு பிடித்துவிட்டார். ராமாநுஜத்தினுடைய இவ் வாழ்க்கைக் கதையைக் கேட்டு இரங்கி அவர் அவனை மாயவரத்தில் ஒரு டிக்கட் கலக்டராக நியமித்தார். அவன் உடனே மனைவியைக் கூட்டிக்கொண்டு வந்து குடித்தனம் வைக்கவேண்டியது என்பது நிபந்தனை.

டிக்கட் கலக்டராகவும் ஸிக்னலராகவும் ராமாநுஜம் ஊக்கமாக வேலைசெய்து நல்ல பெயர் வாங்கினான். சொன்ன சொற் படி குடித்தனமும் வைத்தான். ஆனால் லக்ஷ்மி எல்லா அம்சங்களிலும் தனக்கு மேலானவள் என்பதை அவன் முதல் நாளே அறிந்தான்—எந்த மனிதனும் அண்டக்கூடாதவள் என்றே எண்ணி விட்டான். மலையில் உதித்து உயிரற்ற வேகத்துடன் பிரவகித்து வரும் மகாநதிக் குப் பக்கத்தில், எங்கோ கண்ணுக்குத் தெரியாத இடத்தில் ஊற்றெடுத்து வரும் ஒரு சிறு ஓடை போலத் தன்னை நினைத் துக்கொண்டான். மட்டு மரியாதையின் மேலோங்கிய கரையை உடைத்துக் கொண்டு அப் பெரு வெள்ளத்தில் தன் பேதை அன்பைக் கலக்கப் பயந்தான். அவளுடைய கைகளின் சிரிய முனைகளை யும் மனத்தில் மேவிய மாற்றங்களையும் இயற்கையாக அனுசரித்துப் பணிந்து பக்கத்தில் பதுங்கிச் சென்றால் போது மென்று தேர்ந்தான்.

ஆனால் மாயவரத்தில் அவன் ஒரு முக்கியமான பலனை அடைந்தான். கலா சாலைக் காலத்தில் அவனுக்கு இருந்த புத்தகப் பித்து புத்துயிர்பெற்றது. லக்ஷ்மிக்கும் படிப்பில் ஆசை யிருந்தது என்ற ஒரே ஆறுதல்தான் அவனுக்கு. புத்தகங்களைப் பகலிரவாகப் படித்தான். நல்ல வேளையாக அந்த ஸ்டேஷனில் 'ஹிக்கின் பாதம்ஸ்' புத்தகசாலை இருந்தது. அதன் விற்பனை குமாஸ்தா அவன் நண்ப னாகிவிட்டான். புத்தகங்கள் முக்கியமாகப் படிக்கிறவர்களுக்குத்தானே ஒழிய, விற் பனைக்காக அவ்வளவல்ல என்ற அவன் அபிப்பிராயத்தை குமாஸ்தாவும் கைக் கொண்டவன். புத்தகம் வாங்குகிறவர்கள் எங்கே படிக்கிறார்கள்?

மாயவரம் ஜங்க்ஷனில் இருந்த பெரு மித வேலையும் இராத் தூக்க மின்மையும் அவனுக்கு அலுப்பாகிவிட்டன. ஐந்து வருஷங்கள் அங்கே பலனின்றி வாழ்ந் தது அவனுக்குப் பிடிக்கவே இல்லை. மாயவரம்—தரங்கம்பாடி கிளைப் பாதை போட்டதும் ஆக்கூரின்மேல் அவன் கண் விழுந்தது—லயனிலேயே எல்லோருக்கும் அதில்தான் கண். ஆக்கூரின் அமைதியான சூழ்வில் லக்ஷ்மியின் உள்ளத்தைக் கவர் ந்துவிடலாமென்பது அவன் எண்ணம். ஆனால் முதலிலேயே முட்டுக்கட்டை விழுந்தது.

வாழ்க்கையின் பல பாதைகளில் அவ னுக்கு முதல்தரமான ஒத்தாசை கொடுத்த பல குணங்கள் அவனிடம் உண்டு. நைசி கம்தான் அவன் கருவி. ஓங்கி அடிக் கும் நேரிடைச் சக்தி அவனுக்குக் கிடை யாது. தந்திரத்தாலேயே தன் காரி யத்தை அவன் சாதித்துக் கொள்ப வன். லக்ஷ்மியின் முன் அநேகமாக இந்தச் சூழ்ச்சியை இரட்டைப் படியாக்கி னான். அதில்தான் காரியம் கெட்டுவிட் டது. பெண்களுக்கு இந்தத் தந்திரத் தைக் கண்டாலே பிடிக்காது. ராமாநுஜம் கூட அதைப்பற்றி மலிவுடன் கீழ்த்தர நாவல்களில் படித்திருந்தான். ஆனால் தனது நடை முதல் வாழ்க்கையில் அவ னால் தன் இயற்கையை மீற முடியவில்லை. தன் உயிர் ரத்தத்தில் ஊறிப்போன அந் தச் சூழ்ச்சி சுபாவத்தை அவனால் மீறவே முடியவில்லை.

அதன் பலன்: அன்று ராமாநுஜம் இலைமுன் உட்கார்ந்து குழம்புக்காகக் காத்துக்கொண் டிருந்தான்; லக்ஷ்மி பக் கத்தில் உட்கார்ந்துகொண்டு தன் அழ கிய முகத்தின் ஒளி முழுவதையும் ஒரு 'ஸர்ச்லைட்' போல அவன்மேல் பாய்ச்சிக் கொண்டிருந்தாள்.

நேரம் கழிந்தது நிம்மதியின்றி; அந்த நுட்பமான நெருக்கடியும் தளர்ந்தபா டில்லை.

5

8. நெ. வண்டி தரங்கம்பாடியிலிருந்து 13-வது நெம்பராகத் திரும்பிக் கைகாட்டியருகில் கதறிக்கொண் டிருந்தது. இஞ்ஜின் ஊதலின் சத்தம் பழிபோலப் பதறும் சிற்றத்துடன் பொங்கி வந்தது. சிதறிய சோற்றைச் சேர்த்துப் பிசைந்த வண்ணம் சாம்பாரை எதிர்பார்த்துக்கொண் டிருந்தான் ராமாநுஜம்; முதல் ஊதல் கேட்டவுடனே கோபத்தில் சோற்றை வாரி இரைத்துவிட்டு வண்டியை உள்ளேவிட ஓடினன்.

கிளைப் பாதையில் கால நிர்ணயமே கிடையாதா இழவு? நினைத்தபோது முன்னும் பின்னுமாக வருகிறார்கள்! இனிமேல் இருக்கட்டும் சொல்லுகிறேன்! அந்த அயோக்கியப் பயல் கரியன் எங்கே தொலைந்தான்?', என்று உரக்கக் கத்திக்கொண்டே ஸ்டேஷனுக்கு ஓடினன்.

ஸ்டேஷனுக்கே கரியன்தான் உயிர் நிலை. வண்டிகளின் போக்குவரத்தே அவன் தயவில்தான். அவனுக்கு அன்று வீட்டில் தொல்லை. நன்ருகக் குடித்துவிட்டு அன்று வீட்டுக்குப் போனன். பட்டிக்காட்டான் எவனே எடைக்குமேல் ஒரு மூட்டை கொண்டுவந்து விட்டான். கரியனுக்கு எட்டணு அதிக வரும்படி. வெள்ளைக் குதிரை சவாரியில் கரியன் என்ன செய்வான். தள்ளாடிக்கொண்டே வீடுபோய்ச் சட்டிப்பானைகளையும், பெண் சாதி மண்டையையும் உடைக்க வேண்டியது தானே? அவனுக்கும் சோறு கிடைப்பதில் தகராறு. வழியில் கள்ளுக்கடை இருந்ததால் அந்த வார வரும்படி வீடுபோய்ச் சேரவில்லை. வீறிடும் வண்டிச் சத்தத்தைக் கேட்டதும் அவனும் விழுந்தடித்து ஓடிவந்தான்.

ராமாநுஜத்துக்கு அசாத்திய கோபம்.

"அயோக்கியப் பயலே, எங்கேபோய்த் தூங்கினுய்?"

"தூக்கமா! இல்லை யஜமான், விழித்துக்கொண்டேதான் இருந்தேன். வீட்டில் கொஞ்சம் தகராறு—சோறு தயாராக இல்லை—வீட்டுக்காரியை அடித்தேன். வண்டிக்கு நேரமாகல்லே யஜமான்? சும்மா கத்தட்டும். டிரைவர் குடிச்சுப்பிட்டு—"

"சோறு கிடைக்க, வீட்டுக்காரியை அடித்தாயா கரியா?"

அந்த மாதிரி காரியம் எப்படி நடக்கக் கூடும் என்று ராமாநுஜம் திகைத்தான். ஆனல் வண்டி வீச்சென்று கத்திக்கொண் டிருக்கும் போது சாப்பாடு கிடைக்கக் கரியன் கையாண்ட முறையைப் பற்றித் தத்துவ விசாரணை செய்ய நேர மெங்கே?

"சரி, போ, கையை இறக்கு! பாயின்டுகளெல்லாம் சரியாக இருக்கின்றனவா என்று பார்த்துக்கொள்!" என்ருன் ராமாநுஜம்.

ஏனென்ருல் இரண்டாவது லயனில் மணலடிக்கும் வண்டிகளில் சில காலியாக நின்றன.

மயங்கி விழுந்து கொண்டே கரியன் கையை இறக்கப் போனன்.

"கரியா, கரியா, குடி மயக்கத்தில் இருக்கிருய்போலிருக்கிறது. ஜாக்கிரதை லயனில் விழுந்து விடாதே! பாயின்டுகள் பத்திரம்" என்று ராமாநுஜம் கத்தினன்.

"யாருக்குக் குடி மயக்கம்? எனக்கா? இல்லவே இல்லை. டிரைவர் அல்ல குடிச்சிருக்கான்!" என்று கரியன் தனக்குள்ளே உறுமிக்கொண்டு போய்க் கையை இறக்க முயன்ருன்.

"எறங்கடி, தேவடியா மகளே! இல்லாட்டி அவ மண்டையெ வுடச்சாப்போல ஒன்மொகரையைப் பேத்துப்பிடுவேன், தெரியுமா? சனியன் வேலையிலே நிமிசம் நிம்மதி கிடையாதா?" என்று கர்ஜித்தான் கரியன்.

கை இறங்கினதுதான் தாமதம். நெ. 13 தடதடவென்று கிளம்பி வந்தது.

அறையைத் திறந்து அப்பொழுது தான் உள்ளே நுழைந்தான் ராமாநுஜம். சட்டையையும் கொடியையும் கூட அவன்

இன்னும் கையில் எடுக்கவில்லை. வழியி லிருப்பதை வெட்டி எறிய விரும்புவது போல் இன்ஜின்கள் இடித்துக்கொண்ட பயங்கரமான சத்தம் கேட்டது. இரண் டாம் லயனில் நின்றிருந்த காலி வண்டி கள் கோத்த இஞ்ஜினுடன் நெ. 13 மோதிக்கொண்டு பாதையை விட்டுக் கீழே சாய்ந்தது.

ராமாநுஜம் இடி விழுந்து நின்றான். பிறைச்சந்திரன் பெரிய மேகத்தி லிருந்து வெளிக் கிளம்பிக்கொண் டிருந்தது.

நல்ல வேளையாக உயிர்ச் சேதம் ஒன்று மில்லை. வண்டியில் முதலியார் கோஷ்டி யைத் தவிர வேறு யாருமில்லை. முதலி யார் பிரயாணியாக வரவில்லை. அவசரத் திற்கு அருகில் டிரைவரை நிறுத்திக் கொண்டு முதலியாரே இன்ஜினை ஓட்டி னார். தனக்குச் சொந்தமானது போன்ற லயனில் தானே வண்டியை ஓட்டுவதில் அவருக்கு ஒரு திருப்தி.

அந்த ஆபத்து வேளையில் லக்ஷ்மி தன் தனிப் போக்கை யெல்லாம் தூர எறிந்தாள். வீட்டில் மூண்ட மோதல் களுக்கு அவ்வளவாக முகம் கொடுக்காத வள் கண்ணெதிரி லிருந்த கோலத்தைக் கண்டு திடுக்கிட்டாள் — இரும்பும் பல கையும் விளைந்தும் சிதறியும் குவிந்து கிடந்தன! கணவன் பக்கத்தில் ஸ்டே ஷன் பிளாட்பாரத்தில் நின்ற அவள் முகத்தில் கவலை சந்திரன் மேலிருக்கும் சிறு மேகம்போ லிருந்தது.

ஆமாம், அன்றென்னவோ மாலை முதலே எதிர்த்தாக்கலின் இடிச் சின்னங் களே தென்பட்டன.

நல்ல வேளை, வீட்டில் கிளம்பிய புயல் வெளியில் போய் ஓய்ந்தது!

வாழ்க்கையைச் சிதைக்க வந்தது வெறும் இரும்பையும் மரத்தையும் சிதைத்து விட்டுச்சென்றது, கடவுள் புண்ணியத்தால்!

வாஸ்தவம்தான். மாலை முதலே அன்று மோதலின் அபாயக் குறிதான். ஈசுவர கிருபையால் தறுதலை ரயில்களும் காலி வண்டிகளும்தான் சேதமாயின. முதல் இயக்கத்தில் மூளைந்திருக்கும் இரு இளம் உயிர்களை அது ஒன்றும் செய்ய வில்லை.

6

ஒரு வருஷம் சென்றது. தரங்கம்பாடி மாயவரம் கிளைப் பாதையை கடைசி முறையாகப் பரிசோதித்துவிட்டு அதில் இனிமேல் வண்டிகள் வேகமாகப் போக லாம் என்று சொல்லிவிட்டார் ரயில்வே சீனியர் இன்ஸ்பெக்டர். போக்குவரத்து அவ்வளவு குறைவாக இருந்த அந்தக் கிளையில் விபத்து எப்படி ஏற்பட்ட தென்றே அவருக்குப் புரியவில்லை. முதலியாரின் மேன்மைக் கையின் தூண் டுதலின்றியே அந்தத் தறுதலை வண்டி இன்னும் அதிக வேகத்துடனும் உற்சா கத்துடனும் ஊதிக்கொண்டே போயிற்று.

எதிர்த்தாக்கலின் இறுதியில் நிகழ்ந்த பலன்கள் பல. ராமாநுஜத்துக்கு தென் னிந்திய ரயில்வே உத்தியோகம் போயிற்று. ஆனால் ஆக்கூரில் அதிகமா கிக்கொண்ட குழந்தைகளுக்கு ஒரு திண் ணைப் பள்ளிக்கூட வாத்தியார் கிடைத் தார். ஆக்கூரின் முதல் ஆரம்பப் பாட சாலையில் காரியன் முதல் ப்யூனுகவும் தோட்டக்காரனுகவும் ஆனான். இரண்டா யிரம் வருஷங்களுக்கு முன்பு சோழன் கரிகாலனின் உன்னத மாளிகை உயர்ந்து நின்ற அதே இடத்தில்தான் அந்தப் பள் ளிக்கூடமும் நின்றது.

கடற்காற்று எப்பொழுதும் போல திவ்யமாக அடித்துக்கொண் டிருந்தது. ஆக்கூரில் கோவிலுக்கும் குளத்துக்கும் அருகிலிருந்த தென்னந் தோப்பில்தான் அந்த அழகிய குடிசை. ஆற்றங் கரையில் கும்பலாகத் தெரியும் வாழை மரங்கள் போல மணல் மேட்டில் நின்ற ஸ்டேஷன் கட்டிடம் அங்கிருந்து பார்த்தாலே தெரி யும்.

தென்னந் தோப்பின் நடுவில் மண் சுவரும் மண் தரையும்கொண்டதொரு சிறு புதுக்கூடம். மண் பூச்சு மினுமினு வென்று பளிங்குபோல் இருந்தது. அது தான் புதுப் பள்ளிக்கூடம். தென்னங் கீற்றுக் கூரை; சுற்றிலும் மூங்கில்

பிளாச்சு வேலி. வெட்கமும் பயமும் கொண்ட குழந்தைகள் போல எங்குப் பார்த்தாலும் அணிற்பிள்ளைகள் ஓடியாடிக்கொண்டிருந்தன. பெண்களும் பையன்களுமாக இருபது குழந்தைகள் அந்தப் பள்ளிக்கூடத்தைச் சிறியதொரு ஸ்வர்க்கமாக்கினார்கள். குழந்தைகளின் கொண்டாட்டக் குரல்கள் கொந்தளித்துக் கிளம்பிப் பட்சிகளின் பாட்டுக் குரல்களுடன் கலந்தன; மரத்துக்கு மரம் பறக்கும் கிளிகள் பாடல் கற்கும் குழந்தைகளின் புது மொழிகளுக்கு எதிர் சொல்லின. அந்த இளங் கோலாகலத்திற் கெல்லாம் மேல் ராமாநுஜத்தின் குரல் புதுத் தெளிவுடனும் தேர்ச்சியுடனும் எழுந்தது. கிளை வண்டித் தொடர்களையும் வணங்கா வேலைக்காரர்களையும் கால அட்டவணைக் கேற்பத் தூண்டியவன் இப்பொழுது சிறு குழந்தைகளைச் சீர்ப்படும் பாதையில் தூண்டிக்கொண்டிருந்தான். அந்த இடமே ஒரு திருப்தியிலும் அமைதியிலும் லயித்திருந்தது. ராமாநுஜத்தின் முகத்திலே ஒரு புது ஒளி பூத்திருந்தது.

பள்ளிக் கூடத்திற்குச் சற்று தூரத்தில் அவன் வீடு. காட்டுக் கோவிலில் பிரதிஷ்டையான வனதேவதை போல லக்ஷ்மி அதில் விளங்கினாள். பச்சைப் பட்டுப் புடவை யொன்று வெயிலில் உலர்ந்துகொண்டு வெற்றி நாளின் விழாக் கொடிபோல காற்றில் படபடத்துக் கொண்டிருந்தது. பிறந்து ஒரு மாதம் தான் ஆன குழந்தையை மூங்கில் தொட்டிலிலிட்டு, ஆட்டிக்கொண்டே சமயலையும் 'சுருக்க சுருக்க'ச் செய்துகொண்டிருந்தாள் லக்ஷ்மி. தனியாகத் ததேவத்தியானமாகப் புருஷன் பாடம் புகட்டும் பள்ளிக் கூடத்தின் பக்கம் அடிக்கடி அவள் பார்ப்பது தானும் அங்கே சென்று அவனுக்கு உதவிசெய்ய எண்ணினளோ என்று தோன்றிற்று. அவளுடைய பத்ம நேத்திரங்களில் பூர்ணமான சாந்தி பிரகாசித்தது; அந்தக் குடிசை சுகிருத நிலையமாகத் தென்பட்டது.

காலை நேரத்து வேலை முடிந்ததும் ராமாநுஜம் வீட்டிற்கு வந்தான்.

"உங்களுக்கு ரயில்வேலை செய்து வைத்தாரே அந்த ஏ. டி. எஸ். பெயர்?" என்று லக்ஷ்மி கேட்டாள்.

"ஏண்டி?"

"குழந்தைக்கு அவர் பெயரை வைப்போமா?"

"நடராஜன்! உன் யோசனை ரொம்ப நியாயம்."

"முன் பின் தெரியாத அந்தப் புண்ணியவானுக்கு நம்முடைய நன்றியைச் செலுத்துவோம். அது ஈசுவரனுக்குத் திருப்தியாக இருக்கும்."

ஏகாக்கிரமான மௌனம் வெகு நேரம். ஒருவர் மற்றொருவர் உணர்ச்சியில் ஈடுபட்டார்கள். குழந்தை நடராஜன் அவர்களுடைய வாழ்க்கையை ஒரு விந்தையாக மாற்றிவிட்டான். பால் குடிக்கும் பச்சிளங் குழந்தை தாய்க்கு ஒரு பொன் ஸ்பரிசம்.

வண்டிகள் மோதிக்கொண்ட காரணமாக அவர்களுக்குக் கடவுள் அளித்த வரம் நடராஜன்.

கடவுள், விதவிதமாக, எதிர்பாராத விபரீதமாக, மக்களுக்கு மகிழ்ச்சி தருகிறார், சந்தேகமில்லை.

<u>ஒரு வேண்டுகோள்</u>

"பாரதமணி"க்குச் சந்தா அனுப்பாமல் பாக்கி வைத்திருப்பவர்கள் தயவு செய்து உடனே தங்கள் சந்தாவை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

"பாரதமணி" காரியாலயம் நெ. 295, லிங்க செட்டித் தெருவிலிருந்து மயிலாப்பூர், நெ. 12, பிருந்தாவனம் தெருவுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. "பாரதமணி"யின் சந்தா நேயர்களும் மற்று முள்ள அன்பர்களும் கவனிக்க வேண்டுகிறோம்.

மானேஜர் : "பாரதமணி" காரியாலயம்,
12, பிருந்தாவனம் தெரு, மயிலாப்பூர், சென்னை.

தரித்திரம் என்?

[டாக்டர். பி. எஸ்: லோகநாதன் எம். ஏ.]

கொஞ்ச நாட்களுக்கு முன் தமிழ் நாட்டில் பலவிடங்களில் பாரதியார் நாளைக் கொண்டாடினோம். அவர் தம் அற்புதமான பாட்டுக்களில் நம் நாட்டிலிருந்து பஞ்சத்தையும் தரித்திரத்தையும் அடியோடு ஒழித்துவிடவேண்டும் என்கிறார். இனிமேல் ஒருவனுக்கும் பசியின் கொடுமையாவது அல்லது தேவையான துணி, வசதி முதலியவை இல்லாத குறைபாடாவது இருக்கக்கூடாது என்றும் வற்புறுத்துகிறார்.

இவ்வாறு கவிஞர் மட்டுமல்ல, பொருளாதார நூலிற் பயிற்சி பெற்றவர்களும் உலகத்திலிருந்து தரித்திரத்தை நீக்கி எல்லாரும் தமக்கு வேண்டிய முக்கியமான பொருள்களைச் சுலபமாய் அடையும்படி செய்யவேண்டும் என்றும், அப்படிச் செய்ய முடியும் என்றும் கூறியிருக்கிறார்கள். அந்தச் சாஸ்திரத்தை ஊக்கத்தோடு பலரும் கற்றுவருவது இதன் பொருட்டுத்தான்.

இப்பொழுது நாம் தண்ணீருக்கு விலை கொடுப்பதில்லை. தெருவிலும் பாலத்திலும் எவருக்கும் வரிகொடுக்காமல் நடக்கிறோம். அது போல் நமக்கு முக்கியமாய் வேண்டிய பொருள்களை ஏன் இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளக் கூடாது? சிறு குழந்தைகளுக்கு வேண்டும் பசுவின் பால், குழாய்த் தண்ணீரைப் போல் ஏன் வேண்டிய மட்டும் ஒவ்வொரு வீட்டிலும் கிடைக்கக்கூடாது? அரிசி பருப்பு முதலிய உணவுப்பொருள்களும், கட்டுவதற்கு ஆடைகளும், குடி இருப்பதற்கு வீடும் இவை யெல்லாம் எல்லாருக்கும் ஏன் சுலபமாயும் ஏராளமாயும் கிடைக்கும்படி (ஏற்பாடு) செய்யக் கூடாது? இது மட்டுமல்ல. வியாதி வந்தால் டாக்டர்கள் வந்து இலவசமாய்ச் சிகிச்சை செய்ய வேண்டும். அந்தச் சமயத்தில் நாம் வேலை செய்ய முடியாததினால் சர்க்காரே நமக்குப் பண உதவி செய்யவேண்டும். ஒரு குடும்பத்தில் சம்பாதிக்கும் திறமையுள்ள தலைவன் இறந்து விட்டால் அவன் குடும்பத்தைக் காப்பாற்றும் கடமையும், அக்குடும்பத்திலுள்ள குழந்தைகளுக்குக் கல்வி பயிற்றும் கடமையும் சர்க்காரைச் சேர்ந்த தாகவே இருக்கவேண்டும். சர்க்கார் இருப்பது இதன் பொருட்டேயாகும்.

இந்த முக்கியமான கடமைகள் எல்லாத் தேசங்களிலும் ஏன் செய்யப்படவில்லை? முக்கியமான காரணங்கள் இரண்டு. முதலாவது செய்யவேண்டும் என்ற உணர்ச்சியும் உறுதிப்பாடும் குறைவு. இரண்டாவது, அப்படிச் செய்வதற்குப் பொருள் வசதியின் குறைவு. பொருள் வசதியில்லையென்பதை நாம் எப்படி நம்பக்கூடும்? கொஞ்சகாலத்திற்கு முன்புதானே ஒரு ஊரில் ஏராளமான கோதுமையைச் சரியான விலைக்கு விற்க முடியவில்லை என்று எரித்தார்கள்? அதுபோல் தென் அமெரிக்காவில் பிரேஸில் என்ற நாட்டில் காப்பிக்கொட்டையை நாசமாக்கினார்களாமே? அவ்வளவு தூரம் போவானேன்? பக்கத்தில் மங்களூரில் கூட காப்பிக்கொட்டையை அயல் நாடுகளுக்கு அனுப்பமுடியவில்லையாம்; ஆகையினால் அரபிக்கடலில் கொட்டி விடலாமா என்று பலமாக ஆலோசனை பண்ணினார்களாம்? மேலும் அடிக்கடி யந்திர சாலைகளை நிறுத்தி லக்ஷக்கணக்கான ஜனங்களுக்கு வேலையில்லாமல் செய்வதோடு உற்பத்தியையும் குறைத்து விடுகிறார்களாமே! இவைகளெல்லாம் உண்மையாயிருந்தால் பொருள்கள் காணாது; ஆகையினால்தான் ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பதை எப்படி நாம் ஒப்புக்கொள்வது என்று நீங்கள் கேட்கலாம். கேட்பது நியாயந்தான்.

ஆனால் இந்த மாதிரி ஏதோ இரண்டொரு செயல்களை மனத்தில் நினைத்துக் கொண்டு பொருள்கள் ஏராளமாயுள்ளன, பஞ்சம் போய்விட்டது, என்று எண்ணலா

காது. சாஸ்திரப் பயிற்சி மிகுதியினு லும் வேறு நூதன அமைப்புகளினுலும் உலகத்தில் பொருள்களைத் துரிதமாய் அதி கப்படுத்தும் திறமை சென்ற நூற்றுண் டில் ஏற்பட்டது உண்மையே. அப்படி யிருந்தும் மனிதர்களுக்கு வேண்டியபடி பொருள்களைக் கொடுக்கத் தற்கால உற் பத்தி போதாது. நம் ஒவ்வொருவருக்கும் ஒரு மாடிவீடும், ஒரு மோட்டார்காரும், ஒரு ரேடியோ ஸெட்டும் இன்னும் நூற் றுக் கணக்கான சாமான்களும் வேண்டு மென்றால் எப்படித் தற்கால விளைச்சல் போதும்?

உலகத்தில் உண்டான விளைச்சலையும் வருமானத்தையும் எல்லா ஜனங்களுக்கும் சமமாகப் பிரித்துக் கொடுத்தால் எல்லா ருக்கும் வேண்டிய மட்டும் பொருள்கள் கிடையாதா? ஜனங்கள் கஷ்டப்படுவதற்கு முக்கிய காரணம் இப்பொழுது இருக்கும் அபார செல்வ வித்தியாசத்தினுலல்லவா? —என்று சிலர் நினைக்கலாம் உண்மை தான். எல்லா தேசங்களிலும் இந்த ஏற்றத்தாழ்வு மிகவும் அதிகமாய்க் காணப்படுகிறது. இங்கிலாந்தில் 100-க்கு 12-பேர்கள் அத் தேச வருமானத்தில் 100-க்கு 42 பங்கு எடுத்துக்கொள்கிறார் கள். பாக்கி 88-பேருக்கு 58 பங்குதான் கிடைக்கிறது. ஏழை இந்தியாவிலும் கூட அதே மாதிரிதான் பணக்காரர்களுக் கும் ஏழைக்கும் உள்ள சம்பந்தம். 100-க்கு 5 பேர்களுக்குத் தேசிய வருமானத் தில் 100-க்கு 35 பங்குவரை கிடைக் கிறது. மற்ற 95 பேர்களுக்கும் 65 பங்குதான் மீதி. இப்படிப்பட்ட நியாய மில்லாத பணப்பிரிவு தப்பு என்பது எல்லாரும் ஒப்புக்கொள்ளும் விஷயம். இதன் கொடூரம் அளவற்றது. ஒரு பக் கத்தில் சிலர் சோற்றுக்கு வழியில்லாமல் பட்டினி கிடந்து சாகும் நிலைமையை அடைகிறார்கள். மற்றொரு பக்கத்திலோ சிலர் பணத்தை என்ன செய்வது என்று தெரியாமல் துன்மார்க்கத்திலோ, அல்லது வேறு அனுவசியமான வழியிலோ செலவு செய்கிறார்கள். இத்துடன் இதன் கெடுதி முடியவில்லை. ஏழைகள் தங்கள் குழந்தை களுக்குத் தேக ஆரோக்யத்திற்கு வேண் டிய உணவைக் கொடுக்க முடியாததினு லும், படிக்க வைக்க முடியாததினுலும், அந்தக் குழந்தைகள் வாலிபர்களாகும் போது, தேகபலமும் படிப்பும் இல்லாமல் தங்கள் பெற்றோர்களைவிட ஏழையாகிறார் கள். இதனுல் தேசத்திற்கு உற்பத்தி யும் குறைவாகிறது.

ஆனுல் இவைகளை நினைத்து வருமானத் தைச் சமமாகப் பங்கிட்டால் ஏழைமைத் தனம் விசேஷமாகக் குறையாது. இந்தி யாவிலுள்ள வருஷ வருமானத்தை முப் பத்தெட்டுக் கோடி ஜனங்களுக்குப் பகுத் துக் கொடுத்தால் ஆள் ஒன்றுக்கு மாதத் திற்கு ரூ 6. தான் கிடைக்கும். ஒரு குடும்பத்திற்கு மாதம் 24 ரூ. இந்த 24 ரூ பாயைக்கொண்டு எவ்வாறு காலக்ஷேபம் பண்ண முடியும்? சாப்பிட மட்டும் காண லாம். மற்ற செலவுகளுக்குக் காணுது. எப்படி இமயமலையை இந்தியா முழுவதும் பரப்பினுல் ஒவ்வொரு இடமும் ஒரு அடி கூட எழும்பாதோ, அதுபோல் பணக் காரர்களுடைய பணத்தை யெல்லாம் எடுத்து எல்லோருக்கும் சமமாகப் பிரித் தால் ஒவ்வொருவருக்கும் மிகச் சிறிய தொகைதான் கிடைக்கும். நம் நாட்டை விட்டு வறுமையும் ஒழியாது.

நமது ஏழைமைத் தனத்துக்கு இன் னும் ஒரு காரணம் உண்டு. அடிக்கடி ஏழெட்டு வருஷங்களுக்கு ஒருதரம் நமது முதலாளிகள் தங்களுக்கு லாபம் கிடைக்க வில்லை என்று யந்திர சாலைகளை நிறுத்தி விடுகிறார்கள். அதனுல் அவைகளில் வேலை பார்த்துக்கொண் டிருக்கும் ஜனங்களுக்கு ஜீவன மில்லாமல் போவதுடன், பொருள் கள் செய்வதும் நின்று போய்விடுகிறது. அதே சமயத்தில் விலைவாசிகளும் தாழ்ந்து விவசாயிகளுக்கு வருமானம் குறைந்து அவர்களுடைய துன்பங்கள் அதிகரிக் கின்றன.

நாம் எல்லோரும் செழிப்பாயும், செல்வ முள்ளவர்களாகவு மில்லாம லிருப்பதற்கு முக்கியகாரணங்கள் மூன்று. ஒன்று நமக்கு விளைபொருள்களையும், மற்றும் சில சாமான்களையும் அதிகரிக்கச்

செய்யும் சக்திக்குறைவு. இரண்டாவதாக பொருள் நிலையில் மிகுந்த ஏற்றத் தாழ்வு ஏற்பட்டுச் சிலருக்கு ஐசுவரியமும், பலருக்குச் சொற்ப வருமானமுமாயிருப்பது. மூன்ருவதாக, அடிக்கடி யந்திரசாலைகளை ஏற்படுத்தி நடத்தும் முதலாளிகள் தங்களுக்கு நஷ்டம் வருகிறது என்று அவைகளை மூடி, லக்ஷக்கணக்கான ஜனங்களுக்கு வேலை யில்லாமற் செய்து ஜீவனத்தைப் போக்குவது.

இந்த மூன்று கேடுகளையும் நினைத்து சிலர் தற்கால நாகரிகத்தை ஒழித்து இனி எல்லாவிதமான முயற்சிகளும் சர்க்கார் தாங்களே கைக்கொண்டு நடத்தி வர வேண்டும் என்ற கொள்கையைப் பரப்புகிருர்கள். அதில் சில சிரமங்களும் ஆபத்துக்களும் உண்டு. அவ்வளவு தூரம் போகாமலே சர்க்கார் எவ்வளவோ செய்யக்கூடும். வியாபாரம் தொழிற் சாலை முதலியவைகளை முதலாளிகள் கையில் முழுவதும் கொடுத்துவிடாமல், முக்கியமானவைகளைத் தாங்களே எடுத்துக் கொண்டு நடத்தி வரவேண்டும். இப்பொழுது இந்தியாவில் தபால், தந்தி, சில ரயில் பாதை இவற்றை அவர்களே எடுத்துக்கொண்டு கவனிக்கிருர்கள். இது போல் அநேக விதமான தொழில்களை அவர்களே கைக்கொள்ள வேண்டும். அதிலும் முக்கியமாகத் தேச நன்மையின் பொருட்டு ஓராளுகையிலேயே இருக்க வேண்டிய தொழிற்சாலைகள் அனைத்தையும் அவர்கள் தங்கள் ஆட்சிக்குள்ளே வைத்துக்கொள்ள வேண்டும்.

தவிர, இனி அடிக்கடி வேலை நிறுத்தம் ஏற்படுவதைத் தடுத்து, சர்க்கார் தங்களால் இயன்றவரை ஜனங்களுடைய வருமானத்தை நிலவரமாக்க வேண்டும். நம் தேசத்தில் நாள் முழுவதும் வேலையில்லாமலிருக்கும் ஜனங்கள் கோடிக்கணக்காயிருக்கின்றுர்கள். பாதி நாள் வேலையுடைய ஜனங்களோ இன்னும் பலகோடி. இவர்களுக் கெல்லாம் வேலை கொடுத்து வருமானம் உண்டாக்குவதற்குத் தக்க ஏற்பாடுகளைச் சர்க்கார் செய்யவேண்டும்.

மற்றும் வரி வசூலிப்பதில் பணக்காரர்களின் மீது அதிக வரியிட்டு அதில் வரும் வருமானத்தை ஏழைகளின் நன்மைக்காகச் செலவிடவேண்டும். ஏற்றத் தாழ்வுக்கு முக்கிய காரணமான வாரிசு க்ரம சட்டத்தை மாற்றி, வாரிசு மாறும் போது தகுந்த வரியிட்டு, இரண்டு மூன்று தலைமுறைக்குப் பிறகு ஒருவனுடைய சொத்து அவன் சொந்தக் காரர்களுக்குப் போகாமல் பொது ஜனங்களுக்குப் போகும்படி செய்யவேண்டும். ஏழைகள் படிப்பதற்கு ஒரு விதமான இடையூறு மில்லாமல் எந்தச் சிறுவனும் எந்த வேலைக்கும் போகும்படி தக்க பயிற்சி பெறுவதற்குரிய சாதனங்களை அளிக்கச் சர்க்கார் தயாராயிருக்கவேண்டும்.

தவிர ஏழைகளுக்கு அவசியமான பொருள்களை வேண்டு மளவு உதவிவர சர்க்கார் தாமே தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும். அவைகளைச் சொற்ப விலைக்கு விற்று, அதில் ஏற்படும் நஷ்டத்தை வரியிலிருந்து எடுத்துக்கொள்ள வேண்டும். வியாதியினலோ அல்லது வேறு எந்தக் காரணத்தினலோ சொற்ப காலத்திற்கு வேலை யற்றிருப்பவர்களுக்குப் பணம் கொடுத்து உதவவும், மற்றும் வயது முதிர்ந்தவர்கள் சிரமப்படாமலிருக்க அவர்களுக்குப் பென்ஷன் கொடுக்கவும், இன்னும் இதைப் போன்ற பலவிதமான ஏற்பாடுகளும் செய்யவேண்டும்.

இனி தரித்திரம் என்ற வியாதியை நம் தேசத்தைவிட்டு ஒழித்து விடுவோம் என்று நாம் தீர்மானம் செய்துகொள்ள வேண்டும். பாரதியார் கூறிய "தனி மனிதனுக் குணவில்லையெனில், ஜகத்தினை யழித்திடுவோம்" என்ற வீரச்சொல்லை நாம் ஒரு நாளும் மறக்கலாகாது.

சிருங்கார நாடகம்

[வே. நாராயணன், எம். ஏ., எம். எல்.]

வால்மீகி ராமாயணம் ஆதி காவியம் என்ற பெயர் பெற்றது. புராண ரீதியிலே கதையை அமைக்காமல், வால்மீகி முனிவர் இராம கதையை காவிய ரீதியிலே அமைத்துள்ளதை இப்பெயர் குறிப்பிடுகின்றது.

காவிய ரீதியிலே இராமாயணம் சுந்தர காண்டத்தோடு முற்றுப் பெறுவதாகும். யுத்த காண்டம் கதைக்கு அவசியமான பாகம் என்றாலும், காவியத்திற்கு அது அவ்வளவு அவசியமான அங்கம் அன்று. நாடகங்களிலே கவிதையின் சிகரத்தை எட்டிப் பிடித்த அங்கத்திற்குப் பிறகு, சில நூல்களில் அதிகப்படியாக ஓர் அங்கம் சேர்க்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம் அல்லவா? அது போன்றது இராமாயணத்திலுள்ள யுத்த காண்டம்.

சுந்தர காண்ட முடிவிலே, அநுமான் பிராட்டியிடமிருந்து கொணர்ந்த சூடாமணியை இராமனிடம் கொடுக்கிறான். இராமனும் பிராட்டியை மீண்டும் மனைவியாகப் பெற்றவன்போல அகமகிழ்கிறான்; தான் 'ஸர்வஸ்வம்' என்று கருதும் தன் சரீரத்தை அநுமானுக்கு உதவுவானாகி, அவனைத் தழுவி மகிழ்கிறான். இதற்குமேல் கதையைச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. இராமன் லக்ஷ்மணனோடும் சுக்கிரீவனோடும் வானர சேனைகளோடும் எப்படியேனும் கடலைக் கடந்து இலங்கையை முற்றுகையிட்டு, போரிலே அரக்கர்கள் அனைவரையும் கொன்று பிராட்டியைச் சிறை மீட்பான்; யாதொரு சந்தேகத்திற்கும் இதில் இடமில்லை. "இதோ, லக்ஷ்மணனோடும் வானர சேனையோடும் கடலைக்கடந்து என் இராமன் என் தோளின்மேல் ஏறிக் கொண்டு அரக்கர்களைக் கொல்ல வருவதைப் பார்" என்றல்லவா அநுமான் பிராட்டியைத் தேற்றினர்? பிராட்டியும், இராமன் பதினாலாயிரம் அரக்கர்களையும் கரனையும் தூஷணனையும் போரிலே தன்னந் தனியனாய் எதிர்த்துநின்று அவர்களையெல்லாம் ஒரு நாழிகைப் பொழுதிற்குள் வீழ்த்தியதை நினைத்துப் பார்த்து அநுமானுடைய பேச்சிலே நம்பிக்கை வைத்தாள். "சீதையை மனைவியாகப் பெறுவதற்கு இச்சிலை கிடக்க, மலையேழையும் இருனே?" என்றனராம் சீதையைக் கண்ணுற்றவர்கள். அதுபோலவே, "சீதையை மீட்பதற்கு இக் கடல் கிடக்க, கடலேழையும் கடவானே?" என்று உறுதி கூறலாம் அல்லவா?

இனி, "சீதை கடலுக்கு அப்பால் இருக்கிறாள் என்று எனக்கு வருத்தம் இல்லை; அவள் அபகரிக்கப்பட்டாள் என்றும் வருத்தம் இல்லை. கடலை எப்படியேனும் கடந்து செல்லலாம்; அவளை அபகரித்த அரக்கனையும் அவனுடைய சேனையையும் கொன்று தேவியைச் சிறையினின்றும் மீட்கலாம். ஆனல் பிரிவிலே வீணாய்ச் சென்ற பொழுதைச் சிறிதளவேனும் மீட்க முடியாதே" என்று இராமன் வருந்துவதாக, யுத்த காண்டத் தொடக்கத்திலே கூறப்பட்டுள்ளது. இதனினின்றுங்கூட இராமாயணக் கவிதைக்கு யுத்த காண்டக் கதை தேவையில்லை என்று தெரிந்துகொள்ளலாம்.

உத்தம தம்பதிகள் சேர்க்கியிலும் பிரிவிலும் எப்படி இருப்பார்கள் என்பதைக் கவிதையின் வாயிலாக விளக்குவதே இராமாயணத்தின் முக்கிய நோக்கம். இராமாயணம் சிறந்ததோர் சிருங்கார நாடகம். கரன் முதலான ஆயிரக் கணக்கான அரக்கர்களைத் தனிப் போரில் இராமன் வீழ்த்தினன் என்றும் துந்துபியின் உடலைக் காற்கட்டை விரலால் பல யோசனை தூரம் எற்றியெறிந்தான் என்றும் மராமரங்கள் ஏழையும் ஒரு அம்பால்

(22-ம் பக்கம் பார்க்க)

பவன இறுக்கமும் பாழிடமும்

[ஆர். கே. விசுவநாதன், எம். ஏ., அண்ணாமலை நகர்]

பூமியைச் சுற்றிலும் பல மைல்கள் வரை காற்று மண்டலமே வியாபித்திருக்கிறது. இம் மண்டலமே பவனம் எனப்படும். இது ஒரு சதுர அங்குலத்திற்கு ஏறக்குறைய 15 பவுண்டு எடையுள்ள இறுக்கத்துடன் பூமியின் மேற்பரப்பிலுள்ள எல்லாப் பொருள்களையும் தாக்கி நிற்கின்றது. இந்த இறுக்கம் இடத்துக்கிடம் வேறுபடுகிறது. ஓரிடத்திலேயே இது காலப்போக்கில் மாறுபடும். இப் பவன இறுக்கத்தைச் சில பரிசோதனைகளினல் காட்டலாம். உதாரணமாக ஒரு சிறு கண்ணுடிக் குவளையைத் தலைகீழாகத் தண்ணீரில் அமிழ்த்தினல், நீர் மட்டம் வெளியிலிருப்பதைவிடக் குவளையினுள்ளே தாழ்ந்திருப்பதைக் காணலாம். குவளையினுள் அகப்பட்டிருக்கும் காற்றினது இறுக்கமே இடம் மட்ட வேற்றுமைக்குக் காரணமாகும். இப் பரிசோதனையைத் தவிர இன்னுமொரு பரிசோதனையும் பார்க்கலாம். இக் குவளையில் தண்ணீரை முற்றும் நிரப்பி அதன்மீது ஒரு மெல்லிய அட்டையை மூடித் தலைகீழாகக் கவிழ்த்து அட்டையை விட்டுவிட்டால் அது கீழே விழாமல் நிற்கும். குவளையிலுள்ள தண்ணீர் அட்டையைக் கீழே அழுத்த, புறத்திலுள்ள பவனத்தின் இறுக்கம் அட்டையை மேல்நோக்கி அழுத்துகிறது. பவனத்தின் இறுக்கம் அதிகமாகையால் அட்டை கீழே விழாமல் நிற்கிறது, இவ் விறுக்கம் பூஜ்ஜியமாயுள்ள இடம் பாழிடம் எனப்படும். இப்பாழிடத்தைப் பெறுவது சிரமமான காரியம். இதனல்தான் "இயற்கை பாழ்மையை வெறுக்கின்றது" (Nature abhors a vacuum) என்ற பழமொழி நமமிடை வழங்கி வருகின்றது. ஆனல் தற்காலம் நம்முடைய வாழ்க்கைத் துறைகளில் பலவற்றில் 'பாழ்மை' பயன்பட்டு வருகின்றது. உதாரணமாக, "தெர்மாஸ்" ஆருக்கலங்களிலும், எலெக்டிரிக் விளக்குகளிலும், ஆலைகளில் சர்க்கரையைச் சுத்தப்படுத்துவதிலும், ரயில் வண்டியை நிறுத்துவதிலும் பாழ்மையின் தன்மையை உபயோகித்து வருகின்றோம்.

1643-ம் ஆண்டிலே 'டாரிஸெல்லி' (Torricelli) என்னும் இதாலிய அறிஞரே முதன் முதலில் பாழிடம் ஒன்றை உண்டாக்கிக் காட்டினர். சுமார் ஒரு மீட்டர் நீளமுள்ள தொரு உறுதியான கண்ணுடிக் குழாயினுள் பாதரசத்தை முற்றிலும் நிரப்பி அதன் வாயை மூடிக்கொண்டு கவிழ்த்து, ஒரு கிண்ணத்திலுள்ள பாதரசத்தி னடியில் அதை முழுக்கி வாயைத் திறந்துவிட்டுக் குழாயைச் செங்குத்தாகப் பிடித்தார். குழாயிலுள்ள பாதரசம் முற்றிலும் நிரம்பி நில்லாமல் ஏறக்குறைய 77 செ. மீட்டர் உயரமே நின்றதைக் கண்டார். மேலும் ரசநிறையின் மேலுள்ள குழாயின் பகுதியில் எதுமின்றிப் பாழிடமாக இருப்பதையும் கண்டார். இவரே இதற்குக் காரணத்தையும் கண்டுரைத்தார். கிண்ணத்திலுள்ள பாதரசத்தின் பரப்பின் மீது தொழிற்படும் பவனத்தின் இறுக்கமே குழாயினுள் ரசநிறையைத் தாங்கி நிற்கிறதென்றும், ஆகவே பவன இறுக்கம் 76 செ. மீட்டர் உயரமுள்ள ரச நிரையின் எடைக்குச் சமம் என்றும் கூறினர். இக் குழாயிலுள்ள பாழிடத்தை டாரிஸெல்லியின் பாழிடம் என்று கூறுவார்கள்.

டாரிஸெல்லியின் ஆராய்ச்சியை அறியாமல் ஜெர்மனி தேசத்தில் "ஓட்டோ வான் கெரிக்" (Otto Von Guerike) என்ற விஞ்ஞானி இப் பாழிடத்தைப் பெற ஆராய்ச்சிகளைத் தனியே நடத்தினர். ஒரு மரப் பீப்பாய் முழுவதும் நீரை நிரப்பிக்கொண்டு அந் நீரை, ஒரு சாதாரண இறைவியினல் பீப்பாயினுள் காற்று

சிறிதும் புகாமல், வெளியேற்ற முயன்ருர். அது பலிக்காமல் போகவே மரப்பிப்பாய்க்குப் பதிலாகச் செப்புக் குவளை ஒன்றை எடுத்துக்கொண்டு ஆராய்ச்சியை நடத்தியபோது புறத்திலுள்ள காற்றிறுக்கம் தாங்காமல் குவளை வெடித்துவிட்டது. உறுதியான மற்ருெரு குவளையைக் கொண்டு அதனுள் பாழிடத்தை உண்டு பண்ணினுர். பின்னர் குவளை நிறையத் தண்ணீரை வைத்துக் கொண்டுதான் ஆராய்ச்சி தொடங்க வேண்டுமென்றில்லை என்று உணர்ந்ததோடு குவளையினுள்ள காற்றை மட்டுமே வெளியேற்றினுல் போதுமென்று அறிந்தார். இதற்காக ஒரு காற்று இறைவியை இயற்றினுர். அது அவர் பெயரால் இன்னும் வழங்கி வருகின்றது. இவரது ஆராய்ச்சிகளைக் கேள்வியுற்று அவற்றை அந்நாட்டு மன்னர் தன் முன் செய்து காட்டுமாறு இவரைக் கேட்டுக்கொண்டார். அப்போது இவர் செய்து காட்டிய பரிசோதனை "மாக்டிபர்க் கிண்ணங்கள்" (Magdeburg hemispheres) என்ற பெயரால் இன்னும் வழங்கி வருகின்றது. இவை ஒன்ருேடொன்று காற்றிறுக்கமாக மூடக்கூடிய இரண்டு கிண்ணங்களாகும். சாமானியமாய் அவற்றை மூடிவிட்டுப் பிறகு மிக எளிதாகத் திறந்துவிடலாம். அவர் அவற்றை மூடி ஒரு கிண்ணத்திலுள்ளதொரு துவாரத்தின் வழியாகக் காற்றை அவரது இறைவியைக்கொண்டு வெளியேற்றினுர். பின்னர் அத் துவாரத்தை மூடிநிற்கும் திருகினுல் இறுக்கமாக அதை மூடிவிட்டுப் பிறகு கிண்ணங்களைப் பிரிக்க ஒவ்வொரு பக்கத்திற்கு எட்டுக் குதிரைகளைப் பூட்டி இழுக்கச் செய்தார். மிகுந்த சிரமப்பட்டுக் கிண்ணங்கள் படார் என்ற சப்தத்துடன் விலகியதை அரசர் முதலானவர்கள் கண்டு திகைத்துப்போனுர்கள். புறத்திலுள்ள பவனத்தின் இறுக்கத்தினுலேயே இக் கிண்ணங்களைப் பிரிக்கக்கூடவில்லை என்று அவர் கூறியதும் அவர்களின் வியப்பு இன்னும் அதிகரித்தது. இவ்வாறு டாரிஸில்லி, கெரிக் அடைந்து காட்டிய பாழிடத்தைத் தற்காலம் வெகு சீக்கிரத்தில் அடைய அநேக வகை இறைவிகள் இயற்றியுள்ளார்கள்.

இப்பொழுது பாழிடத்தின் தன்மைகளில் சிலவற்றைக் கவனிப்போம். முதன் முதலில் டாரிஸில்லி பாழிடத்தை உண்டாக்கிக் காட்டியதும் அக் காலத்து விஞ்ஞானிகள் பரிசோதனைகள் நடத்தி அதன் மூலமாக ஒலி அலைகள் செல்லவில்லை என்று அறிந்தார்கள். ஆனுல் அதன் மூலமாக ஒளி, வெப்ப அலைகள் செல்லக் கூடும். இதற்குச் சான்ருக நாம் சூரியனிட மிருந்து வெப்பத்தையும், ஒளியையும் அடைவதைக் கூறலாம். சூரியன் பூமியினின்று சுமார் 9 கோடி மைல் தூரத்திற் கப்பால் இருக்கிறது. ஆனுல் பவனமோ சில மைல் உயரத்திற்கு மேலே இருக்க முடியாது. ஆகையினுல் அதற்கப்புறம் பாழிடமாகத்தா னிருக்கவேண்டும். ஒளி, வெப்ப அலைகள் சுலபமாக இதைத் தாண்டி நம்மை அடைகின்றன. வெப்பம் இவ்வாறு பரவும் முறையைக் கிரணித்தல் (Radiation) என்பார்கள். வெப்பம் வேறு முறையில் ஓரிடத்திலிருந்து மற்ருெரு இடத்திற்குச் செல்லலாம். இதை உகைத்தல் (Conduction) என்பார்கள். இது பாழிடத்தில் நிகழ்வது சாத்தியமில்லை. இக் கருத்துத்தான் நாம் கையாளும் "தெர்மாஸ்" ஆருத கலங்களில் அடங்கியுள்ளது.

ஆருத கலத்தை முதலில் இயற்றியவர் "டிவார்" (Dewar) என்ற விஞ்ஞானி ஆவர். திரவப்படுத்திய வாயுக்களை ஏற்பதற்காக இதைச் சிருஷ்டித்தார். இக் கலம் இரட்டைச் சுவர் கொண்டது. இரண்டு சுவர்களுக் கிடையிலே உள்ள காற்று முற்றிலும் அப்புறப் படுத்தப்பட்டிருக்கும். அதாவது அது பாழிடமாகும். வெப்பம் பாழிடத்தின் மூலமாகக் கிரணித்தலினுல் சிறிது செல்லக்கூடு மாதலால், இதைக் குறைக்கச் சுவரின் உள் முகங்க ளிரண்டும் நன்ருக மெருகிடப்பட்டிருக்கும். இந்தக் கலத்தைச் சூழ்ந்து வைக்கப்பட்டிருக்கும் பஞ்சு, தூவி முதலி

யன இக் கலம் அதிர்ச்சியினுல் உடைந்து விடாமல் காக்கின்றன.

இப்பொழுது பாழ்மையைப் பயன் படுத்தி இயற்றியுள்ள மற்ருெரு சாதன மாகிய மின்சாரத் தழல் விளக்குகளைப் பார்ப்போம். ஒரு கம்பியின் வழியாக மின்னருவி பாயும்போது அது சூடேறிப் பழுத்துவிடும். இத்தகைய கம்பியைச் சூழ்ந்து ஒரு பாழிடத்தை உண்டாக்கி அதன் மூலமாகக் கம்பியிலிருந்து வெப்ப மும் ஒளியும் வருகின்றதை முதலில் "ஸர் ஹம்பிரி டேவி" (Sir Humphery Davy) என்ற விஞ்ஞானி அறிந்து காட்டினர். இக் கருத்தைப் பயன்படுத்தி வீடுகளில் உபயோகிக்கக் கூடிய வகையில் விளக்கு களைத் தயார் செய்ய விஞ்ஞானிகள் முன் வந்தார்கள். அவர்களில் முக்கியமாக "எடிஸன்" (Edison) என்பவரைக் கூற வேண்டும். அவர் பல கம்பிகளை எடுத் துப் பரீக்ஷை செய்து பார்த்தார். கரி இழையே சிறந்தது என்று அறிந்தார். இது சூட்டினுல் பஸ்மீகரித்து விடாதிருப் பதற்காக அதைப் பாழிடத்தில் வைக்க வேண்டிய அவசிய மேற்பட்டது. தற் காலம் (Tungsten) இழையே உபயோகப் பட்டு வருகின்றது. விளக்குகளில் "ஆர் கான்" (Argon) போன்ற ஜட வாயுக்களை நிரப்பி வைத்தால் இழைகள் இன்னும் உயர்ந்த சூட்டைத் தாங்குவதையும், அதிக ஒளியைத் தருவதையும் கண்டு, தற்காலம் குமிழினுள் ஜடவாயு ஒன்றை ஏற்கின் ருர்கள்.

நிற்க, எக்ஸ்-கிரணக் குழாய்களிலும், மின்னுருத் தாழ்களிலும் (Thermionic valves) பாழிடத்தின் தன்மை பயன் பட்டு வருகின்றது. உயர்ந்த பாழ்மை யுள்ள இடங்களிலே மின் பாய்ச்சல் ஏற் படும்போதுதான் குறைக் கதிர்கள் (Cathode rays) உண்டாகி, அக் கற்றை எதிர் குறைமுனை (Anti-Cathode) என் னும் பாகத்தை மோதும் போது, எக்ஸ்-கிரணங்கள் வெளிப்படுகின்றன. இக் கிரணங்கள் பதார்த்தங்களின் மூலம் ஊடுருவிச் செல்லும் இயல்பு வாய்ந்தது. இதனுல் இக் கற்றைகள் வைத்தியத் துறையில் பெரிதும் பயன்பட்டு வருகின் றன. தவிர ஒலிப் பதிவு முறையிலும் ரேடியோவின் செயல் முறையிலும் பிர தான அம்சமாக விளங்கும் மின்னுருத் தாழ் (Thermionic valve) பாழிடத்தைக் கொண்டுள்ளது. இதுபோல நாம் பல துறைகளில் பாழிடத்தின் தன்மையை உபயோகித்து வருகின்ருேம்.

(19-ம் பக்கத் தொடர்ச்சி)

துளைத்தான் என்றும் உருத்தெழு வாலி மார்பில் ஒரு கணை உருவ ஓட்டினுன் என் றும் இராமனுடைய வீரப் பிரதாபங்களை விரிவாக வர்ணித்ததின் நோக்கம் யாதெ னில், சுந்தர காண்டத்தில் பொங்கித் ததும்பும் சிருங்கார ரஸத்தின் சுவையினை இலங்காபுரிப் போரின் வர்ணனையாலும் இராவண சங்காரச் செய்தியாலும் கெடுக் கக் கூடாது என்பதே.

எனவே, இராமாயணம் என்னும் ஆதி காவியமானது சுந்தர காண்டத்தோடு முற்றுப் பெற்றது என்று கொள்வதே பொருத்தமாம்.

சுந்தர காண்டத்தை மட்டும் பாராய ணம் செய்யும் வழக்கம் இது காரண மாகவே எழுந்ததுபோலும்.

[இக்கட்டுரை ஆராய்ச்சியாகவோ, யுத்த காண்டம் வால்மீகி முனிவர் பாடிய தன்று என்று வாதிப்பதற்கோ எழுதப் பட்டதன்று. இராமாயணத்திலே பெருக் கெடுத்தோடும் கவிதா ரஸத்தை அனுப விப்பதற்கான மார்க்கங்களில் ஒன்றைக் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கம்.]

நமது தேசம்

[ராவ் சாஹிப் கே. சுப்ரமண்யம்]

ஒரு தேசம் மேன்மை யடையவேண்டுமானல் வியவசாயமும், கைத்தொழில்களும் நல்ல முதன்மை ஸ்திதியில் இருக்க வேண்டும். ராஜரீகம் சரியாகவும் படு வியாதிகள், பஞ்சம், கலகம் முதலிய துர்ப்பிக்ஷங்கள் இல்லாமலும் இருப்பதாக வைத்துக் கொள்வோம். முதலில் சொன்ன வியவசாயமும் கைத்தொழில்களும்தான் தேசத்திற்கு பக்ஷிகளின் இரண்டு இறக்கைகள்போல் ஆகாரத்திற்கும் செல்வத்திற்கும் ஆதாரமாகும். இவைகளின் பேரிலேயே ராஜரீகம், வர்த்தகம், ஜனசௌக்கியம், அறிவு வளர்ச்சி முதலியவைகள் சார்ந்து இருக்கின்றன. ஆனாலும் இவைகளும் சரியாக இருந்தால்தான் முன் சொன்ன இரண்டு ஆதாரங்களும் விருத்தியாகும். ஆதலால் ஒன்றுக்கொன்று ஒற்றுமையும் நேர்மையுமாகவும் நடக்க வேண்டும். எப்படி என்றல் நம்முடைய தேகத்தில் இருக்கும் முக்கிய அவயவங்களும் அதனதன் அங்கங்களும் உப அங்கங்களும் சரியாக நேர்மையில் இருந்தால்தானே தேக சௌக்கியம் என்று தெரிகிறது. இவைகளில் எதில் கோளாறுகள் ஏற்பட்டாலும் சரீர சுகம் குன்றிவிடுகிற தல்லவா? அம்மாதிரியே நம் தேசத்தின் அங்கங்களும் அவைகளின் உப அங்கங்களும் இவைகளில் எது சரியாக நடக்க வில்லை யானலும் மற்றவைகளைக் கொஞ்சமாகவோ அதிகமாகவோ பாதிக்கிறது. தவி, ஒரு தேசம் தன் ஆகாரத்திற்கோ அல்லது கைத்தொழில் சாமான்களுக்கோ மற்ற தேசங்களை நம்பியிருக்கக்கூடாது. தனக்கு வேண்டிய பொருள்களைத் தானே தயார் செய்து கொண்டால்தான் தேசம் மேன்மையடையும். சென்ற ஜெர்மன் யுத்தத்தின்போது இருந்த நிலைமையைக் கவனித்து அநேக தேசங்கள் தங்களுக்குவேண்டிய பொருள்களைத் தாங்களே தயாரித்துக் கொள்ள வேண்டும். மற்ற தேசங்களை நம்பி இருந்தால் கஷ்டம்தான் என்று தெரிந்து கொண்டு அதன் பிரகாரம் அநேகமாய்த் தயாரித்துக் கொண்டன.

அப்படி நம் தேசமும் ஏதாவது முன்னேற்றம் அடைந்ததா என்றுபார்ப்போம். மற்ற தேசங்களோடு ஒத்திட்டுப் பார்ப்போமானல் நம் தேசம் மிகவும் சீர்கேடான நிலையில் இருக்கிறது. அநேக தேசங்களின் விளைவுகள் நமது தேசத்தை விட அநேக மடங்கு அதிகம். மேலும் அந்தந்த தேசங்களில் வியவசாய ஆராய்ச்சியால் இன்னும் அதிகமாக விளைவுப் பொருள்களை உற்பத்தி செய்திருக்கிறார்கள். நம் தேசத்தின் நிலைமை முன் நிலைமையை விட பூமி விளைவுத் திறமை முன்னேற்ற மடைந்ததாகத் தெரியவில்லை. ஆனல் நமது ராஜாங்கத்திலும் ஒரு விவசாய இலாகாவும் அநேக சிப்பந்திகளோடு அநேக நாட்களாய் வாழ்ந்துகொண்டுதா னிருக்கிறது. அதற்காகும் செலவுகளும் தேசம் கொடுத்துக் கொண்டுதானிருக்கிறது இந்தசெலவுக்குத் தகுந்த பிரதிபலன் வரிகொடுக்கும் ஜனங்களுக்கும் தேசத்திற்கும் கிடைத்திருக்கிறதா? தேசம் வரவர ஏழைமை ஸ்திதிக்கு வருவானேன்? ஏன் இவ்வளவு பிச்சைக்காரர்கள்? ஏன் அதிக வியாதிகள்? ஏன் அதிகச் சாவுகள்? ஏன் ஜன அசௌகரியம்? பலவீனம்? ஏன் எங்கும் தரித்திரம் தாண்டவ மாடுகிறது? இந்த ராஜாங்கத்தில் ஒரு முக்கிய அங்கமா யிருக்கும் விவசாய இலாகா என்ன விதமாய் மேன்மையும் விருத்தியும் ஆகும் வழியில் நடந்து கொண் டிருக்கிறது என்பது தெரியவில்லை.

நமக்குத் தெரிந்த வரையில் இந்த டிபார்ட்டு மெண்டுக்காரர்களால் முக்கியமான முன்னேற்றம் ஒன்றும் இல்லையென்றே சொல்லிவிடலாம்போ லிருக்

கிறது. அவர்களுக்கு இந்திய விவசாயிகள் பழைய வழியை விடாமல் பிடிவாதக்காரர்களாய் நடக்கிறார்கள். என்றும் நாங்கள் சொல்லும் மார்க்கத்தை அனுசரிக்கவில்லை யென்றும், அதனால்தான் மேன்மையடையாமல் கஷ்டப்படுகிறார்கள் என்றும் காரணம் சொல்லுகிறார்கள். சரி. புதிய வழிகளில் அவர்கள் சொல்லுவது (1) நல்ல பொறுக்கு விரைகள் உபயோகிப்பது (இதை ஒரு விவசாயியாவது ஆக்ஷேபிக்கிறதில்லை. நல்ல விரைகளைத்தான் உபயோகிக்கிறான்.) ஆழ உழ வேண்டும், அதற்குக் கட்டைக்கலப்பை உபயோகப்படாது. ஆகையால் இரும்புக் கலப்பைகள் ட்ராக்டர்கள் உபயோகிக்க வேண்டும். (சரி. ஆழ உழ வேண்டியது நியாயம்தான். இரும்புக் கலப்பைகள் மேல்தான். ஆனால் அந்த மாதிரி ஆழ உழவுகளுக்குத் தகுந்த இரும்புக் கலப்பைகளை இழுக்கத் தகுந்த மாடுவாங்கவும். போஷிக்கவும் சக்தி கிடையாதே. என்ன செய்வது? ட்ராக்டர்கள் வேலை செய்யத் தகுந்த விஸ்தீரண பூமிகள் சேர்ந்தாற் போல் இல்லையே. அதை வாங்கி உபயோகிக்கும் திறமையும், பொருளும் 'இல்லவே இல்லையே' என்று பூமிக்காரர்கள் சொல்லுகிறார்கள்.) பூமியின் விளைவுத் திறமைக்கு நல்ல எருப்போட வேண்டும். நாட்டுச் சாணி, இலை, தழைகள் முதலியவைகளோடு ரஸாயன எருக்களும் (Chemical Manures) சேர்த்து உபயோகிக்க வேண்டும். அதற்குக் குடியானவன் நாட்டெரு என்னமோ இருக்கிறதே அதை உபயோகப்படுத்திக்கொண்டிருக்கிறோம். இலை தழைகள் கிடைப்பது சுலபமாயில்லை. காட்டிலாக்காக்காரர்கள் தொந்திரவு இருக்கிறது. காசு இருக்கும் வரையில் ரஸாயன எருவும் உபயோகிக்கிறார்கள். அநேகர் பணமில்லாததினால் உபயோகிப்பதில்லை. அந்தச் சீமை எரு மூட்டைகளும் அதிக விலையாயிருக்கின்றன. அதற்குத் தகுந்த விளைவு இல்லை என்கிறான்.

அப்படியானால் நீங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்திக்கொண்டாவது அல்லது பாங்குகளிலிருந்தாவது கடன் வாங்கி இந்தச் சாதனங்களை வாங்கி உபயோகப்படுத்தலாமே. ஏன் செய்யவில்லை? "ஐயா பாங்கிகளில் வட்டிகளுக்குக் கடன் வாங்கலாம். ஆனால் வட்டியுடன் திருப்பிக் கொடுப்பதின் கஷ்டம் நாங்கள் அனுபவப்பட்டிருக்கிறோம். பாங்கியின் வட்டி பூமியின் விளைவுக்குமே லிருக்கிறதே தவிர குறைச்சலாயில்லை. மேலும் விளைவுகள் கால நிலையைப் பொறுத்ததாயிருக்கிறது. அதிவிருஷ்டி அனாவிருஷ்டி முதலிய கஷ்டங்களும் உண்டு. ஆகையால் விளைவு குறைந்தாலும் பாங்கியின் வட்டிக்கு யாதொரு தடங்கலும் இல்லாமல் வளர்ந்துகொண்டே போகிறதே இதனால் எங்களுக்கு மேன்மை ஏது?" என்கிறார்கள். இந்தப் பொருளாதார விஷயத்தைப்பற்றி நாங்கள் ஒன்றும் செய்வதற்கில்லை யென்று இந்த டிபார்ட்டுமெண்டுக்காரர் சொல்லிப் போவார்கள். இத்தோடு சரி-விவசாயி பழைய ஆசாமிதான், இந்த டிபார்ட்டுமெண்டினால் அவன் அடைந்த லாபம் மிகவும் சொல்பமே. ஆகையால் இந்த இலாக்காக்காரர்கள் நம் தேசத்தின் விவசாயிகளின் நிலையைப்பற்றி நன்றாய் ஆலோசித்து அவர்களின் பொருளாதாரத்திற்குத் தகுந்ததாக இருக்கும் விருத்தியாம்சங்களை ஆராய்ச்சி செய்து பிரகடனம் செய்ய வேண்டுமே யொழிய குறைக்குக் காரணங்கள் சொல்லுவதினால் பலனில்லை என்று அறிந்தால்தான் மோக்ஷம். இந்த இலாகாவில் அநேக பண்ணைகள் இருக்கின்றன. அதன் வரவு செலவுகள் மாதிரி ஒரு விவசாயின் பண்ணை இருக்க முடியுமா? இந்தப் பண்ணைகளுக்குக் கொடுக்கும் பணத்தை எல்லாம் சர்க்காரில் கடனாக வைத்துக் கொண்டு வட்டியுடன் திருப்பிக் கொடுக்க வேண்டியது என்றும். இந்தப் பண்ணை அதிகாரியும் சிப்பந்திகளும் அந்தப் பண்ணையின் வரும்படியிலிருந்தே பிழைக்கவேண்டு மென்றும் ஏற்பட்டால் இந்தப் பண்ணைகள் லாபகரமாயிருக்குமா என்பது யோசனை. இத்தனை நாள்

போனது போகட்டும். இனிமேலாவது நன்மை யுண்டாகுமா?

இதேமாதிரி யாகவே நம் ராஜரீகத்தில் (Industrial Dept) என்று தொழில் வளர்ச்சி இலாகா ஒன்றிருக்கிறது. இவர்கள் என்ன செய்திருக்கிறார்கள். செய்கிறார்கள் என்பது தெரியவில்லை. மற்ற தேசங்களில் தொழிற்சாலைகள் எத்தனையோ விதவிதமாக ஏற்பட்டிருக்கின்றனவே. அந்தந்த தேசங்களுக்கு வேண்டிய பொருள்கள், ஆயுதங்கள், ரஸாயனங்கள் போக்கு வரத்துக்கு வேண்டிய ஸாதனங்கள், உடை பொருள்கள், மருந்துகள் முதலிய அநேகம் செய்தும் பிறதேசங்களுக்கு ஏற்றுமதி செய்தும் பொருள் சேகரிக்கிறார்களே. நம் தேசத்தின் ஸ்திதி என்ன? இந்த தொழில் வளர்ச்சி இலாகா எங்கெந்த விதத்தில் தேசத்திற்கு அநுகூலம் செய்திருக்கிறது? என்பது கேள்வி: ஊசி முதல்கொண்டு நாம் வெளி நாட்டுச் சாமான்களையே நம்பியிருக்க வேண்டியதா யிருக்கிறதே' மற்ற தேசங்கள் எத்தனையோ பெரிய பெரிய இயந்திரங்கள், ரயில்வே என்ஜின்கள், கப்பல்கள், ஆகாய விமானங்கள், மோட்டார் வண்டிகள், மின்சார மெஷின்கள், ஆயுதங்கள், ரஸாயனப் பொருள்கள். விதவிதமான கப்பல்கள் முதலாக கணக்கில்லாத பதமான அவசிய வஸ்துகளையும் மற்ற அநேக சில்லறை தினுசு சாமான்களையும் செய்து நம் தேசத்திற் விற்று இந்த தேசத்தி லிருந்து லாபம் அடைகிறார்களே. இவை எல்லாவற்றையும்விட எவ்வளவோ விதமான சாதனங்கள் கம்பி இல்லாத் தந்தி தபால், அதற்கு வேண்டிய இயந்திரங்கள், குழந்தைகள் விளையாட்டு சாமான்கள் உள்பட வெளிநாடுகளி லிருந்துதானா வரவேண்டும்?

இவைகளை எல்லாம் பார்த்துக்கொண்டிருக்கும் இந்தத் தொழில் வளர்ச்சி இலாகாக்காரர்கள் கொஞ்சமாவது சுறுசுறுப்பாக இருக்கவேண்டாமா? இன்னும் தூக்கம்தானா? இவர்களை வளர்க்கும் ஜனங்களும் சர்க்காரும் கூட கவனிக்காமல் இருக்கலாமா? இன்னும் எத்தனை காலம் இந்த நாடு இப்படிப்பட்ட தாழ்ந்த நிலைமையி லிருப்பது? நீங்கள் இத்தனை நாளாய் லக்ஷக் கணக்கான பணம் நாங்கள் கொடுத்தும் வரியிலிருந்து சாப்பிட்டிருக்கிறீர்களே! இன்னும் சாப்பிட்டுக் கொண்டுமிருக்கிறீர்களே? மொத்தத்தில் என்னன்ன விதமாய் லாபம் செய்திருக்கிறீர்கள். சொல்லுங்கள் என்னால் என்ன செய்வார்கள். அநேகம்பேர்களுக்கு வெளி நாடுகளிலிருந்து பம்புகள், நெல்லெண்ணை மாவு மிஷின்கள் வாங்கிக்கொடுத்திருக்கிறோம். சில Technical பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தியிருக்கிறோம், பம்புக்கிணறுகள் போட்டிருக்கிறோம் தச்சு நெசவு தோல் வேலைகள் கற்றுக்கொடுக்க பள்ளிகள் ஏற்பட்டிருக்கிறது. அதைக் கவனிக்கிறோம் என்று சொல்லுவார்கள். இவைகளையும் மற்ற தேசங்களின் நிலைமைகளையும் கவனித்தோமானால் நாம் மிகவும் வெட்கப்படக்கூடிய நிலைமையிருக்கிறோம். நாகரிகமற்ற காட்டு மனிதர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோமல்லவா? அவர்கள் நாம் தானோ என்னமோ என்ற சந்தேகமே ஏற்படுகிறது. பெரியபெரிய சாமான்கள் செய்ய நமக்குக் கற்றுக் கொடுக்காமல் போனாலும் போகட்டும். தினசரி வேண்டிய சிறு சிறுசாமான்களுக்குக்கூடவா வெளிநாட்டுக் கப்பல்களை எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டும்? சாதாரணமான ஆணிகள் கீல்கள் படங்கள் தச்சன் கொல்லன் ஆயுதங்கள் பாத்திரம் செய்யத் தகடுகள் குடை செய்ய சாதனங்கள்கூடவா நாம் செய்ய முடியாது? நம் தேசத்தின் சீதோஷ்ணம் சரியாக இல்லையா? காற்றும் ஜலமும் முட்டுக்கட்டைகளாக இருக்கின்றனவா? இவர்கள் சிபார்சு செய்யும் மெஷின்கள் பம்புகளை அந்தந்த வியாபாரிகள் சரிவர பிரகடனங்கள் செய்து விற்றுக்கொள்ள முடியாமலா இருக்கிறார்கள்? ஆழ்ந்து யோசனை செய்யச்செய்ய துக்கம் அதிகரிக்கிறதே தவிர கதி மோக்ஷம் காண முடியவில்லையே! இன்னும் என்ன சொல்ல முடியும்.

இப்படி இந்த முக்கிய இரண்டு ஸ்தாபனங்களும் இருந்தால் தேசத்தில் தரித்திர

மில்லாமல் இருக்க முடியுமா? ஏழ்மைத் தனம் எப்படி நீங்கப் போகிறது? செல்வம், வியாபாரத்திற்கும், அறிவு வளர்ச்சிக்கும் மனிதன் தேக சௌக்கியத்திற்கும் ராஜாங்கத்திற்கும் முக்கிய மூலம் அல்லவா? அதில்லாமல் குறைந்தால் மற்றவைகள் க்ஷீணிக்குமே. நாட்டில் இருக்கும் ஜனங்களும், ராஜாங்கமும் அதன் சபைகளும் கவனிக்கவேண்டியது முக்கிய மல்லவா? சமாசாரப் பத்திரிகைகளைப் பார்த்தால், வெளி நாட்டு சாமான்களின் விளம்பரங்களையும், நம் நாட்டு விளம்பரங்கள் ஆகிய ஜோஸியத்தையும் தாழ்த்தும் ஒப்பிட்டுப் பார்த்தால் உலகத்தார் சிரிக்க மாட்டார்களா? பூர்வீக மகோன்னதமான நாகரிக பாரததேசம், இந்த மிகவும் விலை ஸாஸமான ஜோசிய 5 கேள்விகளோடும், லக்ஷ்மி தேவியை வசப்படுத்த 1-ரூபாய் தாயத்தோடு நிற்கிறதே! பரிதாபமாக இல்லையா? ஏன் என்று ஒவ்வொருவரும் கொஞ்சமாவது யோசனை செய்ய வேண்டாமா? ஏன் இப்படி தூங்கிக்கொண்டிருக்கிறீர்கள்? சுற்றுப் பாகத்தில் எல்லாம் சுறு சுறுப்பும் ஓட்டமும் பிடியுமா யிருக்கும்போது நீங்கள் ஏன் இப்படி சோம்பேறித்தனமாய்த் தூங்கிக்கொண்டிருக்கிறீர்கள். விழித்துக்கொள்ளுங்கள்! எழுந்திருங்கள்! முன் நடவுங்கள்! நாம் குறிவைத்த லக்ஷியம் அடையும் வரையில் திரும்பிக்கூட பாராதேயுங்கள்! இத்தனைநாள் போதும் நம் தரித்திரம்! தொழில் வளர்ச்சிகளுக்குத் தகுந்த பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துங்கள். அதற்கு சிஷ்யர்களைச் சேருங்கள். ஒவ்வொருவனும் அவனவனுக்கு வேண்டிய பொருள்களைச் சம்பாதிக்க சக்தியிருக்கும்படியாக கற்றுக்கொடுங்கள், அவர்கள் செய்த பொருள்களை ஆதரியுங்கள். நம் தேசத்தைப் பெருமைப்படுத்துங்கள்.

நோட்டீஸ்

சிதம்பரம் டி. மு. கோர்ட்டு

O. S. No. 200/1940

கன்னுப் படையாச்சி—வாதி

சிவபாக்கியம்மாள் வகையரு—பிரதிவாதிகள்

ஷை நெம்பர் 2-ம் பிரதிவாதி பக்கிரி படையாச்சிக்கு தெரிவிக்கிறதாவது,

வாதி அடமானக் கடன் பத்திரப்படி ரூ. 300-0-0 கிடைக்க தாவா செய்து 17-1-41ல் ஈரங்கி வைத்திருக்கும் விபரம் இதன் மூல்யம் உமக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சிதம்பரம், 11-11-40. (Sd) D. நரஸிம்மாசாரியார், வாதி வக்கீல்.

நோட்டீசு

மன்னார்குடி டி. மு. கோர்ட்டு

O. S. No. 176/1938.

மன்னார்குடி தாலுக்கா களப்பயினிலிருக்கும் விருப்பிள்ளை மகன் பிச்சக்கண்ணு பிள்ளை — வாதி

மன்னார்குடி தாலுக்கா மன்னிக்குமுண்டான் வட்டம் கர்ணாவூரிலிருக்கும் கருப்பன் வாய்க்காரன் மகன் மூக்கன் என்கிற குப்பன் வாய்க்காரன் — 3-ம் பிரதிவாதி

இந்த நெம்பர் வாதியால் பெந்தக டிக்கிரியில் கண்ட சொத்தை மதிப்பு ஏற்படுத்தவேணுமென்றும் ஏலத் தேதியில் வாதியாவது வாதிக்காக வாதி வக்கீலாவது ஏலம் கேழ்க்கவும் ஏலத் தொகையை டிக்கிரித் தொகையில் உள வடைத்துக் கொள்ளவும். மனு கொடுக்கப்பட்டு நோட்டீசு சர்வாகாததால் ஷை 3-ம் பிரதிவாதி கடைசியாய் குடியிருந்த இருப்பிடமாகிய ஷை கர்ணாவூர் கிராமத்தில் ஒட்டி சர்வுசெய்ய மனு கொடுக்க 21-1-41ல் ஈரங்கி போடப்பட்டிருக்கிறது. அன்று ஷை பிரதிவாதி ஷை கோர்ட்டில் ஆஜராகத் தவறினால் மனுப்படி உத்திரவு செய்யப்படும்.

S. ரேதுநாதய்யர், வாதி வக்கீல்.

பால்ய ஸ்நேகம்

["ரஸிகன்"]

நாங்கள் பட்டணவாஸமாய் முதல்முதல் குடித்தனம் இருந்ததது. அந்த ஊரி லுள்ள பெரிய தெருக்கள் ஒன்று. பல வர்ணத்தவரும் அதில் வசித்துவந்தார்கள். பலசரக்குக் கடைகளும், ஜவுளிக் கடை கள் இரண்டொன்றும், வெற்றிலை பாக்குக் கடைகளும், காப்பிக் கிளப்புகளும் நிறைந் திருந்தன. இடையிடையே வக்கீல்கள் வீடுகளும் உண்டு. அதற்கடையாளமாக அவ் வீடுகளின் முன்புறத்தில் தொங்கும் பெயர் வரைந்த கறுப்புப் பலகைகளுக்கும் காப்பி வியாபாரத்தைக் குறிக்கும் பலகை களுக்கும் வித்தியாசம் தெரியாமல் ஊருக் குப் புதிதாய் வரும் படிப்பில்லாத ஜனங் கள், ஒன்றை யெண்ணி இன்னொன்றில் புகுந்து, தர்ம சங்கடங்களுக்குள்ளாகி, இட்டிலி காப்பியை வேண்டிச் சென்றவன் வக்கீல்கள் வம்பிலும் அவர்கள் குமாஸ்தாக் கள் வலையிலும் சிக்கிக் கொள்வதும், வக் கிலைத் தேடிச் செல்பவன் பசியிருந்தாலும் இல்லாமற் போனாலும் கிளப்புக்காரனுக்கு அரைக்கால் ரூபாயாவது அவிழ்த்துக் கொடுப்பதும் சகஜமென்று அந்தத் தெரு வுக்கே ஒரு கியாதி யிருந்தது. ஆனால் இந்த விசித்திரங்களெல்லாம் அந்தக் காலத்தில் என் கவனத்துக்கு வரவில்லை. இரவு பகல் ஓயாமல் அந்தத் தெரு வழியே செல்லும் ஆயிரக் கணக்கான ஜனங்களையும் வண்டிகளையும் இதர வாகனங்களையும் பார்த்துக்கொண்டே வாழ்நாள் முழுவதையும் கழிக்கலாமென்று குக்கிராமத்தி லிருந்து புதிதாய் வந்த எனக்குத் தோன்றிற்று.

அதிகாலையிலேயே கொசுவின் பாதையா லும்,எங்கள் வீடு கூட்டிடியின் கெடியினாலும் தூக்கம் கலைந்து திண்ணையில் போய் உட் காருவேன். அதற்குள்ளேயே, ஒருவர், இருவராக அமங்கலிகளும் விருத்தர்களும் காவிரியில் ஸ்நானம் செய்துவிட்டுத்திரும்பி வந்து கொண்டிருப்பார்கள். ப்ராத ஸ்நான நியமத்தினால் மட்டும் அவர்கள் அவ்வளவு சீக்கிரம் ஆற்றுக்குப் போய் வந்தார்கள் என்று சொல்ல முடியாது. உதயமாய் விட்டால் மார்க்கட்டுக்கு வரும் கூடைக் காரிகளும், உடையார்பாளையம் காட்டி லிருந்து காசாங்கழிக் கட்டுகளை விறகுக்கு விற்கத் தூக்கிவரும் கீழ்ஜாதி யாரும், தெருக்கோடியிலுள்ள சாவடியி லிருந்து 6-மணிக்கு முக க்ஷவரம் பண் ணிக்கொள்ளும் எஜமான்களின் தயவை எதிர்பார்த்து அவசரமாய்ச் செல்லும் நாவிதர்களும், தீண்டாத வகுப்பினரும் ஜன நெருக்கமான அந்தத் தெருவில் சஞ் சரிக்க ஆரம்பித்துவிட்டால், தீட்டுப் படாமல் வீடு போய்ச் சேருவது அரி தென்றே அவ்வளவு சீக்கிரம் அவர்கள் ஆற்றுக்குப் போவது. அப்பொழுதும் யாராவது கண்முன் தென்பட்டால் அவன் தீண்டாதவனு அல்லவா என்று கூடப் பாராமல், "அடடே, அன்னண்டை போடா" என்று கையைத் தட்டிக் கூவி அவசரமாய்த் தெரு ஓரத்தில் ஒதுங்குவார் கள். அங்கே தம்பல முமிழ்ந்தும், இர வில் அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்கள் பலவித அசுத்தம் செய்தும், எச்சிற்கலை, கிழிந்த துணி முதலிய நிரம்பியும் இருக் குமாதலால் அவைகளை மிதித்தாலோ, மிதித்ததாக நினைத்துக் கொண்டாலோ ஆசார விரோத மேற்படவே, ஸ்நானம் பண்ணினவர்கள், பாவம், திரும்பவும் காவிரிக்குப் போய் முழுகி வரவும் நேரி டும். இதர சாதியாரும் இந்தப் பிராம் மணர்களையும் பிராம்மணஸ்திரீகளையும் கண்டு கிராமந்தரங்களில் விலகுவது போல் அவசரமாய் விலகுவதில்லை. சிலர் "என்ன, ரஸ்தா உங்களுக்குச் சொந்த மோ?" என்றுங்கூடக் கேட்பார்கள். இதைக்கேட்ட கிழவர்கள், 'காலங் கெட் டுப்போச்சு', என்று முணுமுணுத்துச் செல்வார்கள். வயதுமுதிர்ந்த ஸ்திரீகளோ கோபத்துடன், 'அட, அடுமாண்டு

போறவனே!' என்று ஆசிர்வதித்துப் பரபரப்புடன் நடப்பார்கள்.

இவ்வளவு உபத்திரவங்கள் குறுக்கிட்டும் காவிரிக்குப் போவதை மட்டும் நிறுத்தமாட்டார்கள். அந்த அழகு வாய்ந்த நதிக்கு அவ்வூரிலே விசேஷ மகிமை. காசிக்கும் வீசமதிகம் என்ற பெயர் பெற்று விளங்கின அந்த ஸ்தலத்தின் கௌரவத்திற்கு அந்தநதியே முக்கிய காரணம். துலாமாதம் ஒன்றில்மட்டும் ஸ்நானத்திற்கு வருபவர்களுக்குத் தேங்காய் பழம் விற்றுப் படித்துறை யோரத்திலுள்ள ஒரு கடைக்காரன் 10 வருஷத்தில் ரூ 10,000 சேர்த்துவிட்டா னென்ருல், அந்த ஆற்றின் பெருமையை விரித்துரைப்பது அனுவசியமன்றோ.

நான் அந்த வூரில் 10 வருஷம் வசித்தேன். வருஷத்தில் 4 தரம் - அதாவது, வருஷப்பிறப்பு, பிள்ளையார் சதுர்த்தி, சங்கராந்தி, சிராவண உபாகர்மம் இந்தப் புண்ணிய காலங்களில் —— என் மாமாவுடனும் வீட்டிலுள்ள மற்றவர்களுடனும் ஆற்றில் முழுகுவது வழக்கம். தனியாகவாவது, என் வயதொத்த மற்றப் பையன்களோடாவது ஆற்றுக்குப் போக விடுவதில்லை. மேற்குறிப்பிட்ட நாட்களைத் தவிர எப்பொழுதாவது நானும் என் பாட்டியுடன் நதியில் ஸ்நானம் செய்து வருவதாகச் சொன்னுல், 'ஆமாம், பன்னிக்குட்டிக்குச் சங்கராந்தி, காலை வேளையில் காவேரியில் போய்த் தொளைந்தால் படிப்பு சட்டுன்னு வந்து விடும்,' என்று என் மாமா அதட்டி மறுத்து விடுவார். ஆகையால் சாயந்திர வேளையில் அவர் கடைத்தெருவுக்குப் 'பேடா' போவது வழக்கமாகையால் அது சமயம் பார்த்துப் படித்துறையில் போய் உட்கார்ந்து ஆற்ருேரமாயுள்ள மண்டபத்திலிருந்தும் சமீபத்திலுள்ள பாலத்தின் கைப்பிடிச்சுவரிலிருந்தும் என்னிலும் சிறிய பையன்கள் அம்பு போடுவது போல் குதித்து மூழ்கி அலக்ஷியமாய்க் கிளம்பி மீன் குட்டி போல் நீந்துவதைக் கண் கொட்டாமல் பார்ப்பதில்; நானே அப்படிச் செய்தால் என்ன சந்தோஷமிருக்குமோ அவ்வளவு சந்தோஷம் அடைவேன். ஆனல் எங்கள் தெருவில் நீந்தத் தெரியாதவன் நான் ஒருவனே. இப்பொழுதும் ஓடும் தண்ணீரில் இடுப்புக்குக் கீழ் இறங்குவதென்ருல் பயந்தான்.

நித்யோற்சவம்,நித்திய மங்களம் என்று கொண்டாடப்படும் அந்த நகரத்தில் முக்கியமான விழாக்காலங்களை நான் வெகு ஆவலுடன் எதிர்பார்ப்பது வழக்கம். இதற்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவது ஓயாமல் தலையை நட்டுக்கொண்டு புத்தகத்தைப் படித்தும் சிலேட் பலகையில் கணக்குப் போட்டுக்கொண்டும் இருக்க வேண்டும் என்னும் திட்டம் அந்தக் காலங்களில் கொஞ்சம் மாற்றப்படும். ஆனல் ஏதோ சுதந்திரம் ஏற்பட்டுவிடும் என்று நினைக்க வேண்டாம். என் பால்ய சிநேகிதனை ஸபேசன் சகஜமா யனுபவித்து வந்த சுதந்திரம் எட்ட யிருந்து பார்க்கும் எனக்கு வியப்பை யளித்து வந்ததேயொழிய அத்தகைய சுதந்திரம் எனக்கும் உரிமை, நான் அதை அடைய வேண்டும் என்ற எண்ணம் பயமில்லாமல் என் மனத்தில்கூட நடமாடுவதில்லை. ஸபேசனுக்கு என்வயதுதான். தகப்பனில்லாப் பிள்ளை. தன் தாயாருடனும், தனக்கு ரொம்பப் பெரிய அண்ணனுடனும் சொற்பச் சொத்தின் வரும்படியில் காலக்ஷேபம் பண்ணிவந்தான். அவன் படிப்பில் சுறுசுறுப் புள்ளவன். உபகாரச் சம்பளம் பெற்றுப் படித்தான். நல்ல சாரீரம், சபைக் கோழை யில்லாமல் அழகாய்ப் பாடுவான். அந்த ஊர் மார்கழி மாஸ பஜனையில் அவன் முக்கியமான பாடகன். கண்ணுக்கு லக்ஷணமாயும், பேச்சில் சாதுரிய முள்ளவனுயு மிருந்ததால் அவனைக் கண்டு யாரும் பிரியப்படுவார்கள். அநேகமாய் எல்லா விதத்திலும் அவனுக்கு நான் நேர் விரோதமா யிருந்தும், படிப்பிலுள்ள சிரத்தையிலும் அச்சிறு வயதிலேயே அரிய பெரிய விஷயங்களைப் பற்றி ஓயாமல் வாதிப்பதிலும் ஒருவனுக்கு ஒருவன் பின்வாங்குவதில்லை. அதனல் எங்கள் நட்பு நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. பள்ளிக் கூடத்தில்

பாடம் நடக்கும் வேளை தவிர மற்றக் காலங்களில் மரப்பத்திகளின் நிழலில் உலாவிக்கொண்டும், மூன்றுவது மொட்டை மாடியில் கைப்பிடிச் சுவர்களின் நிழலில் படுத்துக்கொண்டும் மூச்சுவிடாமல் தற்கித்தும் கவிகளைப் படித்து அவைகளின் ருசியை ஒருவனுக்கு ஒருவன் எடுத்துக் காட்டியும், இந்த உற்சாகத்தில் அனேக நாள் நாங்கள் டிபன்கூடச் சாப்பிட மறந்திருக்கிறோம்.

ஸபேசனிடம் இதை யெல்லாம் விட முக்கியமாய் என் மனத்தைக் கவர்ந்த குணம் அவன் தைரியமும் ஊக்கமுமே. என்னைப் போலவே அவனுக்கும் 'பெப்பர்மெண்டு' வாங்குவதற்குக்கூட காலணு அகப்படுவது அரிது. இந்த வறுமையைப் போக்கித் தனவந்தர்களாகவேண்டுமென்ற தீர்மானம் எங்க ளிருவருக்கும் ஏக காலத்தில் உண்டாகவே, வேறு தொழில் ஒன்றும் தெரியாததால், பேனுக்கத்தியால் மெல்லிய நாலு மூலைப் படங்கான சிறு கட்டைகளின் நுனியில் எழுத்து வெட்டி 'ஸீல்'கள் தயாரித்து எங்கள் வகுப்புப் பையன்களுக்கு வியாபாரம் செய்வதென்று துணிந்து, பணக்கார வீட்டுப் பிள்ளை ஒருவன் பெயரின் முதலெழுத்துக்களை ஒரு சாயந்திரம் முழுதும் வேறெருவருக்கும் தெரியாமல் உட்கார்ந்து வெட்டி அதை அவனுக்குக் காட்டினோம். அவனும் அதை மையில் துவைத்துக் சுவற்றுச் சுண்ணும்பில் குத்தித் தன்பெயரெழுத்துக்கள் அச்சுப் போல் விழுவதைக் கண்டு எங்கள் கைலாகவதை மெச்சி அரையணு கொடுப்பதாக ஒப்புக்கொண்டான். அவ்வளவுதான் தாமதம், தலையில் எள்ளைக் கண்டு பிடித்த தடிப்பிரம்மசாரிபோல் மனக்கோட்டைகள் கட்ட ஆரம்பித்துவிட்டோம். இப்படி இரண்டு நாளாயிற்று. அனந்தராமன் காசு என்ற பேச்சையே எடுக்கவில்லை. அவனைப் பெரிய மனுஷனென்று கேட்காம லிருந்து பார்த்தோம். ஒன்றும் பிரயோசனமில்லை. மரியாதையாய் ஞாபகப்படுத்தினோம். அவன் தகப்பனர் ஊரி லிருப்பதாகவும், அவருக்குத் தெரியாமல் தாயாரைக் கேட்டுக் காசு வாங்கவேண்டி யிருந்தபடியால் நாங்கள் நாலு நாள் பொறுத்தால் வாங்கிக் கொண்டு வருவதாகவும் சொன்னன். 4 நாள் 8 நாளாயிற்று, பேச்சு மூச்சில்லை. ஸபேசன் இனி வழவழ வென்றிருந்தால் முடியா தென்று சொல்லி, அனந்தராமனை நெருக்க ஆரம்பித்தான். மறுநாளைக்குக் காசு வந்துவிட்டது. ஆனல் காலணுதான். சொன்ன சொல்லுக்கு விரோதமாய் இப்படிக் கூலியை குறைத்த காரணம் என்ன வென்று கேட்க, அனந்தராமன் 'எங்க ளம்மா அவ்வளவுதான் கொடுத்தா. இந்த நாறக் கட்டைக்கு அதுவே அதிகம் என்று என்னை வையராள்,' என்று சொன்னதோ டில்லாமல், தான் 'ஸீலை' அடுப்பில் போட்டு விட்டதாகவும், தன் தகப்பனர் ரப்பரால் செய்யப்பட்ட நிஜமான 'ஸீலை' வாங்கி வருவதாகச் சொன்னதாயும் பெருமை பீத்திக்கொண்டான். பணக்காரனின் திமிரையும், அவன் தயவை எதிர்பார்க்கும் இழிவையும், வியாபாரத்தின் ஓய்ச்சலையும் கண்ட நாங்கள் 'ஸீல்' செதுக்கும் வேலையை அந்த ஒரு அனுபவத்தோடு ஒழித்துவிட்டோம்.

எங்கள் வறுமையைக் குறிக்கவல்லவா இந்தச் சம்பவத்தைச் சொன்னேன். அந்த வறுமையைக் கூடச் ஸபேசன் லக்ஷியம் செய்வதில்லை. குப்பாசார் ளெப்பு என்று பிரசித்தி பெற்ற ஹோட்டலில் ஹல்வா போடும் தினங்கள் தவராமல் அவன் அங்கே ஆஜராவான். அந்த ஊர் பெரிய விஷ்ணு கோயிலின் மடப்பள்ளியில் தயாராகும் வெண் பொங்கல்—அரை மயிலுக் கப்பாலும் அதன் மணம் கமகமவென்று வீசும் —நிவேதனம் ஆனதும் முதல் முதல் அவன்தான் மாதிரி பார்ப்பான். திருவாசநல்லூரில் அய்யாவாள் உத்ஸவத்திற்கு முதல் நாள் இரவிலேயே கிளம்பி வெண்ணிலாவில் தன்னை யொத்தவர்கள் பலர் சூழ உல்லாசமாய் நடந்து, ஆடலும் பாடலும் சிரிப்பும் வழிபோவது தெரியாமலே அந்த ஸ்தலத்தை யடைவான்.

சுற்றிப் பத்து மயிலுக்கு அவன் பார்க்காத ஊரோ, விழாக்களோ கிடையாது. வண்டி, ரயில் முதலிய வசதிகள் எதிர் பார்ப்பதில்லை. சாப்பாட்டுக்கு சங்கீதத்தில் பிரியமுள்ளவனுக்கும், பாடத்தெரிந்தவனுக்கும் தஞ்சாவூர் ஜில்லாவில் பஞ்சமா? தவிர, ஸபேசனுக்கு முகவெட்டு அதிகம். பள்ளிக்கூடத்திலும் வகுப்பில் முதல் பெஞ்சிலேயே இருப்பதும் தவிர, யாராவது பெரிய மனுஷியாள் பள்ளிக் கூடத்தைப் பார்க்க வந்தாலும், பரிசளிக்கும் உற்சவ காலத்திலும், ஸபேசனே வாழ்த்துப் பாட்டுப் பாடக் கோரப் படுவான்.

ஸபேசன் சரித்திரத்தை இவ்விடத்தில் சுருக்கி யுரைத்தேனுயினும், நாங்கள் கீழ்ப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் காலத்தில் அவனுக்கு அவ்வளவு பிராபல்யம் ஏற்படவில்லை. தவிர, விழாக்காலங்களில் அவனேடு ஊரில் வேடிக்கை பார்க்கச் சம்மதித்து என்னை அனுப்பினுலும், அப்படி ஒரு நாள் போனதை என் மாமா பத்து நாளைக்குச் சொல்லிக் காட்டுவார். மறு நாளைக்குக் கணக்குப் பாடத்தில் 4 மார்க்குக் குறைந்து விட்டால், 'குல்லேரிப் பயல்களோடு ஊருசுத்தினுப் படிப்பெப்படி வரும்'' என்ற தீர்மானம் பிறக்கும். ஆகையால் ஸபேசன் வந்து கூப்பிட்டாலும், அனேகமாய் நான் அவனுடன் போவதில்லை. அவன் பார்த்து வந்த விநோதங்களைப் பிறகு பள்ளிக் கூடத்தில் அவன் முகமாய்க் கேட்டு நானே பார்த்தானந்தித்தது போல் எண்ணிக் கொள்வேன். அக் காலத்தில் இந்தக் கற்பனு சக்தியும் ஆகாசத்தை யளாவும் மனேபாவமும் இல்லாவிடில் நான் வெகு சிரமப்பட்டிருப்பேன். பொதுவாக, விழாக்காலங்களில் என் மாமாவின்நிர்ப்பந்தம்கொஞ்சம் குறையும். அவர் தாமே அடிக்கடி வெளியில் போக நேரிடுவதால் படிப்பு விஷயத்தில் ஓயாமல் என்னைக் கண்டனை தண்டனை பண்ணுவதற்கு அவருக்கு அவகாசம் இராது. தவிர, வீட்டுக்கு என் கிராமத்திலிருந்தும் பந்துக்கள் கிராமங்களிலிருந்தும் அக்காலங்களில் அநேக விருந்தாடிகள் வருவார்கள். அவர்கள் சௌகரியங்களைக் கவனிப்பதிலும், அவர்களுடன் ஊர்பார்க்கச் செல்லுவதிலும் எனக்குப் பொழுது ரொம்பச் சிலவாகும். இதற்காக நான் கொஞ்சமும் வருந்துவதில்லை. வீண்பொழுது போகிறதே யென்று கவலை யுறுவதற்கே இடைவெளி யிருந்தால் தானே.

வீட்டிலுள்ள ஜன நெருக்கத்தால் வெளியேபோன வேளைகள் தவிர மற்றக் காலங்களில் வாசல் திண்ணையிலேயே தான் காலக்ஷேபம்செய்வது. திண்ணையில் துலா மாஸத்தில் எங்கள் எட்டின பந்துக்களில் ஒருவர் கற்சட்டிகளும் மண் ஜாடிகளும் வியாபாரம் வழக்கமாய்ச் செய்து வந்தார். அவர் தொழில் முறைகளைக் கவனிப்பதிலும் அவர் சரித்திர சிரவணம் பண்ணுவதிலும் எனக்கு அலுப்பதில்லை. அவர் மாந்திரீகம் முதல் பரிசாரகம் வரையில் அப்பியசிக்காத வித்தை கிடையாது. அதிபால்யத்தில் வீட்டை விட்டு ஓடிப் போய் மலையாளத்தில் வெகுகாலம் சஞ்சரித்தவர். அதற்கடையாளமாக ஓயாமல் 'அடைக்கான்' கன்னத்தில் அடக்கிய வண்ணமிருப்பதோடு, 'தோரத்து' முண்டை அடைவளஞ்சான் கட்டுக் கட்டிக் கொண்டு, அச்சிமார்களின் சூழ்ச்சியையும் நம்பூதிரிகளின் பேதமையையும் பற்றி உபன்யசிப்பதில் அவருக்குள்ள ருசியையாரும் கவனிக்கலாம். தவிர, சயம்பாகம் பண்ணுவதில் —— வெகுகாலம் வரை கலியாணம் ஆகாமலிருந்ததால் — தேர்ச்சி பெற்றவர். அதிலும் துக்கடாக்கள் போடுவதில் ரொம்ப கைதேர்ந்தவர். ஒரு நாள் மத்தியானம் கற்சட்டிக் கடையை என்னை கவனித்துக் கொள்ளச் சொல்லி, எங்கள் சமயற்கட்டில் சென்று, என் மாமா சற்றுக் காரியம் செய்ய, காசி ஹல்வா தயாரித்து, நான் காவலிருந்ததற்காக எனக்கு ஒரு குத்து ஹல்வா கொண்டு வந்து கொடுத்தார். பனிக்கட்டி உருகுவதுபோல் என் நாக்கில் கரைந்து ஜில்லென்று உள்ளத்தைப் புளகிதமாய்ச் செய்த அந்த ஹல்வா இன்னும் என்

ஞாபகத்தில் இருக்கிறது. வெங்குவய்ய ரும் அவர் கற்சட்டிகளும் போய் வெகு காலமாகிறது.

'வெங்கு, கெட்டிக்காரந்தான். அதிர்ஷ்டந்தான் பஞ்சை' என்று என் பாட்டிச் சொல்வதற் கொத்தாப்போல், அவருக் குத் தன் வியாபாரம் மட்டும் கைகூடுவ தில்லை. பரம்பரைக் கற்சட்டிக்காரனை விடக் கற்சட்டிப் பரிக்ஷையில் தான் கை தேர்ந்தவன் என்று சொல்லிக் கொள்வார். ஆனால் அவர் விற்கும் கற்சட்டிக்களில் பாதிக்குமேல் ஓட்டை யென்றும், பொத்தல் என்றும், விறல் என்றும் சாயந்தரமே திரும்பி வந்துவிடும். அப்படித் திருப்பி விடும் பாட்டிமார்கள் கற்சட்டிக்காரன் களிடம் அம்மாதிரி செய்யத் துணிவார் களா? வெங்குவையரோ அந்தக் கற்சட்டிக்காரர்கள் மூடர்கள் என்றும், நாகரிக மற்றவர்கள் என்றும், ஸ்திரீகளிடத்திலும், மேன்குலத்தா ரிடத்திலும் மட்டு, மரியாதை காட்டுவதில்லை என்றும், அதனாலேயே அவர்களைக் கண்டால் தனக்குப் பிடிப்பதில்லை யென்றும், வேறு தொழில் அருசை இல்லை யென்றும் விஸ்தரித்துக் கூறுவார். பாட்டிமார்களோ இவருடைய மேன்மையைக் கண்டு மெச்சாமல் 2 காசு கூடக் கொடுத்து ஓட்டைக் கற்சட்டியை நூரு இடியும் வசவும் பட்டுக்கொண்டு கற்சட்டிக் காரனிடந்தான் வாங்குவார்கள். போதாததற்கு, 'என்ன யிருந்தாலும், யாராரு என்னென்ன தொழில் செய்யணமோ, அதைச் செய்தாத்தான் நன்னாருக்கு. இந்த பிராம்மணனுக்கு வியாபாரத்தோது தெரிய ரதோ பாரு,' என்று சொல்லிக் கொண்டு அய்யர் கடையில் 4 நாழிகை கொட்ட மடித்து விட்டு ஒரு பெருங்காயச் சிமிழ்கூட வாங்காமல் போவது வழக்கம்.

இனம்!

அழகிய கைக்கடியாரம்!

எங்களது 'ஜோஹ்ரிஹுஸன்'—(Johr-i-husan) (Regd.) என்று பெயர்பெற்ற மருந்து உங்கள் தேகத்திலிருக்கும் (எந்தப் பாகத்திருலிந்தாலும்) ரோமத்தைப் போக்கிவிடுகிறது. மயிர்வேண்டாத இடத்தில் இதை உபயோகிப்பதனல் அவ்விடத்தில் மயிர் வள்ராது. இந்த மயிர போக்கும் மருந்தை உபயோகிப்பதனல் சர்மம் பட்டுப்போல் மிருதுவான தன்மையை அடைந்துவிடுகிறது! விலை ரூ. 1-15-0

இந்த மருந்தைப் பிரசித்தியடையச் செய்வதற்காக ஒரு அழகிய கைக்கடியாரம் (**"Mute" Wrist Watch**) இனமாக ஒவ்வொரு புட்டி மருந்துடனும் அளிக்கப்படுகிறது. இந்தக் கடியாரம் உறுதியுடன் 10-வருஷங்கள் உழைக்கக்கூடியதென்று நாங்கள் உத்தரவாதம் அளிக்கிறோம். உத்தரவாத முடையது என்பதற்கு அத்தாட்சியாக ஒவ்வொரு கடியாரத்துடனும் உத்தரவாத ரசீது நாங்கள் தருகிறோம். மருந்து குணமில்லையென்று ரூபிக்கப்பட்டால் மருந்தின் விலையைத் திருப்பி யனுப்பிவிடுகிறோம். ஒரே தடவையில் மூன்று புட்டிகள் வாங்குபவர்கள் மூன்று கைக்கெடியாரங்கள் அடைகிறார்கள். அவர்களுக்குத் தபாற்கூலி வசூலிக்கப்படமாட்டாது!

SUKHDAYAK COMPANY,
Post Box No. 12, (D. 1283) AMRITSAR, (India.)

பொன் ஏர்

[கு. ப. ரா.]

முதல் மழை விழுந்ததும்
மேல்மண் பதமாகி விட்டது,
வெள்ளி முளைத்திடுது, விரைந்துபோ, நண்பா!
காளைகளை ஓட்டிக் கடுகிச்செல், முன்பு!
பொன் ஏர் தொழுது, புலன்வழிபட்டு,
மாட்டைப் பூட்டி
காட்டைக் கீறுவோம்!
ஏர் புதிதன்று, ஏறும் நுகத்தடி கண்டது,
காடு புதிதன்று, கரையும் பிடித்ததுதான்,
கை புதிதா, கார் புதிதா? இல்லை!
நாள்தான் புதிது, நட்சத்திரம் புதிது,
ஊக்கம் புதிது, வரம் புதிது!
மாட்டைத்தூண்டி, கொழுவை அழுத்து,
மண் புரளும், மழை பொழியும்,
நிலம் சிலிர்க்கும் பிறகு, நாற்றும் நிமிரும்,
எல்லைத்தெய்வம் எல்லாம் காக்கும், கவலையில்லை!
கிழக்கு வெளுக்குது!
பொழுதேறப் பொன்பரவும் ஏரடியில்
நல்லவேளையில் நாட்டுவோம் கொழுவை!

வைத்யம்

வரகவி.
திரு. அ. சுப்ரமண்ய பாரதி

தேக அவயவங்கள் முறை பிறழ்ந்த போது நாம் நோய்க்குள்ளாகின்றோம். அந் நோயைத் தீர்த்துக் கொள்வதற்கு வேண்டிய உபாயங்களைப் போதிப்பதே வைத்யமாம். சரீரம் பல அவயவங்கள் சேர்ந்த ஒரு மாமிச பிண்டம். கருவிகள் கெடுவதனால் யந்திரம் பழுதுறுவதுபோல் அவயவங்கள் கெடுவதனால் சரீரம் நோயினை யடைகிறது. சரீரம் நோயினால் மெலிந்து திடங் குன்றுமானால் அதன் முக்ய அம்சமும் அதனை இயக்குவது மாகிய உயிருக்கும் அபாயம் நேரிடுகின்றது. பிராணபாயம் நேருமாயின் சரீரம் அழிகின்றது. ஆதலினால் வைத்யம் வாழ்க்கைக்குரிய சாதனமாகின்றது.

நோய் என்னும் பகைவனிடம் அகப்பட்டவர் உலகத்தில் வாழ்வதிலும் உயிர் விடுவது மேலாகும். நோய்வாய்ப்பட்ட பேர்க்கு இவ் வுலகச் செல்வத்தாலேனும் மற்றும் பெண்டு பிள்ளைகளாலேனும் உலகத்துள்ள பொருள்களாலேனும் சுகம் கிடைக்குமா? அவர்களுக்கு இவை யெல்லாம் கண்களாற் காணவும் வெறுப்பைக் கொடுப்பனவா மன்றோ?

நம் தேசத்தவரால் அனுஷ்டிக்கப்பட்டு வந்த வைத்யமுறை அதி சூக்ஷ்மமானது. மந்த்ரம், யோகம், ஞானம் முதலிய வற்றைச் சாதகமாகக் கொண்டது. இதனை வட நூலார் ஆயுள்வேதம் என்பர். ஆகவே ஆயுள் வேதம் என்னும் வைத்யமும் வேதம் என்று தெரிகிறது.

வேதம் என்பது கர்மானுசாரப்படி புவியி லுதிக்கும் ஜீவர்கள் அறிவின் அபிவிர்த்தி யடைந்துய்யும் பொருட்டு ஸ்ரீ பரமேசுவரன் அவர்களிடம் கொண்ட கருணையினால் தாமே திருவாய் மலர்ந்தருளிய தெய்விக நூலாம். இது ஆதியந்த மற்றது. தெய்வமென்பது எப்போதுண்டாயிற்று? அதன் மூலமென்ன?—என்று விசாரிப்பின் அது எங்ஙனம் நமக்குப் புலப்படா திருக்கின்றதோ அங்ஙனமே வேதமுமாகும். வேதங்கூறும் விதி விலக்குகளை யறிந்து நடந்து பேரறிவு கைவரப் பெற்றவரே முத்தி என்னும் இன்பத்தை அடைகின்றனர். இது, விரிக்கிற் பெருகும்.

இப்போது நாம் வேதம் என்பது இத்தன்மையது என்று கண்டோம்; ஆயுள் வேதம் என்பது உபவேதம் என்றும் கண்டோம். கடவுள் செய்யும் அரிய செய்கைகளை அவருடைய அம்சமாக விளங்கும் மகனீயர்களும் செய்வர். இதனை ஆஸ்திகோத்தமர்களாகிய நாம் அநுபவத்திலே காண்கிறோம். நூற்கள் மூலமாகவும் படித்துணர்கிறோம். கடவுளின் செய்கைகளைச் செய்யக் கடவுளின் அம்சமுடையவர்களுக்குங் கூடுமன்றோ?

வேதம் எதை நமக்குத் தருகின்றது? நித்யா நித்ய வஸ்து விவேகமாகிய பேறிவை அளிக்கின்றது. அதனால் உலக பந்தம் என்னும் கொடியநோ யொழிந்து நாம் முத்தி என்னும் பரமபதத்தை அடைகின்றோம். வைத்யம் என்னும் ஆயுள் வேதம் உலகத்திலுள்ள பதார்த்தங்களின் குணத்தை உணர்த்துகின்றது; நம் நோய்க்குத் தக்கபடி அவற்றை உபயோகிக்கும் முறையையும் போதிக்கின்றது. ஆகவே அதுகொண்டு நாம் நம் சரீரத்தில் வாத பித்த ச்லேஷ்மங்களின் மாறுபாடுகளினால் நேரிடும் நோய்களைக் களைந்து சுகமடைகின்றோம்.

ஆகவே வேதம் பரமோத்தம மானதும் அழிவற்றதுமான சுகத்தையும் ஆயுர் வேதம் சரீர சுகத்தையும் தருகின்றன. இதனால் ஆயுள்வேதம் வேதத்தின் தன்மையை ஒருவாறு விளக்கி நிற்பதென்பது பெறப்படுகின்றது. அல்லாமலும் கவனிப்பின் சரீர சுகமில்லையானால் நாம் வேதத்தை யோதி யுணர்வதும் உணர்ந்தவா றொழுகுவதும் கூடாமை யென்பது மலை விளக்காம். இதனால் இக

பரசுக மிரண்டிற்கும் சரீர சுகமே முக்ய காரணமாகின்றது. இகபரசுகத்திற்குமுக்ய காரணமாகிய சரீர சுகத்தைக் கொடுப்பது ஆயுள் வேதமாகின்றமை யினுலேதான்—காயசித்தி யடைந்து அருந்தவம் புரிந்து அமலன் திருவடி சேர முயலும் யோகிகளும் சித்தர்களும் தமக்கு வைத்யத்தை ஆதாரமாகக் கொண்டு அதனைப் பரிசிலனை செய்து போதுமான மருந்துகளைக் கண்டு பிடித்து அவைகளைத் தாமுண்டு அநுபவித்து, உலகின்மீது கொண்ட கருணையினல் பரமேசுவரன் வேதத்தை அருளிய வாறு தமது அநுபவத்தை நமக்குதவியுள்ளார். ஆகவே நமது வைத்தியம் ஆங்கிலேயருடைய வைத்யம்போல் கேவலம் படிப்பினுல் மட்டும் வெளிவந்ததல்ல வென்ருயிற்று.

யோகிகள் தாம் தம் சரீரத்தைக் காப்பாற்றிக் கொள்ள வைத்யத்தைப் பரிசிலனை செய்துகொண்டு பிறகு காய சித்தி யடைவதற்கு யோகத்தை அப்யஸிக்கின்றனர். இதிலொரு இரகஸ்யம் கவனிக்கத் தக்கது.

வைத்யம் சரீரத்தின்கண் பொருந்தியுள்ள உறுப்புக்களை யுணர்த்தி அவற்றின் பாகு பாடுகளையும் அவை கெட்ட விடத்துச் சீர்திருத்தும் வழியையும் நமக்குப் போதிப்பதாம். யோகம் சரீரத்தினுட் பொருந்தியுள்ள இடகலே, பிங்கலே, சுழுமுனே முதலிய நாடிகள், ஆதார மண்டலங்கள், அங்கங்குள்ள தேய்வங்கள், அவற்றிற் குரிய யந்திர மந்திரங்கள் முதலியவற்றையும் செவ்வனே விளக்குவதாம். ஆகவே இவ் விரண்டுக்கும் சம்பந்தமுண்டா யிருக்கிறது. இவ்வாறே மந்திரமும் இவ் விரண்டிற்கும் உதவியாக நிற்கிறது. வைத்ய வழியில் தீராத நோய்களை மாந்த்ரீக மூலமாகத் தீர்ப்பதை நாம் பார்க்கிறேம். யோகமும் மந்திரத்தையே அனுசரித்து நிற்பதாம்.

இத்தகைய பெருமை யுடையது நம் வைத்யம். நம் வைத்யத்தை நாம் எங்கிருந்த போதிலும் செய்தல் கூடும். மலேயிலும் காட்டிலுங் கூடச் செய்யலாம். ஆங்கில வைத்யம் அப்படியல்ல. மேல் நாட்டிலிருந்து மருந்து வரவில்லையாளுல் இல்லை. அநேகமாக நமது வைத்யர்கள் மாந்த்ரீகம், சோதிடம், யோகம் முதலியன பயின்றவர்களாகவே இருப்பார்கள்.

பொருள் படைத்தார்க்குப் பணமே மருந்தாகையினுல் அவர்கட்கு நம் வைத்யத்தைப்பற்றிச் சிந்தை செலுத்த வேண்டிய அவசியமில்லை. ஏழைகளுக்குப் பாடே கஷ்டமாகின்றது. ஓர் அருகம் புல்லினுல் அளவற்ற நோய்களைக் குணப்படுத்திக் கொள்ளக் கூடிய முறைகள் நம் வைத்தியத்திலிருக்க, அதனைப் புறக் கணித்து டாம்பீகங்களுடைய வழியை அநுசரித்துக் கெடுகின்ருேம். இது மதியீனமா மன்ருே?

கடைசியாக நாம் கூறுவதொன்றுண்டு—

ஸ்திரீகள் கர்ப்பவதி யாவார்களாயின் அவர்கள் பிரஸவித்துக் குழந்தைக்குத் தாயாவது மறு பிறவியே யன்ருே? அது சம்பந்தமாய் விசேஷ கவனம் செலுத்த வேண்டியது ஆடவர்க் கேற்ற பெருங் கடமையே யன்ருே? இதனை மறப்பது போற் பெருங் கேடு தருவதுண்டோ உலகத்தில்?

இதற்கு நாம் செய்ய வேண்டுவதென்ன—

ஸ்திரீகளுக்கு அந்தச் சாஸ்திரப் பயிற்சி யேற்படுமாறு செய்து அவர்கள் அந்த வைத்யத் தொழிலைக் கையாண்டு வரப் பழக்க வேண்டியதே யாகும். வீணே அவர்கட்கும் பாட்டும் கூத்தும் போலிப் படிப்பும் கற்றுக்கொடுத்துச் சாரமற்ற வாழ்க்கை நடத்தும்படி செய்து அவர்களையும் தேசத்தையும் நாசஞ் செய்வது, உலக க்ஷேமத்திற் கேற்ற செயலாகுமா?

நமது வைத்யத்தில்—கர்ப்பவதிக்குரிய சிகித்ஸைகளைப் புகட்டும் பாகங்களிருக்கின்றன. இல்லையென் றெண்ணுவது ஆராய்ச்சிக் குறைவே யாம். அவைகளைக் கையாளுவா ரில்லாமற் போகவே —நாம் அவைகள் நம் வைத்யத்தில்

இல்லையென நினைக்கும் காலம் ஏற்பட்டிருக்கின்றது.

நமது வைத்ய மெல்லாம் தெய்வ பலத்தை ஆதாரமாகக் கொண்டதாகும். ஆதலால் வைத்யர்கள் கருணையை மேற் கொண்டவர்களாகவே விளங்குவர்; தவிர குருவின் உபதேச வழியில் நிலையாக விருந்து மருந்துகளைக் கையாளுந்தன்மை வாய்ந்தவரா யிருப்பர். இவர்கள் முயற்சியில் தெய்வ பலமும் சேர்வதால், இந்த வைத்யம் சிறந்த நிலையில் விளங்குவதா யிருந்திருக்கிறது. ஆராய்ச்சி செய்து தேச நலமடையப் பாடு படுவது நம் கடமை யென்கிற உணர்ச்சி நம்முள் பெருகுவதாக.

இனம்! இனம்! இனம்!

எது?

அழகிய கைக் கெடியாரம்

யாருக்கு?

ஒரே தடவையில் அடுத்தடுத்து ஆறு முறை வெடிதீர்க்கும் எங்கள் கைத் துப்பாக்கியில் ஒன்று வாங்குபவர்களுக்கு!

இந்தத் துப்பாக்கியினுடைய சத்தம் உண்மைக் கைத் துப்பாக்கியினுடைய சத்தம் போல் அவ்வளவு பலமாகக் கேட்கும். திருடர்களை இந்தக் கைத் துப்பாக்கியினால் அலற வைக்கலாம்! ஓர் அதிசய மென்ன வென்றால் இந்தக் கைத் துப்பாக்கி வைத்துக் கொள்ள லைசென்ஸ் பெற வேண்டிய அவசிய மில்லை.

விலை ரூ. 6-15-0 (35 தோட்டாக்களுடன்). தனியாக 1000 தோட்டாக்களுக்கு ரூ. 3-0-0. துப்பாக்கிப் பெட்டி (பெல்ட்டுடன்) ரூ. 1-12-0. கைத் துப்பாக்கி எண்ணெய் விலை 0-12-0. தபாற் கூலி பிரத்தியேகம்.

ஒரே தடவையில் மூன்று கைத் துப்பாக்கிகள் வாங்குபவர்களுக்கு ஓர் அழகிய கைக் கடியாரம் இனம். ஒரு துப்பாக்கி வாங்கினால் ஒரு கடியாரம் இனம், மூன்று துப்பாக்கி வாங்குபவர்களுக்குத் தபாற் கூலி யில்லை.

ANAND & Co.,

Post Box No. 27. (D. 1283) Amritsar (India).

அருள் ஒளி

[எஸ். சந்திரசேகர சாஸ்திரி-விசாரத்-விஷ்ணுபுரம் முத்திராதிகாரி]

கண்ணில்லாதவன் குருடன் அல்ல. கண்ணிருந்தும் இறுக மூடிக்கொண்டு உலகை யறியாதவன் குருடன். கண்களை நன்றாகத் திறந்துகொண்டு விழித்து நோக்குவதாக எண்ணி உண்மைப் பொருள் அறியாதவனும் குருடன். கண்களைத் திறந்துகொண்டோ, மூடிக் கொண்டோ எதிரிலிருக்கும் பிரகாசம் பொருந்திய தீபத்தைக் காணாதவனும் குருடனே. இவனே அஞ்ஞானி. இவனுடைய அஞ்ஞானத்தைப் போக்க—கண்கள் முன்னிலையில் படர்ந்திருக்கும் இருளைப் போக்கவும், உலகைப் பிரகாசப் படுத்தவும்—காணும் உலகில் பொய்யை உணரவும் செய்யக் கூடிய ஒரு அருள் ஒளி தேவை. இவ் வொளியே ஞானம். பல்லாயிரக் கணக்கான நாமெல்லோரும் அஞ்ஞான இருள் சூழ்ந்து மயங்குகையில் நான் கண்ட ஜோதியை உங்களிடம் தெரிவிக்காமலிருந்தால், உங்களை நான் வஞ்சித்தவனாவேன்.

உங்களைப் போல் நானும் இருளில் சுழன்றேன். இப்பொழுதும் சுழலுகிறேன். ஆனால் நான் வேறு இருள் வேறாகப் புலப்படா திருந்தது போய், என்னை அவ்வப்பொழுது இருள் கப்பிக் கொள்வது நன்கு புலப்படுகிறது. கூடிய வரை, நான் கண்ட ஒளியைக் கைவிடாது அணுகி, இருளை அறவே நீக்க வழி தேடுவேன்—நாம் தேடுவோம்.

கண்களைத் திறந்துகொண் டிருந்தும் என் கண்ணுக்கு எங்கும் இருள் மயமாகவே காணப்பட்டு வந்தது. இரண்டு மாதம் முன்பு ஒருநாள் என் வழியோடு போய்க் கொண் டிருந்தேன். நடுவில் எங்குப் பார்த்தாலும் ஆகாயத்தை யளாவி வளர்ந்து காய்களுடன் கூடிய பனைமரங்கள். நடு நடுவே அழகிய தென்னஞ் சோலைகள். ஒவ்வொன்றும் இரண்டொரு குடிசைகளுடன் விளங்கின. ஓரிடத்தில் மத்தியில் தாமரைத் தாடகம் நிர்மலமாய்க் காணப்பட்டது. திடீரென கணத்தில் எங்கும் இருள் சூழ்ந்தது. வானத்தில் கிடுகிடுவென்று சப்தித்துக் கொண்டு மேகங்கள் தாரை தாரையாகப் பொழிய வாரம்பித்தன. அந்தி வேளையின் இருளும், மழையின் இருளும் என்னைக் குருடனாக்கவே செய்தன. வந்த வேகத்தைப் போல் நொடிப் பொழுதில் மழையையும் இருளையும் காணோம். வானம் முழுவதும் நக்ஷத்திரங்கள் ஜ்வலித்தன. கீழ்த்திசையில் பூர்ண சந்திரன் உதயமானான். பனைமரங்களும் தென்னைமரங்களும் சூழ்ந்த விசாலமான கொட்டகைகளின் நடுவில், ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்களையும், மாசுடன் கூடிய பூர்ண சந்திரனையும் விளக்கிக் காட்டுகின்ற, சுற்றிலும் நக்ஷத்திரங்களுடன் (அறிஞர்கள்) கூடிய களங்கமற்ற பூர்ண சந்திரனை நிலத்திலும் கண்டேன். பூவுலகத்தின் களங்கமற்ற சந்திரனைக் கண்டுதான், தாமரை ஓடை நிர்மல ஸ்வரூபத்தையும், வானுதித்த சந்திரன் சோபையையும் அடைந்தன போலும். ஆயினும் வானத்திலிருந்த சந்திரன், மாசுடன் கூடியிருப்பதால் தன் பூர்ண கலைகளையும் காண்பித்துக்கொண் டிருக்க வெட்கியவனாய், ஆடி மாத வியாஸ பூஜை பௌர்ணமியன்று முதற்கொண்டே குறைத்துக்கொள்ள வாரம்பித்தான்.

மறுநாள் முதல் நிலத்தில் நான் கண்ட ஒளி வளருவதாக எனக்குத் தோன்ற வாரம்பித்தது. ஆனால் நாளடைவில், உண்மையில் ஒளி வளரவில்லை யென்று பிறகு தெரியவந்தது. என்னிடம் இருந்த இருளே குறைய வாரம்பித்தது. எங்கும் நிறைந்த அவ் வொளி, ஓரிடத்

தில் இருப்பதாக நான் கண்டதும் ஓரள வில் உண்மை. என் அநுபவத்தில் ஸ்ரீ ராம ஸமுத்ரம் என்னும் துவரங் குறிச்சி யில் இருந்த தீப ஒளி உலகெங்கும் வீசக் கூடிய பிரகாசத்தை யுடையதாயினும், குறிப்பிட்ட இடத்தில் இருப்பதாகவே காணப்பட்டது. எங்ஙனமெனில் என் வாச ஸ்தலத்திற்கும் ஸ்ரீராம ஸமுத்திரத் திற்கும் எழுபது மைல் தூரம். அறு பது நாட்களில் நான் ஆறு தடவைகள் சென்று வந்தேன். ஒவ்வொரு தடவை யும், ஊரிலிருந்து கிளம்பி, அவ் வூருக்குப் பத்து மைல் சமீபம் செல்லும் பொழுதே பிரகாசம் கண்ணுக்குப் புலப்படும். (மனத் தில் நிம்மதி யேற்படும்) அங்கிருக்கும் வரை கண்களை இருள் என்பதே சூழ்ந்த தில்லை. அங்கிருந்து புறப்பட்ட ஒவ் வொரு தடவையும் ஊர்வந்து சேரும்வரை என்னை இருள் சூழ்ந்ததே கிடையாது. ஆனால் ஊர் வந்ததும், நான் கண்ட ஒளி என் கண் முன்னால் காணப்படுவதும் மறைவதுமாகத் தோன்றும். ஏனெனில் என் ஊரில் பல கறுப்புப் படுதாக்கள் (இல்லறத்திற்கான சாதனங்கள்) அவ்வொ ளியை மறைக்கத் தயாராகத் தைத்துத் தொங்கவிடப்பட் டிருக்கின்றன. இப் படுதாக்கள் தொங்கவிடப்பட் டிருப்பதை நான் உணர்ந்ததுதான் அவ் வருள் ஒளி யின் மஹிமை.

என்னுடைய பல நண்பர்கள் அங்கு வந்திருந்தனர். பசி என்ற வார்த்தையைக் கூடக் கேள்விப்படாதவர்கள் (தினம் குறைந்தது நான்குவேளை சாப்பிட்டு வந்தவர்கள்) பசி என்ற வார்த்தையை அங்கும் (ஒருவேளை பகல் போஜனம் மாலை நான்கு மணிக்குக் கிடைக்கு மிடத் திலும்) உணரவில்லை. பஞ்சணை மெத்தை களை உபயோகித்தவர்கள் மூங்கில் பாய் களைப் பஞ்சணை மெத்தைகளாகவும், கூரைக்கட்டுகளை, மாடி வீடுகளாகவும் இயற்கையான தென்னஞ் சோலைகளைப் பெரிய நந்தன வனமாகவும், சிறிய பெரிய வாய்க்கால்களில் கட்டியிருந்த கட்டை களில் தேங்கிவிழும் நீர் வீழ்ச்சிகளைத் திருக்குற்றாலம் நீர் வீழ்ச்சியாகவும் உண் மையிலேயே தன்னை மறந்து அநுபவித் தார்கள். இவைகளுக் கெல்லாம் மூல காரணம், அழிவுள்ள பொருள்களை அழி வற்றதென்று எண்ணி வந்த இவர்களிடத் தில் இருந்து வந்த அஞ்ஞான இருளைப் போக்கிய அருள் ஒளியின் மஹிமை யாகும். என்னுடன் இருந்த நண்பர் களும், இவ் வொளியை ஒரு முறையாவது கண்ட அல்லது காணும் நண்பர்களும் இவ் வுண்மையை உரைத்த பிறகாவது உணருவார்கள். மன நிம்மதியே சகல நிம்மதிக்கும் காரணம் என்பதை உணர் த்திவரும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதி பதி ஸ்ரீ ஜகத்குரு சங்கராசாரிய ஸ்வாமிக ளவர்களே நான் காணும் அருள் ஒளி.

வலங்கிமான் டி. மு. கோர்ட்டுக்கு

சப் கோர்ட்டு S. C. No. 28/39

P. சரவண பிள்ளை—வாதி
அழகப்ப பிள்ளை—பிரதிவாதி

ஷை யூர் பிரதிவாதி வக்கீல் தெரிவிக் கிறதாவது:—

ஷை பிரதிவாதி சொத்துக்களை ஜப்தி செய்து ஏலம் போட மனுக் கொடுத்து ஸெட்டில்மெண்டு of பிராக்ளமேஷனுக் காக நோட்டீசு போய் சர்வாகாததால் ஒட்டி சர்வு செய்ய மனுக்கொடுத்து உத்தரவாகி யும் பெயர் பப்ளிகேஷனுக்கும் உத்தர வாகி 20-1-41 கெடு குறிப்பிட்டிருக்கிறது ஷை தேதிக்குள் ஆக்ஷேபங்களைத் தெரி வித்துக் கொள்ளாத வரையில் எக்ஸ் பார்ட்டி செய்து முடிவு செய்யப் படுமென் பதை அறிவிக்கபட்டிருக்கிறது

A. ராமசாமி ஐயங்கார்
அட்வொகேட்
59, பெரிய தெரு, கும்பகோணம்.

மடத்தின் உபயோகம் என்ன ?*

இப்போது ஒன்றரை வருஷ காலமாக நமது ஜில்லாவில் சுற்றி வருகிறேன். இதேமாதிரி எல்லா இடங்களிலும் கூட்டமாக வந்து தரிசிக்கிறார்கள். பக்தியாய் இருக்கிறார்கள். ஆதி ஆசார்யாள் ஏற்படுத்தின ஸ்தானத்தி லிருப்பவர் பெரியவர் என்பதற்காகமட்டும் அல்ல. குருவாய் அடைவதற்கு வேறு பெரியோர்களும் இருக்கிறார்கள். எல்லோருக்கும் உபதேசம் கொடுத்து மோக்ஷம் அடையச் செய்வதற்காக மடம் ஏற்படவில்லை. அதற்கு ஒரு மடம் வேண்டாம். அது தனித்தனியாக குருவிடம் சிஷ்யன் அடைய வேண்டிய காரியம். பிரஜைகளுக்காக ராஜ்யம் எப்படி ஏற்பட்டிருக்கிறதோ அந்த மாதிரி ஜனங்களுக்கு ஒருவித உபகாரத்திற்காக மடம் ஏற்பட்டிருக்கிறது.

ஒவ்வொருவரும் எனக்குக் காணிக்கை கொடுக்கிறீர்கள். எவ்வளவோ இடங்களில் மானியம் விட்டிருக்கிறீர்கள். பணமும் எவ்வளவோ சேர்ப்பிக்கிறீர்கள். அவையெல்லாம் நான் பெற்றுக் கொள்கிறேன். பார்த்தபோதெல்லாம் கும்பிடுகிறீர்கள். தெருவீதிகளில் நிறுத்தி நமஸ்காரம் பண்ணுகிறீர்கள். இவையெல்லாம் எதற்காக? கேட்டால், உங்களுக்கே பிரித்துக் காரணம் சொல்லத்தெரியாது. தலைமுறை தலைமுறையாக இந்த பக்தி வந்திருக்கிறது. இந்த மடத்தினால் ஜனங்களுக்கு ஒரு உபகாரம் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட காரியம் இந்த மடம் என்ன செய்கிறது ?

ராஜ்யத்தினால் ஜனங்களுக்கு உபகாரம் இருக்கிறது. நாம் ஜீவித்திருக்க ஆஹாரம் வேண்டும். உடம்பை மறைக்க வஸ்திரம் வேண்டும், மழை, வெயிலிலிருந்து காக்க ஒரு கூரை வேண்டும். நாம் சேகரிக்கும் சொத்தை ராஜ்யம் காப்பாற்றிக் கொடுக்கிறது. துஷ்டர்களைத்தடை பண்ணுகிறது இது தான் ராஜாவின் வேலை. இந்தக் காரியம் செய்வதற்காகத்தான் நாம் வரிகொடுக்கிறோம். அதைச் செய்யவில்லையென்றால் வரியும் கொடுக்க வேண்டியதில்லை. யாராயிருந்தாலும், தன் காரியத்தைச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் ஜீவித்திருக்க முடியாது. ரஸ்தாக்களில் சுங்கச்சாவடிக் கட்டிடங்கள் இடிந்துகொண் டிருக்கிறதைப் பார்க்கிறோம். ஏன்? அவைகளுக்கு உபயோகம் இல்லை. மடம் செய்கிற காரியம் ஒன்று இல்லாவிட்டால் அது இருப்பதற்கு அர்த்தம் இல்லை.

மடம் ஜனங்களுக்கு என்ன உபகாரம் பண்ணுகிறது? உங்கள் நமஸ்காரங்களைப் பெறுகிற நான் இதற்கு என்ன பிரதி செய்கிறேன்? இந்தத் தோற்றம் உண்டாகி இப்போது சில காரியங்களைச் செய்துகொண் டிருக்கிறேன்.

ஜனங்கள் க்ஷேமப்பட அவர்கள் நல்ல நடக்கையில் இருக்கவேண்டும். நல்லது எது கெட்டது எது என்று அவர்களுக்குத் தெரியவேண்டும். நல்லது பொல்லாததை ஜனங்களுக்கு சொல்லவேண்டியது மடத்தின் கார்யம்—இதைச் சொல்வதற்கு மடத்துக்குத்தான் பாத்யம். அது சொல்ல வேண்டு மென்று கேட்க ஜனங்களுக்கும் பாத்தியம்.

முன்னாளில் ஜனங்கள் நடத்தை அதிகம் கெட்டுப் போயிருக்கவில்லை. இப்போது இருப்பதுபோல் அவ்வளவு பொய்கள் கிடையா. கிராமங்களில் ஜாதி பஞ்சாயத்துகள் இருந்தன. பெரிய தனக்காரன் சொற்படி நடந்தார்கள். வழக்கு வியவகாரங்கள் வளராமல் இருந்தன. ஊருக்குள்ளேயே வழக்குத் தீர்ந்தால், ரொம்ப மாற்றிப் பொய்கள் சொல்லமுடியாது.

இந்த நாளில், வழக்கு ஒரு ஊரில்; விசாரிக்கிறது எட்டி மற்றொரு ஊரில். நிஜம் ஜெயிப்பதற்குக்கூடப் பொய்சொல்ல வேண்டி யிருக்கிறது. இரண்டு குடியும் கெட்டுச் சொத்தெல்லாம் தோற்ற பின்

---

*(ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் நீடாமங்கலத்தில் செய்த பிரஸங்கத்தின் சுருக்கம்.)

மூன்று கோர்ட்டு தாண்டி, யாரோ ஒரு வெள்ளைக்காரன் எழுதுகிறதை ஒத்துக் கொள்ளவேண்டி யிருக்கிறது. ஊரிலே யே பஞ்சாயத்து பண்ணினுல் இப்போது கோர்ட்டு தீர்ப்புகளைக் காட்டிலும் அதிக மாகத் தப்புத்தீர்ப்புகள் உண்டாகிவிடாது. ஜனநாயகம் ஏற்படவேண்டு மென்று பாடு படுகிறுர்கள். இப்போதுள்ள ஜனநாயக முறையில் பொய்கள், லஞ்சம் முதலிய வை குறையவில்லை. முன்னே ஒரு அதி காரிக்கு லஞ்சம் கொடுத்தால் இப்போது பலபேருக்குக் கொடுக்க வேண்டியிருக் கிறது. சில காரியங்களில் நிஜத்தைச் சொல்லுவதே அசாத்யமாகிவிடுகிது. எலெக்ஷன்களில் பணம் கொடுக்கிறவர், வாங்குகிறவர் இரண்டு பேரும் உண்மை யைச் சொல்ல முடிகிறதில்லை. முன் காலத்தில் நமது தேசத்தில் பஞ்சாயத் தார்களை ஜனங்கள்தான் தேர்ந்தெடுத்தார் கள். ஆனுல் இப்போது மாதிரி யாரை வேண்டுமானுலும் தேர்ந்தெடுக்கலாம் என் றில்லை. குலம், கல்வி, நடத்தை, வயது உள்ளவர்களைத்தான் தேர்ந்தெடுக்க வேண் டும். உத்தரமேரூர் கல்வெட்டு சாஸனத் திலும், சத்தர லேகா சதுர் வேதமங்கலம் சாஸனங்களிலும் இதைப்பற்றிய விவரங் கள் இருக்கின்றன.

கிராமப் பொதுக் காரியங்கள் பஞ் சாயத்துப் பொறுப்பில் நடந்தபோது ராஜாங்கத்துக்கு அதிக வேலை யில்லை. ஆகையால் கிராமத்தார் அதிக வரி யும் கொடுக்கவேண்டி யிருக்கவில்லை. ஜனங்களை ஸன்மார்க்கத்திலிருக்கும்படி செய்ய வேண்டியதும் ராஜாவின் காரியம் தான். ஆதனுல் தான் சுக வாழ்க்கை உண்டாகும். வேறே எத்தனை நன்மை கள் செய்தாலும், திருப்தியுடன் கூடின சுகம் ஏற்படாது. ஜனங்களின் லௌகிக க்ஷேமத்துக்காகப் பலகாரியங்கள் செய் கிறுர்கள். கல்வி கொடுப்பதற்காகப் பள் ளிக்கூடங்கள் வைத்திருக்கிறுர்கள். வியா திகள் சமனத்துக்காக ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தி யிருக்கிறுர்கள். தாரித்ரிய நிவிருத்திக்காக கோவாபரேடிவ் ஸங்கங் கள் அமைக்கிறுர்கள். இதெல்லாம்செய் வதோடு வேறென்றும் செய்யவேண்டும். ஜனங்களின் மனத்தில் ஸமாதானம் வேண்டும். மனஸ் திருப்தி இல்லாவிட் டால் சுகம் கிடையாது. ஒரு ஏழை, வைத் திருப்பது எல்லாம் போனுலும் "ஆண்ட வன் செயல்" என்று சொல்லிக்கொண்டு சமாதானம் அடைகிறுன். ஒரு லக்ஷம் ரூபாய் உடையவன், இருபது ரூபாய் நஷ்டமாய் விட்டால், சகிக்கமாட்டாமல் மண்டையில் கூட அடித்துக்கொள்வதைப் பார்க்கிறோம்.

'பொருள் அதிகமாக இருந்தால் சுகம் வந்துவிடு என்பதில்லை. மன ஸின் மூலம் சுகம் வரவேண்டும். ஜனங்களின் மனம் நல்வழியில் இருக்க வேண்டும். இதுதான் முக்கிய காரியம். ஜனங்கள் சுகம் அடைவதற்கு ஸ்வராஜ்யம் கிடைக்கப் பாடு படுகிறுர்கள். ஸ்வராஜ்யம் கிடைத்தாலும், சண்டை, கலகம் குறையா விட்டால், க்ஷேமம் உண்டாகாது. நமது தேசம் பலம் அடைந்து விட்டால் மாத் திரம் போதாது. முதலில் சரியா யிருப்ப வர்கள் கூட, வலிமை கிடைத்தவுடன் அநியாயம் செய்கிறுர்கள். ருஷியாவைத் தோற்கடித்த போது நாம் எல்லோரும் ஜப்பானை மெச்சினேம். இப்போது அது சைனுவுடன் யுத்தம் பண்ணுவதற்காகக் கண்டிக்கிறோம். மனஸில் திருப்தி உண் டாகி, நடக்கை நல்வழிப்படாத வரையில், சண்டையும் கஷ்டமும்தான் உண்டாகும். ஜஸ்டிஸ் கட்சி செய்த காரியங்களைக் காங் கிரஸ் மந்திரிகள் மாற்றினுர்கள். காங் கிரஸ்காரர் செய்ததைப் பின்வந்த சர்க்கார் மாற்றுகிறுர்கள். ராஜீயக் கிளர்ச்சிகளால் மட்டும் ஜனங்களுக்குச் சுகம் வராது.

மனம் திருப்தி அடையவேண்டு மானுல், அது ஒரு இடத்தில் ஈடுபட வேண்டும். அப்படி ஈடுபடுவதுதான் பக்தி. இதற்காகத்தான் ஆலயங்கள் கட்டி யிருக் கிறுர்கள் ஆலயத்திலுள்ள சிலையை வா என்கிறோம், எல்லா இடத்திலும் ஸ்வாமி இல்லையா, ஆலயத்தில்தானு இருக்கிறுர், என்று கேட்கலாம். எல்லா இடத்திலும் இருக்கிறுர், வாஸ்தவம். எல்லா இடத்தி லும் ஸ்வாமி இருக்கிறுர் என்று தெரிந்து

கொண்ட பேர்களுக்கு ஆலயம் வேண்டியதில்லை. அப்போது ஆலயப் பிரவேசம் வேண்டிய அவசியம் இல்லை.

வீதியிலும் கற்கள் இருக்கின்றன. கோவில் வாசற்படியும் கல்தான். அவைகளை விட்டு, உள்ளே யிருக்கிறதை ஸ்வாமி என்றுசொல்லுகிறோம். எல்லாக் கல்லும் ஸ்வாமியாகத் தோன்றுகிறபோது, ஆலயத்திலுள்ள ஸ்வாமி வேண்டியதில்லை. அதுவரையில் ஆலயத்தில் ஸ்வாமி உண்டு. பக்தியாலும் ஞானத்தாலும், எல்லா இடத்திலும் ஸ்வாமியைப் பார்க்கும் நிலைமை உண்டாகும். எல்லாம் பகவான் என்று உணர்ச்சி உண்டாக, ஆலயத்தில் உள்ள ஸ்வாமியிடம் ஈடுபடவேண்டும். அப்படி ஈடுபடுவது லேசானதல்ல. ஒரு கோபுரம் கட்டுவதற்கு எவ்வளவு முயற்சி வேண்டும்? ஒரு கோவிலைக் கட்டி முடிக்க, மனத்தில் எவ்வளவு பிடிவாதம் வேண்டும்? அப்படி ஒரே முகமாகப் பிடிவாதம்வைத்து காரியம் செய்தால் மனஸு பரிபாக மடையும். இதற்காகத்தான் சித்தசுத்தி உண்டாவதற்கு, கர்மாக்கள் பண்ண வேண்டும் என்கிறார்கள். பகவான் எங்கேயும் இருக்கிறார் என்று நமது புஸ்தகங்கள்தான் சொல்லுகின்றன. மற்ற மதஸ்தர் போல, பிரபஞ்சத்துக்கு வெளியே இருக்கும் ஒரு கடவுள் எல்லாவற்றையும் ஆட்சி செய்கிறார் என்று நாம் சொல்ல வில்லை.

நாம் பார்க்கிற தெல்லாம் பிரம்மம், நாமெல்லாம் பிரம்மம் என்பது நமது மதத்தில்தான் உண்டு. இந்தத் தத்வத்தை உபதேசித்த பெரியவர்களே எங்குப் பார்த்தாலும் ஆலயங்களையும் கட்டி வைத்திருக்கிறார்கள். ஆலயங்களில் வழிபடும்படி அவர்கள்தான் உபதேசித்திருக்கிறார்கள். எல்லா இடத்திலும் பகவான் இருந்தாலும், ஆலயத்திலுள்ள மூர்த்தியில் அதிக ஸாந்நித்யத்துடன் இருக்கிறார். சூரியனின் பிரகாசம் எங்கும் இருக்கிறது. அதன் கிரணங்களை ஒரு லென்ஸ் கண்ணாடி மூலம் ஒரு புள்ளியில் சேர்த்தால், பிரகாசமும் உஷ்ணமும் பல மடங்கு ஆகிறது. அது மாதிரி, மந்திரங்களினால் ஆலய மூர்த்திகளில் ஸாந்நித்தியம் உண்டாகிறது. அதை ரக்ஷிக்க ஏற்பட்ட விதிகளின்படி நடக்கவேண்டும்.

ஆலயரக்ஷணை மென்ன, இது மாதிரி நன்னடக்கைக்காகிய மற்ற விஷயங்களென்ன, இவைகளைப்பற்றி ஜனங்களுக்குத் தெரிவிக்க வேண்டியது மடத்தின் காரியம்.

கதைக்கோவை

தமிழில் இதுவரை
வெளிவராத
அற்புத நூல்

40, பிரபலஸ்தர்கள்
எழுதிய
40, சிறந்த
சிறு கதைகள்

504-பக்கங்கள்
கிளேஸ்
ரூ. 3-0-0
பெதர்வெயிட்
ரூ. 3-0-0
(தபால்
செலவு வேறு

பங்கிம்
சந்த்ரர்
சரத்சந்த்ரர்
நூல்களும்
கிடைக்கும்.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

விதியின் விநோதம்

[எஸ். ஸோமாஸ்கந்தன்]

"ஆகா! என்ன ஆநந்தம்! இதுவல்லவோ சுகம்! என்ன இன்பகரமான காற்று! உலகமுழுவதும் இன்பமயம்! இதில் சந்தேகமே இல்லை! அறிவில்லாத மூடர்களே இந்த வாழ்க்கையை இகழ்ந்து பேசுகிறார்கள்!"—என்று இன்ப சாகரத்தில் ஆநந்த அலைகள் வீசும் கடலின் மத்தியில், தன் வாழ்க்கைப் படகைச் செலுத்தும் ஒரு பெரிய பிரபு தன் மாளிகையின் ஏழாவது மாடியில் அமர்ந்து மாலைக் காற்று வாங்கிக்கொண்டே சிந்திக்கிறான்.

அதே சமயத்தில் ஒரு பரிதாபகரமான குரல்—"காலில்லா முடம் ஐயா! காலணா போடையா!"—என்று கதறுகிறது அதே தெருவில்! கிழிந்த கந்தலை யுடுத்துக் கொண்டிருக்கும் ஒரு பிச்சைக்காரனின் குரல்தானது! "சோறு கிடைக்கும் இடம் சொர்க்கலோகம்"—என்று நினைக்கிறது அவன் உள்ளம்! இந்த உலக வாழ்க்கையை ஜன சஞ்சார மற்ற, முட்கள் நிறைந்த வனப் பிரதேசமாக நினைக்கிறது அவன் மனம்! வெறுப்புக்குறி தோன்றும் முகத்துடன் சாரமற்ற வாழ்க்கையை மிகவும் மனக் கசப்புடன் நடத்துகிறான் பிச்சைக்காரன்!

* * *

நவீன நாகரிக உடையுடன் 'பேபி ஆஸ்டின்' காரில் ஸஹதர்மிணி சகிதமாக 'மாடர்ன் கேப்'பில் 'பிரபுக்களின் விடுதி' யில் (House of Lords) சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டுக் கட்டடம் எதிரொலியிடும் படி பெரிய ஏப்பம் விட்டுக்கொண்டு, ஹோட்டல் மாடிப்படியில் இறங்குகிறார் ராவ்பஹதூர்—லம்போதர ஐயர். பல லாயிரக் கணக்கான ஏழை மக்கள் உண்ண உணவும் கட்டத் துணியுமின்றித் தவிக்கும் பரிதாபகரமான காட்சி அவருக்குத் தெரிகிறதா இப்பொழுது? இல்லை! கொஞ்சங்கூட இல்லை. ஐயர் மனத்தில் இப்பொழுது துள்ளியெழுகிறது ஆநந்தம். ஆநந்தத்துக்குக் காரணம் ஹோட்டலில் அவர் சாப்பிட்ட 'பாதாம்கீர்'தான்! பரமானந்த பரிதாரக மனைவியுடன் 'ஆஸ்டின்'காரில் ஏறிக்கொண்டு வாயுவேகமாகப் பறந்து நிச்சிந்தையாக வீட்டுக்குச் செல்கிறார் ஐயர்!

இரண்டங்குலம் குழி விழுந்த கண்களுடன் எதிரிலிருப்பவர் காது செவிடாகும் படி பசியேப்பம் விட்டுக்கொண்டு சோர்ந்து நடந்து செல்கிறான் நாட்கூலி காலணா பெறும் கூலியாள் ஒருவன்! புளித்த சாதத்தின் தீர்த்தத்தையே 'பாதாம் கீர்' என்று நினைத்துக் கொண்டு பருகுகிறான். மரத்தினடிதான் அவனுக்கு 'மாடர்ன் கேப்'. லம்போதர ஐயர் முன் செய்த நல்வினைப்பயன் அவருக்கு இன்ப வாழ்க்கையை யளித்திருக்கிறது! ஏழைக் கூலி செய்த தீவினைப் பயன் அவனைக் கஷ்டத்துக் குள்ளாக்கி யிருக்கிறது! இது விதியின் விநோதம்!

* * *

மங்கள வாத்திய கோஷங்கள்! வீதியில் தோரணங்களும், வாழை மரங்களும் கட்டப்பட் டிருக்கின்றன. ஸ்திரீகளும் புருஷர்களும் புதிய உடையணிந்து ஆநந்தமாக இங்கு மங்கும் போய்க்கொண் டிருக்கின்றனர். விவாகம் நடக்கிறது அந்த வீட்டில். மணமகன் தன் வாழ்க்கையில் புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்கிறான். உற்சாகத்துடன் கூடிய புத்துணர்ச்சி அவன் முகத்தில் தாண்டவமாடுகிறது. ஒவ்வொரு நிமிஷமும் தன் வாழ்க்கையில் உண்டாகப்போகும் புதிய மாறுதலை எண்ணி யெண்ணிக் குதூகல மடைகிறான்! விநாடிக்கு விநாடி மயிர் சிலிர்க்கிறது! கல்யாண வீட்டில் பல் முளைக்காத சிசுவிலிருந்து பல்லுப் போன தாதா

வரையில் எல்லோரும் ஸந்தோஷமாக இருக்கின்றனர்.

அதே சமயத்தில் அடுத்த வீட்டில் எல்லோரும் துக்க சாகரத்தில் முழுகிக் கரை காணமல் தவித்து உள்ளம் வெடித்துப் புலம்புகின்றனர். காரணம், இத்தனை நாட்களாகக் குடும்பத்தை நடத்தி வந்த திவான் பஹதூர்—தணிகாசல முதலியார் காலமானதுதான்! கேட்பவர் மனம் கலங்கும்படி பறை ஒலிக்கிறது! "ஆகா! என்ன கொடுமை! நேற்றுக் காலையில் என்னுடன் எவ்வளவு நேரம் உற்சாகத்துடன் பேசிக்கொண்டிருந்தார் முதலியார்! நல்ல 'ஹெல்தி கான்ஸ்டிட்யூஷன்'! என்ன செய்யலாம்! கால வித்யாசம்! இவ்வளவு சீக்கிரத்தில் இறந்துவிடுவார் என்று நான் நினைக்கவே இல்லை"—என்று துக்கம் விசாரிக்கிறார் ஒருவர். முதலியாரது பால்ய லீலைகளைப் பற்றிப் பேசுகிறார் ஒருவர். "குழந்தை கோகிலத்துக்குக் கல்யாணம் செய்து வைத்துவிட்டுப் போகக்கூடாதா?" என்று அநுதாபங் காட்டுகிறார் வயது முதிர்ந்த தாதா ஒருவர். "என்ன செய்யலாம்! முதலியாருடைய வாழ்க்கையின் கடைசி அத்தியாயம் இன்றுடன் முடிவடைந்து விட்டது! "ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ" என்கிறார் ஒரு பழுத்த வேதாந்தி! இதுவும் விதியின் விநோதம்!

* * *

தினசரி சாப்பாட்டிற்கே வகையின்றித் தவிக்கும் ஏழைத் தம்பதிக்குக் கடவுள் வஞ்சனை யில்லாமல் குழந்தைகளைக் கொடுத்துவிடுகிறார். ஏழையின் மனைவி அந்தக் குழந்தைகளை, வேப்ப மரத்தில் துணியைக் கட்டி அதில் விட்டுத் தூங்கப் பண்ணுகிறாள். ஏழை தனக்குக் கிடைத்த கூழைக் குழந்தைகளுக்கும் பங்கிட்டளித்து இன்ப மடைகின்றான்.

அதே தெருவில் ஒரு பணக்காரன். குழந்தை யில்லாத தோஷந் தீர இராமேசுவரம் சென்று நாகப்ரதிஷ்டை செய்து அநேக மஹான்களைத் தரிசித்து அவர்களிடம் தன் குறையைக்கூறி வருந்துகிறான். ஜோதிடர்களிடம் சென்று தன் ஜாதகத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்து அவர்கள் குழந்தை யுண்டென்று சொன்னால் திருப்தி யடைகிறான்; இல்லையென்று சொன்னால் தன் வருங்கால வாழ்க்கையே முறிந்து விட்டதாக எண்ணி வருந்துகிறான். திரண்ட செல்வத்தைக் கொடுத்த கடவுள் அந்தப் பிரபுவுக்கு மக்களை யளிக்கவில்லை. மக்களை யாதரிக்கச் சக்தியில்லாத பரம ஏழைக்கு மக்களை அளிக்கிறார். இது என்ன அதிசயம்! இதுவும் விதியின் விநோதம்தான்!

* * *

பொருளிருப்பவனுக்குப் புத்தி யிருப்பதில்லை! புத்தி யிருப்பவனுக்குப் பொருளிருப்பதில்லை! சதுர்ப் பாஷா பண்டிதனாக விளங்கும் ஒரு மகா மேதாவிக்கு ஒரு கலப்பில்லாத முட்டாள் மகனைப் பிறக்கிறான்! ஒரு முழு முட்டாளுக்கு ஒரு பிரகஸ்பதி மகனைப் பிறக்கிறான்! இவைகளை நாம் நேரில் காண்கிறோம். திருமகளின் திருவவதாரமோ என்று ஐயுறத்தக்க அழகுபடைத்த ஒரு யுவதிக்கு ஒரு ஹநுமந்த ஸ்வரூபி கணவனாக வாய்க்கிறான். பல்லுப்போன பாட்டியம்மாள்கூட இதை யறிந்துதான் "பிராப்தத்தை யாராலே மாத்த முடியும்? அவா தலையிலே அப்படி எழுதி யிருக்கு!"—என்கிறாள்.

தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார்—"ஊழிற் பெருவலி யாவுள?" என்று கேள்வி கேட்டுத் தீர்க்காலோசனையிலாழ்கிறார். உடனே பெருமூச் செறிந்து "மற்றொன்று சூழினும் தான்முந்துறும்—" என்று கூறி அயர்வடைகிறார். ஆம்! விதியை வெல்வது அரிதுதான்!

* * *

நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கிறது. ஞானத் தாயாராகிய ஔவைப் பிராட்டியார் இதைப்பற்றி வெகு அழகாகக் கூறுகிறார்—

"ஒன்றை நினைக்கின்
அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும்
வந்தெய்தும்!—ஒன்றை

நினையாத முன்வந்து
நிற்பினு நிற்கும்
எனையாளு மீசன் செயல்!"—

என்று. இதுவும் விதியின் விநோதம்தான்!

சத்திரம் சத்திரமாகச் சென்று உண வுண்டு காலங்கழிக்கும் ஒரு நித்திய தரித் திரனுக்கு அவனையும் அறியாமல் ஏகபோக சம்பத்துக் கிடைத்துவிடுகிறது! அவன் கனவிற்கூட அந்தச் சுக வாழ்வைக் கண் டிருக்க மாட்டான்.

"அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்
அரசோ டிருந்தா சாளினு மாளுவர்."

என்னும் அமுத வாக்கு இதனை நன்கு விளக்குகிறது.

குபேர சம்பத்துக் கொழிக்கிறது பாங்க்—முருகேச முதலியாருக்கு. 'ரோல்ஸ் ராய்ஸ்' காரில் வாயுவேகமாகத் தினந்தோறும் நினைத்த மாத்திரத்தில் நினைத்த இடத்துக்குப் பறக்கிறார். "என்ன ஸார்? தி. நா. பாங்க் மோசம் செய்துடுத்தாமே"—என்று அவரைப் பார்த்து ஒருவர் அநுதாபத்துடன் துக் கம் விசாரிக்கிறார்.

"ஹும்! என்ன செய்யலாம்! ரேஸு க்குப் பணம் கட்டியிருந்தேன்! அதுவும் போயிடுத்து! வேளைப்பிசகு! பாங்கும் மோசம் செய்துவிட்டது!"—என்று கூறிப் பெருமூச்சுவிட்டுச் சோர்வடை கிறார் முதலியார்.

மறு நாளே முதலியார் வாங்கின கட னுக்கு வகை சொல்ல முடியாமல் தமது மாளிகையை விட்டுக் கீழே யிறங்கி ஒரு குடிசை போட்டுக்கொண்டு காலம் தள்ளு கிறார். என்ன கால வித்தியாசம்!

"குடைநிழலிருந்து குஞ்சர மூர்ந் தோர் நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்"—என்னும் ஆன்றோர் அமுத வாக்கு உண்மை யாகிறது. பாங்க்—முரு கேச முதலியார் இப் பொழுது 'இன்சால் வெண்ட்'—முருகேச முதலியாராக மாறி விட்டார்.

* * *

மனிதனுய்ப் பிறந்த ஒவ்வொருவனும் தான் சுகமாக வாழவேண்டு மென்றே விரும்புகிறான். அடுத்த வீட்டுக்காரன் எப்படிப் போனால் நமக் கென்ன? நாம் நன்று யிருந்தால் அது போதும்! என்று தான் ஒவ்வொருவனும் நினைக்கிறான். சுய நலங் கருதுவதில் ஒவ்வொருவனும் தனக்குத் தானே சமமாக விளங்குகிறான். பிறர் துன்பங் கண்டு வருந்துவோர் மிகச் சிலர்!

முன் செய்த நல்வினைப் பயனால் ஒரு வன் இப் பூவுலகில் ஸ்வர்க்க போகத்தை யநுபவிக்கிறான்; பரமானந்தமாக விளங்குகிறான்; தன்னை மிஞ்சி ஒருவரு மில்லை யென்ற எண்ணம் அவனையும் அறியாமல் அவன் மனத்தில் குடிகொள்ளு கிறது! நல்வினைப் பயன் முடிவடைந்து தீவினைப் பயனை அநுபவிக்கும் காலம் வரும் பொழுது அதே மனிதன் மனக் கசப்புடன் வாழ்க்கையை நடத்திச் சலிப் படைகிறான். இதைப் பழுத்த அனுபவ முடைய பெரியா ரொருவர்—

"வாழ்வடையுங் கால மகிழ்கின்றாய் (தீவினையால்
தாழ்வடையுங் கால சலிக்கின்றாய்-பாழ் மனமே!
எல்லாம் இறையருளென் றெண்ணியிறு மாப்புறலே
வல்லாண்மை யாக மதி"——

என்று அடித்துக் கூறி விளக்குகிறார். எல்லாம் இறைவன் செயல் என்றறிந்து சுக துக்கங்களைச் சமமாக மதித்து நடப் பவரை இவ் வுலகில் காண்பது குதிரைக் கொம்பேயாகும்!

* * *

விநோதத்திலும் விநோதம் ஒன்று! அதை நினைத்துத் தான் ஞானிகள் ஆச் சரிய மடைகின்றனர். அது என்ன வென் றால்—தினசரி வாழ்க்கையில் எண்ணிக் கையிலடங்காத மானிடர்கள் எமனுலகுக் குச் சென்று கொண்டிருக்கின்றனர்! அதை யெல்லோரும் பார்த்துக் கொண் டிருக்கின்றனர். எண்பது வயதுக் கிழ வனி லிருந்து ஆறுமாதச் சிசுவரையில் எல்லோரும் மரணமடைவதை நாம் கண் கூடாகக் காண்கிறோம்.

மானிடர்க்கு விதிக்கப்பட்ட வயது நூறு என்று கூறுகிறேம். ஆனல் நமக்கு "நித்திய கண்டம் பூர்ணுயுள்!" என்பதுபோலிருக்கிறது. பிறந்தது முதல் இறக்குமளவும் நம் உயிரை ஆபத்துச் சூழ்ந்து கொண்டிருக்கிறது.

"நெருநெல் உளனெருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"——

என்று இதைத் தமிழ் மறை வெகு அழகாக எடுத்துச் சொல்லுகிறது.

"இன்றைக் கிருப்பாரை நாளைக்கிருப்ப ரென்றெண்ணவோ திடமில்லையே!"— என்று வேதாந்தம் பேசும் வேதாந்திகூட, எல்லோரையும்போலத் தானும் ஒரு நாள் இறக்க வேண்டியவன் தான் என்பதை அடியோடு மறந்து விடுகிறுன். இப்படியே ஒவ்வொருவனும் தன்னைச் சிரஞ்சீவி யென்றே நினைத்துக் கொண்டிருக்கிறுன். பக்கத்து வீட்டிலிருப்பவன் மரண மடைவதைப் பார்த்துங் கூட நமக்குப் புத்தி வருவதில்லை. இதைப் பார்த்துத் தான் ஞானிகள் நம்மைப் பரிகசிக்கின்றனர்; நமது அறியாமை கண்டு பரிதாபப்படுகின்றனர். எவ்வளவு சாஸ்திரங்கள் படித்தாலும் நமது மனம் சமாதானம் அடைவதில்லை. இதுவும் விதியின் விநோதம் தான்.

இன்ஷ்யூர் செய்யுங்கள்!

ஜூபிடர் ஜெனரல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

கீழ்க்கண்ட இன்ஷ்யூரன்ஸ் அலுவல்களை கவனிக்கும்.

ஆயுள், மோட்டார்கார், நெருப்பு, பஸ்கள், டாக்ஸிகள், கப்பல், தொழிலாளர் நஷ்டஈடு, சமுத்திரம், ரெயில்வே, தபால்

பிரபல இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி

வாக்களிக்கப்பட்ட மூலதனம்

ஒன்றரைக்கோடி ரூபாய்

எங்கும் ஏஜண்டுகள் தேவை

பிராஞ்சு ஆபீஸ்:

99, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.

பிராஞ்சு மானேஜர்: N. வெங்கடராம அய்யர்.

தியாகம்

[எல். ராஜலக்ஷ்மி, மதுரை.]

ராமையரும் லக்ஷ்மணனும் அண்ணன் தம்பிகள். பெயருக் கேற்ப இருவரும் பரஸ்பரம் மிகவும் அன்புடையவர்கள். தன்னைவிடப் பத்து வயது இளையவனான லக்ஷ்மணனைப் படிக்க வைத்து முன்னுக்குக்கொண்டு வந்தவர் ராமையர்தான். ராமையரும் லக்ஷ்மணனும் ஒன்றாகவே வாழ்க்கை நடத்தி வந்தனர். இருவருக்கும் ஒரே ஆபிஸில் வேலை. அண்ணனிடம் லக்ஷ்மணனுக்கு மட்டற்ற மரியாதையும் விசுவாசமு முண்டு. அவர் கீறின கோட்டைத் தாண்ட மாட்டான். புருஷர்களைப் போல் பெண்களும் ஒற்றுமையுடன் இருந்தால் தானே குடும்பத்தில் சச்சரவுகள் உண்டாகாம லிருக்கும்? ராமையருக்கு நேர் விரோதமாக இருந்தாள் அவர் பார்யையான மங்களம். லக்ஷ்மணனின் மனைவியான சீதாவைக் கண்டால் மங்களத்துக்குக் கட்டோடு பிடிக்காது. பரம சாதுவும் மகா உத்தமியுமான சீதாவை எப்போது பார்த்தாலும் காரணமின்றி வைதுகொண்டே இருப்பாள்; ஒரு நாளாவது அவளுடன் சந்தோஷமாக வார்த்தையாடினதில்லை.

மதனியின் சொல்லம்புகளையெல்லாம் பொறுமையுடன் சகித்து வந்தாள் சீதா. பெற்றோரையும் உற்றோரையும் பறிகொடுத்த அனாதையான சீதா மங்களத்தையே தனது பெற்ற தாயாக எண்ணி அவளிடம் மிகவும் பயபக்தியுடன் நடந்து வந்தும் மங்களம் அவளை வித்யாஸமாக நடத்தி வந்தது அவள் இதயத்தைப் புண்படுத்தியது. வீட்டுக் காரியம் முழுவதையும் அவளே செய்து வந்தாள். "மன்னி" என்று அன்புடன் அவள் அழைக்கும் போதெல்லாம் "சீ" என்று எரிந்து விழுவாள் மங்களம். சீதாவின் ஒவ்வொரு செய்கையும் பேச்சும் மங்களத்துக்கு வெறுப்பை யளித்தனவேயன்றி விருப்பை யளிக்கவில்லை.

தம்பிக்குச் சம்பளம் குறைவு என்ற இரக்கத்தின்மேல் அவன் சம்பளத்தை அப்படியே பாங்கில் போட்டு வைத்துவிட்டுத் தன் சம்பளத்தையே எல்லாச் செலவுகளுக்கும் உபயோகப்படுத்திக்கொண்டார் ராமையர். இது மங்களத்தின் பொறாமைத் தீயை அதிகப்படுத்தியது.

"உங்கள் தம்பி வேறாகப் போனால் என்ன? இன்னும் எத்தனை நாட்கள்தான் அவனைக் கவனிக்க முடியும்? நமக்கென்ன கொட்டி வைத்திருக்கிறதா?" என்று அடிக்கடி ராமையரிடம் சொல்லுவாள் மங்களம். "என் தம்பியைப் போகச் சொல்ல உனக்கென்ன அதிகாரமிருக்கிறது? என் உயிருள்ள வரையில் அவனையும் அவன் மனைவியையும் நான் கைவிட மாட்டேன்" என்று அவளை அடக்கி விடுவார் ராமையர். இந்த விஷயங்களையறிந்து கொண்ட லக்ஷ்மணன் ஒரு நாள் "அண்ணா, மன்னிக்கு இஷ்டமில்லாதபோது நாங்கள் ஏன் இங்கிருக்க வேண்டும்? நாங்கள் வேறாகப் போய்விடுகிறோம். மன்னி சந்தோஷமாக இருந்தால் சரி" என்று சொன்னான்.

"அட அசடே. அவள் கிடக்கிறாள். என் உயிர் இருக்கும் வரையில் இம் மாதிரி என்னிடம் சொல்லாதே. நானிருக்கும் போது உனக்கென்ன கவலை?" என்று தேறுதல் கூறினார் ராமையர். மங்களத்தின் பிள்ளை பாலுவும் சீதாவின் பெண் சரசுவும் இணைபிரியா நண்பர்கள். பாலுவுக்குச் சீதாவின் மீது உயிர் "சித்தி சித்தி" என்று சீதாவையே சுற்றிக்கொண்டிருப்பான். சித்திதான் சாதம் போடவேண்டும். தூங்கப் பண்ண

வேண்டும். மங்களத்தைக் கண்டாலே கண்ணைப் பொத்திக்கொண்டு அழ வாரம்பித்துவிடுவான். "பாவி! என் குழந்தையை என்னமோ பண்ணிவிட்டாளே" என்று சீதாவைப் பழிப்பதுடன் பாலுவையும் சித்தியிடம் போகாதே போகாதே என்று அடிப்பாள். என்ன செய்தாலும் இருதயத்தில் பெருகும் அன்பு வெள்ளத்துக்கு அணைபோட முடியுமா? அத்தனை அடியையும் பெற்றுக்கொண்டு மறுபடியும் சித்தியிடமே போய்விடுவான் பாலு. சரசுவைவிடப் பாலுவிடமே அதிக அன்பு பாராட்டி வந்தாள் சீதா. "என் குழந்தைக்கு மருந்திட்டு மயக்கிவிட்டாள்" என்றும் "அந்த ராக்ஷஸி சூன்யம்கூட வைக்கக்கூடியவள்" என்றும் மங்களம் அடுத்தாத்து மாமியிடம் அடிக்கடி கூறுவது சீதாவின் காதுகளில் விழாமலில்லை. நாம் செய்த பாவம் என்று தானே தன் மனத்தைத் தேற்றிக்கொண்டாள்.

ஒரு நாள் திடீரென்று பாலுவுக்குப் பிரமாதமாக ஜுரம்வந்துவிட்டது. கவலையும் பயமும் ஒருங்கே வந்து சீதாவின் மனத்தைக் கப்பிக்கொண்டன. குழந்தையைக் கண்கொட்டாமல் கவனித்து வந்தாள். ஏற்கனவே குற்றங் கூறிக்கொண் டிருந்த மங்களத்துக்கு இது ஒரு சாக்காயிற்று. "இந்தப் பாவி என் குழந்தையைக் கொன்றுவிட்டுத்தான் மறுவேலை பார்க்கப் போகிறாள்? என்ன மருந்து வைத்தாளோ? என்ன பொடி போட்டாளோ! என் குழந்தைக்கு ஆபத்து வந்துவிட்டதே" என்று ஓலமிட்டாள். இதையெல்லாம் பொருட் படுத்தாமல் குழந்தையைப் பாதுகாப்பதிலேயே ஈடுபட் டிருந்தாள் சீதா. இருபது நாட்களாக ஜுரம் விடாமல் அடித்துக்கொண் டிருப்பதைக் கண்ட சீதாவுக்குக் கவலை அதிகரித்தது. "பகவானே குழந்தைக்கு உயிர்ப்பிச்சை யளி" என்று சதா கடவுளை வேண்டிக் கொண்டிருந்தாள். பாலு, "சித்தி, சித்தி," என்றே அரற்றிக்கொண் டிருந்ததால் சீதாவை அவனிடமிருந்து பிரிக்க மங்களத்துக்கு முடியாமல் போய்விட்டது.

அன்று ஏகாதசி. பாலுவுக்குத் திடீரென்று சுவாஸம் குறைய வாரம்பித்தது. ராமையர் ஏதோ காரியமாக வெளியூர் சென்றிருந்தார். சீதா ஒன்றும் தோன்றாதவளாக விம்மி விம்மி அழலானாள். மங்களமும் "என் குழந்தையைக் கொன்றுவிட்டாயே டீ" என்று அழுதாள். லக்ஷ்மணன் ஓடிச்சென்று டாக்டரை அழைத்து வந்தான். டாக்டர் பாலுவின் நாடியைப் பரிசோதித்துவிட்டு "பிரயோசனமில்லை. இனிப் பிழைப்பது அரிது" என்று உதட்டைப் பிதுக்கினார். மங்களம் சப்தமிட்டு அழ வாரம்பித்துவிட்டாள்.

"டாக்டர்! அவனைப் பிழைக்கச் செய்வதற்கு ஒரு வழியுமில்லையா?" என்று விம்மிக்கொண்டே கேட்டாள் சீதா.

"இருக்கிறது!... ஆனால் அது நடக்கக்கூடிய காரியமில்லை" என்றார் டாக்டர்.

"டாக்டர்! எப்படியாவது அவனுக்கு உயிர்ப்பிச்சை யளியுங்கள். அவனுக்காக என்னுயிரைக்கூடக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அவன் போனால் என்னால் உயிர் வாழ முடியாது. தயவு செய்யுங்கள்" என்று ஆவேசம் வந்தவள்போல் கத்தினாள் சீதா.

"அம்மா என்னாலாவது ஒன்றுமில்லை. ஈசனருள் வேண்டும். அவன் உடம்பில் ரத்தமில்லை. இரண்டு அவுன்ஸ் நல்ல ரத்தத்தை அவனுடம்பில் செலுத்தினால் ஒருவேளை பிழைக்கலாம்—" என்று டாக்டர் கூறி முடிக்கும் முன்பே சீதா துள்ளியெழுந்து "டாக்டர் தயங்கவேண்டாம். இதோ நான் கொடுக்கிறேன். எடுங்கள் ரத்தத்தை" என்று வீராவேசத்தோடு கையை நீட்டினாள் சீதா. அவளது தியாக புத்தியைக் கண்ட மங்களம் ஒரு கணம் திகைத்துவிட்டாள். அவள் மனச்சாட்சி அவள் மனத்தைக் குத்திக் காட்டுவதை அவளால் பொறுக்க முடியவில்லை. தான் செய்த கொடுமைகளைக் கொஞ்சங்கூடச் சட்டை செய்யாமல் எவ்வளவு பெரிய மகத்தான தியாகம் செய்யத் துணிந்துவிட்டாள்! என்று எண்ணும்

போதே அவள் இதயம் படீரென்று வெடித்துவிடும்போ லிருந்தது. "என்னுடலிலிருந்து இரத்தம் எடுங்கள்" என்று சொன்னான் லக்ஷ்மணன்.

"வேண்டாம்—வேண்டாம்—அவர் நோயாளி மெலிந்த சரீரமுடையவர் என் தேகமே திடகாத்திர முள்ளது. சீக்கிரம் எடுங்கள்" என்று படபடப்புடன் பேசினாள் சீதா.

"அதனால் அவளுயிருக்கு ஆபத்தொன்று மில்லையே" என்று கவலையுடன் கேட்டான் லக்ஷ்மணன்.

"பயமொன்றுமில்லை. கொஞ்சம் பலஹீனமாக இருக்கும். ஒரு நல்ல டானிக் குடித்தால் சில தினங்களில் சரியாகிவிடும்" என்றார் டாக்டர். சீதாவின் கை நாடியைப் பரிசோதித்துவிட்டு ஏற்கனவே தயாராகக் கொண்டு வந்திருந்த கருவியி னுதவியால் சீதாவினுடலிலிருந்து ஒரு ட்யூப் வழியாக இரத்தத்தைப் பானுவின் உடம்பில் செலுத்திவிட்டார். சவம்போல் வெளுத்துக்கிடந்த பானுவின் முகத்தில் தெளிவுண்டாயிற்று. விழுந்திருந்த நாடியும் சரியாக அடித்துக்கொள்ள வாரம்பித்தது. டாக்டர் முகத்தில் திருப்திக்குறி தோன்றியது. "இனிமேல் பிழைத்துக்கொள்வாள்! பயமில்லை" என்று சொல்லிவிட்டு டாக்டர் போய்விட்டார்.

மங்களம் ஓடோடியும் வந்து சீதாவை அணைத்துக்கொண்டு, "என் கண்ணே! என் பிள்ளைக்கு உயிர்ப் பிச்சையளித்த புண்ணியவதியே! நீ செய்த மகத்தான தியாகத்துக்கு என் உயிரைக் கொடுத்தாலும் ஈடாகாதே! தங்கமே, என் குற்றங்களை மன்னிப்பாயா? என் பாபங்களுக்காக என்னை வெறுத்துத் தள்ளாமலிருப்பாயா?" என்று கதறினாள்.

"மன்னி, உங்கள்மேல் ஒரு குற்றமுமில்லை. எல்லாம் ஈசன் செயல். நீங்கள் வீணாக வருந்தாதீர்கள். எனக்கு உடம்பு ஒருமாதிரியாக இருக்கிறது" என்று சொல்லிவிட்டுப் படுத்துக்கொண்டாள் சீதா. வெளியூருக்குச் சென்றிருந்த ராமையரும் திரும்பி வந்துவிட்டார். விஷயங்களறிந்ததும் "அவள் உத்தமி! நம் குலத்துக்கே ஒளி கொடுக்க வந்த ஞான விளக்கு" என்று ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.

நடுநிசி. அரைத்தூக்கத்திலிருந்த மங்களம் "மன்னி மன்னி" என்ற சீதாவின் குரல் கேட்டு விழித்துக்கொண்டாள். "சீதா என் கண்ணே ஏன் கூப்பிட்டாய்?" என்று அன்புடன் கேட்டாள் மங்களம். சீதா மங்களத்தின் கரங்களைப் பற்றிக்கொண்டு "மன்னி, எனக்கொரு வரம் கொடுக்க வேண்டும். சரசு இனிமேல் உங்கள் குழந்தை. அவளை அன்புடன் நடத்த வேண்டும். எனக்காக இந்த உதவியைச் செய்வீர்களா?" என்று கேட்டாள். அவள் கைகள் நடுங்கின. "சீதா, ஏன் உன் கைகள் நடுங்குகின்றன? சென்றதை மறந்துவிடு. நான் பழைய மங்களமல்ல. 'இனி உன்னுயிரும் என்னுயிரும் ஒன்று. சரசுவும் நீயும் என்னிரு கண்மணிகள். பொறாமை என்னும் பேய் என் மனக் கண்ணினின்றும் உண்மையை மறைத்துவிட்டதால் உன் பெருமையை அறியாத பாதகி யாய்விட்டேன். நடந்ததைப் பற்றி நினைப்பதில் பயனில்லை. என்னை நம்பு. விசனப்படாதே" என்று சொன்னாள் மங்களம். அவள் கண்கள் நீரைக் கக்கின. அவள் குரலில் தொனித்த சாந்தத்தைச் சீதாவால் நம்ப முடியவில்லை.

"நிஜமாகவா?" என்று கேட்டாள் சீதா. இப்படிக் கேட்கும் போது அவள் குரல் கம்மியது.

"சத்யமாக" என்று அழுத்தமாகச் சொன்னாள் மங்களம். சீதா மங்களத்தின் முகத்தோடு முகம் பதித்து "மன்னி, என் மனம் இன்றே குளிர்ந்தது" என்று சொல்லிவிட்டுப் புன்னகையுடன் கண்களை மூடினாள். மூடின கண்களை மறுபடியும் திறக்கவேயில்லை. மீளா நித்திரையில் ஆழ்ந்துவிட்டாள் அவள்!



இடைவிடாத முன்னேற்றம் ஓங்கி வரும் கீர்த்திக்கு ஓர் அறிகுறி!

நியூ ஏஷியாடிக்
லைப் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

இதன்—6-வது வருஷத்தில் பூர்த்தி
யான இன்ஷூரன்ஸ் புள்ளி விவரம்

1939-ல் ரூ. 50 லக்ஷத்திற்கு மேல்
1938-ல் ரூ. 41·74 லக்ஷம்

மானேஜிங் ஏஜண்ட்ஸ்: **பிர்லா பிரதர்ஸ் லிமிடெட்**

நீங்கள் இன்ஷூர் செய்யவோ அல்லது பிரிதிநிதி
களாக யிருக்கவோ ஏற்ற சிறந்த கம்பெனி இது.
விவரங்களுக்கு எழுதவும்:

மதராஸ் பிராஞ்சு:

ஏ. சுப்பையா பிராஞ்சு மானேஜர்,
289, லிங்க செட்டித் தெரு, ஜி. டி., மதராஸ்.

புதுமைப் பெண்

[ஸ்ரீமதி சேது அம்மாள்]

மகாகவி சுப்ரமண்யபாரதியின் மேதையைப்பற்றி இப்போது தமிழுலகம் நன்ருக அறிந்துவிட்டது. அவரை நாடெங்கும் கவிச்சக்ரவர்த்தி யென்றும், உத்தம தேசீய கவி யென்றும், மகாகவி யென்றும் போற்றுகிருர்கள்.

அவருடைய கவிதையில் சிறப்பிக்கப்பட்டு, அதன் அடிப்படையான தத்துவமாக இருக்கும் அவருடைய சக்தி தரிசனத்திற்கே ஆதாரமாக இருக்கும் பெண்மையைப் பற்றிய அவர் கொள்கைதான் எனக்கு முக்கியமாகப் படுகிறது.

சக்தியே பெண்மை, பெண்மையே சக்தி. சிருஷ்டியில் பாதியாக இருந்துகொண்டு அதனுடைய அபிவிருத்திக்கும் அசைவிற்குமே காரணமாக இருக்கும் சக்தியைப் பற்றி பாரதி பாடி யிருப்பது போல வேறு யார் பாடி இருக்கிருர்கள்? அதன் அம்சமாகிய பெண்மையைப்பற்றி முதல் முதலாக நமது இலக்கியத்திலேயே பாரதிதான் புகழ்ந்து பாடியிருக்கிருர்.

நமது இலக்கியத்திலே எங்குப் பார்த்தாலும் பெண் நிந்தனைதானே பெருத்திருக்கிறது? ஆத்ம வாழ்வுக்கும், ஒழுக்கத்திற்கும் பெண் ஒரு இடையூ றென்று ஆதிமுதல் அந்தியம் வரைகவிகள் வாயார வைதுதானே இருக்கிருர்கள்? பாரதிதான் தைர்யமாகத் தலை யெடுத்து நின்று பெண்ணைப் புகழ்ந்தார். பெண்மையைப் போற்றும் முதல் கவியே அவர்தான் என்று சொல்லவேண்டும்.

யாருமே காணுத பெண்மையை அவர் எவ்வாறு கண்டார்? சக்தியே ஒரு புதுமைப் பெண்ணுக அவர் கனவில் காட்சி கொடுத்தாள். பாரதி அதை நமக்குத் தன் கவிதையில் சொல்லுகிருர்.

பாரதியின் தரிசனத்தின்படி சக்தியினுடைய மூன்று அம்சங்களில் ஒருத்தி பெண் சக்தி யென்பதை பாரதி விளக்கியிருப்பதைப்பற்றி இங்கே விஸ்தரிக்க முடியாது; ஆனல் தாயும், தலைவியாகவுமிருக்கும் பெண்ணும், தாய் நாடாகிய பாரத பூமியும் பராசக்தியாகிய ஆதிசக்தித்தாயும் சக்தியின் மூன்று பிரிவுகள் என்று அவர் கொண்டதாகப் அவருடைய கவிதையின் மூலம் விளங்குகிறது.

இதுவரையிலும் வாழ்க்கையிலும் இலக்கியத்திலும் நாம் பெண்மையின் பாதியிடத்தை அதற்கு அளிக்காமல் மறுத்து வந்திருக்கிருேம். நமது வேதாந்தத்தில் மட்டும் பெண்ணின் பாதி ஸ்தானத்தை அர்த்தநாரி என்ற கொள்கையில் ஒப்புக்கொண்டு வாழ்க்கையில் நாம் அதை நிராகரித்து விட்டோம். ஆனல் நாலு வேதங்களும் நடைமுதலில் இருந்த காலத்திலே, தவப் பெரியாரின் வாழ்வுகளிலே பெண் ஆணின் பாதி அம்சம் என்பது பொதுவாகப் பழக்கத்தில் ஒப்புக்கொண்டிருந்த சித்தாந்தம்.

பாரத நாடு வீழ்ச்சி யடைந்தபொழுது, பாரத சக்தி ஒளி குன்றிப்போன பொழுது பெண்மையின் பொலிவும் மறைந்தது. பெண் தெய்வமும் தன் அறிவையும், அழகையும், ஆற்றலையும் மறந்து, வெறும் வீட்டு வேலை செய்யும் அடிமையாக மாறினள். அது ஆணின் ஆதிக்கமென்ற குற்றத்தால் மட்டுமல்ல; பெண்ணின் பிற்காலப் பேதமைகூட அதற்குக் காரணமாயிற்று.

ஆனல் இப்பொழுது பாரதியின் கவிதையிலும், இந்திய வாழ்க்கையிலும் புதுமைப் பெண் பளிச்சென்று தலை யெடுத்துவிட்டாள். அடிமைச் சேற்றி லிருந்து 'தாமரை' யைப்போல புதுமைப் பெண் உதயமாகிவிட்டாள். அவள்தான் உதய கன்னி!

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்

செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்
அமிழ்ந்து பேரிரு ளாம றியா மையில்
அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்
உதய கன்னி யுரைப்பது கேட்டிரோ!

புதுமைப் பெண் என்ன செய்வாள்?

சாத்திரங்கள் பலபல கற்ப ராம்
சவுரியங்கள் பலபல செய்வராம்
மூத்த பொய்மைகள் யாவு மழிப்பாராம்
மூடக்கட்டுகள் யாவுந் தகர்ப்பராம்.

. . . .

பராசக்தியே மாந்தர் தம்மை அமரர்களாக்கவும், வையத்தைப் புதுமையுறச் செய்யவும் புதுமைப் பெண்ணாகத் தோன்றிவிட்டாள்!

மாதர்கள் புத்துணர்ச்சி பெற்றுவிட்டார்கள். பாரதியின் அபிப்பிராயத்தில் இந்தப் புதுமைப் பெண், வெறும் மேல் நாட்டு நாகரிகத்தின் வார்ப்புப் புதுமையாக மட்டு மில்லாமல் நமது நாட்டின் பழைய பெருமையும் ஊறி, அதன் அழகிய அம்சங்களையும் அணிகளாக அணிந்து விளங்கவேண்டும். ஆரியப் பெண்களின் குதூஹலக் கும்மி, தமிழ் நாட்டையே குலுங்கச் செய்ய வேண்டுமாம்!

நம் நாடே புத்துயிர் பெற்று 'பிறந்த நாள்' கொண்டாடும் இப்பொழுது புதுப் பெண்கள்கூடி,

நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோ மென்று கும்மியடி
வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோ மென்று கும்மியடி
சாதம் படைக்கவுஞ் செய்திடுவோம் தெய்வச்
சாதி படைக்கவும் செய்திடுவோம்.

என்று பாடிக் கும்மியடிக்கின்றனர்.

ஆகவே, பாரதியின் கொள்கைப்படி பெண், ஆணுக்கு ஒரு துணைவியா யிருப்பவள் என்பதால் மட்டும் தன் முழு வேலையைச் செய்தவ ளாகமாட்டாள். பெண் ஆணுக்காக மட்டும் பிறந்தவளல்ல. தனக்காகவும் பிறந்தவள். அவளுக்கும் தனி உயிரும் உணர்ச்சிகளும் உண்டல்லவா? அவைகள் போகும் வழி யென்ன? அவற்றிற்கு ஒரு மார்க்கம் வேண்டாமா? அவைகள் ஆண் சேவையில் அப்படியே அமுங்கி அழிந்து போவதா—இவ்வளவு நாட்களாகப் போனதுபோல?

கூடாது என்கிறார் பாரதி உறுதியாக. பெண்ணும் தன் இயல்பைத் தனியாக வளர்க்கவேண்டும். அதன் சக்திகளும் மலர்ச்சி யடையவேண்டும். அது பெண்மையின் விடுதலை யென்பது மட்டுமல்ல; ஆண்மைக்குப் புதிய பலம். பெண் விடுதலையால் பெண்மை மட்டும் பயனடையவில்லை. ஆண்மையும் பயனடைகிறது. ஆகவே நாடே நன்மை பெறுகிறது.

புதுமைப் பெண் பாரதியின் கனவுப் பிரகாரம் ஆண்மையின் அடிகளைக் கண் மூடித் தனமாகப் பின்பற்ற மாட்டாள். தன் பெண்மைக் குணங்களை மறக்க மாட்டாள். தன் இயற்கைக்கு விரோதமான வாழ்க்கையைக் கைக்கொள்ளவும் மாட்டாள். தான் எப்பொழுதும் தாய், தான் எப்பொழுதும் காதலி யென்பதை மறக்க மாட்டாள். அதுதான் அவளது பெருமை. அதனால்தான் எந்நாளும் மனிதனுக்கு ஒரு தூண்டுதலாகவும், துணையாகவும் இருந்து, சுதந்திர வாழ்வில் சம பங்கு கொண்டு இன்பம் கொடுத்து இன்பம் பெறுவாள்.



சம்பந்தம்

[ஆ. வே. ஜெயராமன்]

காவிரி யாற்றில் வெள்ளம் இருகரையும் முட்டிச் சென்றுகொண்டிருந்தது. அக்கரையின் பசும்புல் தரையும், சோலையும், தோப்புகளும் அந்திச் சூரியன் செங்கதிரால் அலங்கரிக்கப்பட்டுச் சுவரில் தீட்டிய ஓவியத்தை ஒத்திருந்தன. ஆற்றங்கரையில் பள்ளி மாணவர்கள் ஹாக்கி, கால் பந்து முதலிய விளையாட்டுகள் விளையாடிக்கொண்டிருந்தனர். சம்பந்தம் கரையில் உட்கார்ந்துகொண்டு தண்ணீரில் காலைவிட்டு ஆட்டிக்கொண்டிருந்தான். அவன், பக்கத்தில் கல்லுப் பிள்ளையார் போல உட்கார்ந்திருந்த சுந்தரத்தை அடிக்கடி வெறுப்புடன் நோக்கினான். அவன் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து ஒரு மாதமாகியும் எவனுடனும் அன்னியோன்னியமாகப் பழகினானில்லையே என்பதுதான் சம்பந்தம் அவன்மேல் கோபம் கொண்டதற்குக் காரணம்.

“மாடுகள்” என்று அழுதுகொண்டே கத்தினான் சுந்தரம்.

சம்பந்தம் வெறுப்புடன் அவனைத் திரும்பிப் பார்த்தான்.

“இம்மாதிரி அழுதுகொண்டேயிருந்தால் எல்லோருந்தான் உன்னைப் பார்த்து விழுந்து விழுந்து சிரிப்பார்கள்” எனக் கூறினான்.

“வாத்தியார் உன்னிடம் மற்ற பையன்கள் என்னை அடிக்காமலும் என் குச்சியை எடுக்காமலும் பார்த்துக்கச் சொல்லலையா? நீ என்னை சரியாப் பார்த்துக்கிறதில்லை. நான் வாத்தியாரிடம் சொல்லப்போரேன்.”

இதைக் கேட்டதும் சம்பந்தத்தின் முகம் வெளுத்தது.

“நீ ஒன்றையும் வாத்தியாரிடம் சொல்லக் கூடாது. அது பயந்தாங் கொள்ளித்தனம்.”

“ஏன் நான் சொல்லக் கூடாது?”

“வாத்தியாரிடம் சொன்னால் அடியும் உதையும் அதிகமாக விழும்.”

“அவன்கள் மட்டும் மறுபடியும் அடிக்கட்டும் நான் சொல்லாமல் இருக்கிறேனா பார்.”

ஆற்றங்கரை ஹிந்து மத பாடசாலை பிரசித்தமானது. இப் பாடசாலை ஏழைகளுக்கென்றே ஒரு ஊழியரால் சிருஷ்டிக்கப் பட்டது. இருந்தும் அக்கம் பக்கத்திலுள்ள தனவந்தர்களுடைய பிள்ளைகளும் அங்கு வசித்தனர். அவர்களில் சந்தரமும் ஒருவன். சுந்தரம் வந்து சேர்ந்ததும் தலைமை வாத்தியார் சம்பந்தத்தைக் கூப்பிட்டு “சம்பந்தா, சுந்தரம் பணக்கார வீட்டுப் பிள்ளை. பள்ளிக்கூடம் எப்படியிருக்குமென்பதை அறியான். நீ பெரிய பையன்களுள் ஒருவனாதலால் அவனைப் பார்த்துக்கொள்ள வேண்டியது உன் பொறுப்பு” என்றார். இதைச் சம்பந்தம் பெருமையாக எடுத்துக் கொண்டான். தலைமை வாத்தியார் தன்னிடம் வைத்திருக்கும் நன் மதிப்பை யெண்ணி யெண்ணிப் பெரு மகிழ் வெய்தினான்.

தலைமை வாத்தியார் கூறியசமயம் பின்னால் விளையப் போகும் கஷ்டங்களைச் சிறிதும் எண்ணாமல் ஒத்துக்கொண்டான். சம்பந்தம் சுந்தரத்தை மாணவர்கள் தொந்தரவு படுத்தினால் என்ன செய்வது என்ற கவலை சம்பந்தத்ததை மிகவும் வாட்டியது. வருகிற போகிற மாணவர்கள் சுந்தரத்தின் தலையிலடித்தும் காதைப் பிடித்துத் திருகியும், கேலி பண்ணியும் அவனைப் பல தொந்தரவுகளுக் குள்ளாக்கினார்கள். முடிந்த வரையிலும் சம்பந்தம் அவனை எதிர்த்துப் பார்த்தான். ஆனால் அவனொருவனால் அக் கூட்டத்திற்கு வழி சொல்வதெப்படி? அதல்லாமல் ‘கோல்

கீப்பர்' கோபாலனிடமும் வஸ்தாது வரதனிடமும் பகைத்துக் கொள்ள முடியுமா?

ஹாக்கித் தலைவன் வரதன் என்றாலும், 'கோல்கீப்பர்' கோபாலன் என்றாலும் பள்ளிச்சிறுவர்கள் நடுநடுங்குவார்கள். போகும் பொழுதும் வரும் பொழுதும் அவர்கள் கைகள் சும்மாயிராது. சிறுவர்களுடைய காதுகளைத் திருகிக்கொண்டே செல்லும். சத்தம் போட்டால் மண்டையில் குட்டும் அடியும் வட்டியாக விழும். கோபாலனிடம் சென்று "கோபாலா, இனிமேல் நீ சுந்தரத்தைத் தொடக்கூடாது" என சம்பந்தம் கூறுவானென்று சுந்தரம் எதிர் பார்த்தான்.

"வாத்தியார் உன்னிடம் என்னை விடாமல் பார்த்துக்கச் சொல்லல்லியா? நீ இங்கே இல்லாட்டா எப்படி என்னை பாத்துக்குவே, எனக்கூறினன் சுந்தரம்."

"வாத்தியார் வாத்தியார்ன்னு அடி அதிகமாக விழும்" என்று எரிச்சலுடன் கூறினன் சம்பந்தம்.

சுந்தரம் புல்லைக் காலால் உதைத்துக் கொண்டிருந்தான். அவனுக்கு அழுகையும் கோபமும் மாறி மாறி குமுறிக் கொண்டு வந்தன.

"இதோ பார்! இனிமேல் என்னோடு கூடக் கூட வர உன்னை விடமாட்டேன். வாத்தியார் சொன்னரே யென்று உன்னைக் கூடியவரையிலும் பார்த்துக்கொள்கிறேன். இல்லாவிட்டால் எல்லோரும் அடிக்கவும் உதைக்கவும் உன்னை விட்டிருப்பேன். பிறகு வாத்தியார் கிட்டவும் சொல்லலாம்; செம்மையா உதையும் வாங்கிக்கொள்ளலாம். ஆனல் நீ அழாமலும் கத்தாமலும் வேணுமென்ற பொழுது என்னிடம் வந்தால் உனக்கு நான் உதவி செய்வேன். வரதன் உன்னை உதைத்தால் நீ பட்டுக்கொள்ளத் தான் வேண்டும். அவன் எல்லோரையுந்தான் அடிக்கிறன். அவனிடம் என் பாச்சா பலிக்காது," என்று சரமாரியாகப் பொழிந்தான் சம்பந்தம்.

அவனுடைய குரலில் கோபமும் வெறுப்பும் தொனித்தன. சுந்தரம் இதைக் கேட்டதும் நடு நடுங்கிவிட்டான். சம்பந்தத்தின் முகத்தை ஏறிட்டுப்பார்க்கப் பயந்து குனிந்துகொண்டே "சரி, இனி மேல் உன்கூட நான் வரமாட்டேன்" என்று மெள்ளக் கூறினன்.

அன்றிருந்து சுந்தரம் சம்பந்தத்தைத் தொடர்வதில்லை. ஆனல், சம்பந்தத்தின் மனம் அலைபோல எழுந்து மோதிச் சிதறியது. உணர்ச்சி அச் சிறுவனுடைய உள்ளத்தில் தாய்க்கிருக்கும் ஓர் அன்பை உண்டு பண்ணியது. அன்று அவனிடம் மிருகத்தனமாய் நடந்து கொண்டதை எண்ணி யெண்ணி மனக் கலக்க மடைந்தான்.

மறுநாட் காலையில் ஆகாரஞ் செய்து விட்டு நேராகச் சுந்தரத்தினிடம் சென்றான்.

சுந்தரம் வெளித் தாழ்வாரத்தில் உட்கார்ந்துகொண்டு ஆழ்ந்த சிந்தனையி லிருந்தான்.

"சுந்தரம் சாப்பிட்டாய் விட்டதா?" என்று கேட்டான் சம்பந்தம்.

"ஆய்விட்டது" என்று சொல்வதற்குப் பதிலாகத் தலையைப் பலமாக ஆட்டினன் சுந்தரம்.

அவன் சரியாகப் பேசாதது கண்டு சம்பந்தத்தின் மனம் புண்பட்டது. "இன்றைக்கு உன்னை மலைக்கு அழைத்துக்கொண்டு போகப் போகிறேன்" என்றான் மறுபடியும்.

அதற்கும் அவன் ஒன்றும் சொல்லவில்லை.

"என்மேல் கோபமா? ஏன் பேசமாட்டேனென்கிறாய்?" என்று அவன் கையைப் பிடித்துக்கொண்டே தழதழத்த குரலில் கேட்டான்.

சுந்தரம் அவன் முகத்தையே பார்த்துக்கொண் டிருந்தான்.

"சுந்தரம், சுந்தரம், நீ என்னோடு எப்பொழுதும் வரலாம். நான் இனிமேல் கோபித்துக்கொள்ள வில்லை. வா, குளிக்கப் போகலாம்," என்று கூறிக்கொண்டே அவனை அழைத்துக்கொண்டு சென்றான்.

"கோபு, நம்ப சுந்தரத்தையும் விளையாட்டில் சேர்த்துக்கொள்ள வேண்டும்"

என்று சம்பந்தம் வழியில் சந்தித்த கோல் கீப்பர் கோபாலனிடம் கூறினன்.

"இந்தப்பன்னிக் குட்டியையா!" என்று சொல்லிக்கொண்டே நாய்க் குட்டியைக் காதைப் பிடித்துத் தூக்குவதே போல சுந்தரத்தின் காதைப் பிடித்துத் தூக்கினன்.

சிட்டியடித்துக் கொண்டே அங்கு வந்த வரதன் "எலே, காதைப் பிடித்துத் தூக்காதேடா, பாவண்டா!" என்று இரக்க சிந்தனையுள்ளவன் போலச் சொன்னன்.

"வரதா இந்தப் பன்னிக் குட்டியை விளையாடச் சேர்த்துக்கொள்ள வேண்டுமாம், சம்பந்தம் சிபார்சு பண்ணுண்டா!"

"விளையாடட்டு மேடா, அவன் என்ன தாழ்த்தி நாக்குட்டிப் பயகளெல்லாம் விளையாட ரத்தே."

அன்று முதல் சுந்தரமும் ஹாக்கி விளையாட ஆரம்பித்தான். நான்கு மாதங்களுக்குள் அவ் விளையாட்டில் அவன் தேர்ந்துவிட்டான். இதைப் பார்க்கப் பார்க்க சம்பந்தத்திற்கு வியப்பும் சந்தோஷமும் உண்டாயிற்று.

* * *

அன்று பொங்கல் விடுமுறை. பள்ளிக்கூட விடுமுறை. அன்று வரதன் கக்ஷிக்கும் கோபாலன் கக்ஷிக்கும் ஹாக்கி விளையாட்டுப் பந்தயம். நான்கு மணி எப்பொழுது அடிக்கப் போகிற தென்று எல்லோரும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். இரு கக்ஷிகளும் பலமாகவே இருந்தன. சுந்தரமும் சம்பந்தமும் எதிரும் புதிருமாக நின்றுகொண்டிருந்தனர்.

மணி நான்கடித்தது. விளையாட்டும் ஆரம்பித்தது. இரு கக்ஷிகளும் அரை மணி நேரம் சளைக்காமல் விளையாடிக்கொண்டிருந்தனர். நேரம் ஆக ஆக சுந்தரத்திற்கு உற்சாகம் அதிகரித்தது. பொசுக்கென்று அவன் ஓர் கோல் போட்டான். இரண்டாவது கோல் எதிர்க் கக்ஷி மூர்த்தி போட்டான்; பிறகு ஆட்டம் அயர்ந்து தூங்கியது.

ஆட்டத்தின் நடுவில் பந்து சுந்தரம் கையில் சிக்கியது. அவன் அதைக் கோலுக்குக்கொண்டே போய்விட்டான், அவன் கக்ஷி ஜயித்தது. கூட்டத்தில் "சக்கலாட்டா!" சுந்தரம் பிசுக்காட்டம் ஆடராண்டா, ட்ரில் வாத்தியார் அவனுக்கு விட்டுக் கொடுக்கிருர்டா" என்ற பேச்சு தான் எங்கும்.

சென்ற மூன்று வருஷங்களாக நகரி செட்டியார் பள்ளிக்கூடம் ஹாக்கி விளையாட்டில் ஜயித்துக்கொண்டே வந்தது. ஆனல் இவ் வருஷம் சுந்தரம் பள்ளிக்கூடத்தின் மானத்தைக் காப்பாற்றுவான் என்று பீமராவ் திடமாக நம்பினர்.

அவ் வருஷ விளையாட்டுப் பந்தயம் மாரியம்மன் களத்தில் நடந்தது. சுற்று வட்டத்திலுள்ள ஜனங்கள் அங்கே குழுமிவிட்டனர். ஆட்டமும் ஆரம்பித்தது.

இரு கக்ஷிகளும் பலமான கக்ஷிகள். ஒருவருக் கொருவர் சளைக்காமல் சண்டையிட்டனர். செட்டியார் பள்ளிக்கூட மாணவன் கண்ணன் ஹாக்கியில் தீரன். அவன் கையில் அகப்பட்டது பந்து. அப் பந்தை அவன் காற்றிலேயே தூக்கிச் சென்று கோலில் போட்டான். இதை எங்கும் தவிர்க்க முடியாது என்பது எல்லோரும் அறிந்த விஷயம். ஒரு கோல் விழுந்ததும் பீமராவ் முகத்தில் ஈயாடவில்லை. செட்டியார் பள்ளிக்கூட மாணவர்கள் கை தட்டியும், கத்தியும், ஆகாயத்தில் எழும்பியும் ஆர்ப்பாட்டஞ் செய்தனர். "வெட்கம் வெட்கம்" என்று கொக்கரித்தனர்.

திடீரென்று பந்து சுந்தரத்தின் கையில் சிக்கியது. பழத்தைக் கௌவியோடும் முயலைப் போல சுந்தரம் பந்துடன் சிட்டாய்ப் பறந்தான். எவராலும் அவனைத் தடுக்க முடியவில்லை. எதிர்க்கக்ஷியார் பிரமித்துவிட்டனர். ஹிந்து மத பாடசாலை மாணவர்கள், "சுந்தரம் ஓடு, ஓடு கோல்" எனத் தொண்டையைக் கிழித்துக்கொண்டு கத்தினர்கள். பீமராவ் முகம் மலர்ந்தது. சப்தம் அலை இரைச்சலைப் போலக் கிளம்பி ஓய்ந்தது.

அடுத்த ஐந்து நிமிஷத்தில் வரதன் ஓர் கோல் போட்டான். இதற்குப் பதில் எதிர்த்த கக்ஷி பெருமாள் செய்துவிட்

டான். இன்னும் பத்து நிமிஷங்கள் இருந்தன. அதற்குள் ஆட்டம் முடிவடைய வேண்டும். அங்கிருப்பவர்களின் மார்பு படக் படக்கென்று அடித்துக் கொண்டது.

சுந்தரம் மனம் வைத்து விட்டான். பந்தும் கையில் சிக்கியது. கற்கோட்டையை உடைத்துச் சென்று கர கோஷத்தினிடையே ஒரு கோல் போட்டான். மணியும் அடித்தது!

"சுந்தரத்துக்கு ஜே" என்ற கோஷம் ஆகாயத்தை முட்டியது. சந்தோஷ மிகுதியினால் சிலர் அவனைத் தூக்கிக் கொண்டு ஊர்கோலஞ் சென்றனர். பீமராவ் அவன் கையைக் குலுக்கினார்! தலைமை வாத்தியார் நெற்றி வியர்வையைச் சந்தோஷத்துடன் துடைத்துக் கொண்டார்.

பல நாட்கள் சென்றன. ஒரு நாள் மாலை சம்பந்தம் நதியிலிருந்து வரும்பொழுது "கொடுக்கிறாயா. இல்லையாடா?" என்ற குரல் கேட்டது. அது சந்தேகமில்லாமல் சுந்தரத்தின் குரல்தான் என்று நிச்சயித்துக்கொண்டு அங்கு சென்றான்.

"இப்பொழுதாவது கொடுக்கிறாயா, இல்லையா?" என்றுகேட்டுக்கொண்டே புதிதாக வந்து சேர்ந்த ஒரு சிறுவன் கையைச் சுந்தரம் முறித்துக்கொண் டிருந்தான். இதைக் கண்ட சம்பந்தத்திற்குக் கோபம் பொங்கியது. சுந்தரத்தின் கையைப் பிடித்திழுத்துக் கன்னத்தில் அறைந்தான்; கையையும் திருகினான். சுந்தரம் அவன் கையைக் கடிக்கப் பார்த்து முடியாமல், "நான் வாத்தியார் கிட்ட சொல்லுகிறேன் வா" என்று அழுதுக்கொண்டே கூறினான்.

"நீ சொன்னால் எனக்குப் பயமில்லேடா, சொல்லுடா போய்" எனச் சீறினான் சம்பந்தம்.

அன்று மாலை சம்பந்தன் தலைமை உபாத்தியாயரைக் கண்டதும், அவர், "என்ன சம்பந்தா, சுந்தரம் நன்றாக ஊன்றிவிட்டான்போலிருக்கிறதே" என்று கேட்டார்.

	ரூ.	அ.
அரவிந்தரும் அவரது யோகமும் by P. கோதண்டராமன்	0	9
யோகம் செய்ய வேண்டுமா? do	1	0
ஸ்ரீமத் பகவத் கீதாதாத்பர்ய நிர்ணயம் by D. அருணாசல சாஸ்திரிகள்	1	0
பாலகாண்டம் (இராமாயணம்) by T. N. சேஷாசலம்	2	0
ஸ்ரீ உவாஸனி விஜயம் by S. ராஜம்	0	6
ஜவஹர்லால் நேரு—சுய சரித்திரம்	3	0
His Holiness Sri Sankaracharya Swami of Kamakoti Peetam by Paul Brunton	0	5
Conversations on Yoga by Swami Sivananda	1	0
Practical Lessons on Yoga do	4	0

புத்தகங்கள் கிடைக்குமிடம்:

பி. ஜி. பால் அண்டு கம்பெனி.

புத்தக வியாபாரிகள்,

பிரான்ஸிஸ் ஜோஸப்பு தெரு, சென்னை.

குழந்தை பராமரிப்பு

[ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாஸன்]

ஸார், போஸ்ட், போஸ்ட் !

கதவு திறக்கப்பட்டது. ராமுவும் தபால்காரன் கொடுத்துச் சென்ற கவரை உடைத்துக் கடிதத்தைப் பிரித்துப் படித்துப் பார்த்துவிட்டு கூடத்திலிருந்த நாற்காலியொன்றில் "தொப்" என்று உட்கார்ந்தவனாய் யோசனையிலாழ்ந்தான்.

சமயலறையில் காரியமாக இருந்த சீதம்மாள் தபால்காரன் குரலைக் கேட்டவுடன் ஓடிவந்து "யாரிடமிருந்து கடிதம் வந்ததுடா ராமு? என்டா இப்படி விசாரப்பட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கே?" என்று மகனை விசாரித்தாள்.

ராமு "உனது நாட்டுப் பெண்ணை நாளை காலம்பர ரையிலில் அழைத்துக் கொண்டு வந்துவிடுவதாக உனது சம்பந்தியிடமிருந்துதான் கடிதம் வந்திருக்கிறது" என்றான் அருவருப்புடன்.

சீதம்மாள்: "நன்னாக இருக்கு. சிரித்துக் கொண்டு சந்தோஷமாக சமாசாரத்தை வந்து தெரிவிப்பதை விட்டுவிட்டு, என்ன விசாரப் பட்டுண்டு உட்கார்ந்திருக்கிறாய்? சம்மந்தி பிராமணர் இன்னும் என்ன எழுதியிருக்கிறார்?"

"இன்னும் ஒன்றையும் காணோம் அவருக்கு லீவ் அகப்படவில்லையாம். விமலாவை அழைத்து வந்து விட்டுவிட்டு அடுத்த ரயிலிலேயே ஊருக்குத் திரும்பி விடுகிறாராம். விமலா தனக்கு வேண்டிய சாமான்களின் பெரிய பட்டி ஒன்றை எழுதி அவைகளனைத்தையும் வாங்கிவைக்க வேண்டுமென்று எழுதியிருக்கிறாள்."

சீதம்மாள் "இளங் குழந்தையை எடுத்து வருகிறாள் பாவம்! எல்லாவற்றையும் மறக்காமல் வாங்கிவா. உன் ஆபீஸ் ரூம் விசாலமாகவும் நல்லகாற்றோட்டமாகவுமிருக்கிறது. அந்தப் பெட்டிகள் அடுக்கியிருக்கும் அறையிலேயே ஒருபுறம் ஆபீஸ் மேஜையைப் போட்டுக்கொண்டு விடு. இளங்குழந்தைக்கு நல்ல காற்றோட்டமான உள்ளாக இல்லாவிட்டால் கஷ்டம். இன்னிக்கு விமலா எழுதி யிருக்கும் சாமான்களை வாங்கி வருவதற்கு எப்படியும் டௌனுக்குப் போகிறாயே. அப்படியே தொட்டில் கட்டும் கொக்கி முறிஞ்சு போயிருக்கு. அதையும் வாங்கி வந்து அந்தப் பெரிய அறையில் முடுக்கிவிடு. பிள்ளை பெத்தாள் வருகிறாள். சாயப் பாக்கு ஒரு வீசையும், கினிஞ்சல் சுண்ணாம்பு இரண்டு அணா விற்கும், நல்ல இளசான வெற்றிலை ஒரு கட்டும் வாங்கிவா. இன்னும் என்னென்ன வேண்டுமென்பதை அப்புறம் வந்து சொல்கிறேன்." என்று கூறியவாறே சமயலறைக்குச் சென்றுவிட்டாள்.

"சரி நீயும் ஒரு பெரிய பட்டி அடுக்கிவிடு. இன்றைய டென்னிசிற்கு மண்தான். குழந்தை பிறப்பதற்கு முன்னால், அதற்கு ஸாக்ஸ் பின்னுவதற்கு நூல், பாலில் கலந்து குடிப்பதற்கு இவளுக்கு கேசரி, குல்லா பின்னுவதற்கு ஸ்பெஷல் ஊசி வேண்டும் என்று விமலா தினம் டௌனிற்கு துரத்திக்கொண்டிருந்தாள். இப்பொழுதோ சொல்ல வேண்டியதே இல்லை. காலையும், மாலையும் தினம் டாக்டர் வீட்டிற்கும், டௌனிற்கும் அலைவது தான் என் பிழைப்பு." என்று முணு முணுத்தவாறு ராமு குளிப்பதற்குச் சென்றான்.

மறு நாள் காலை வண்டியில், விமலாவின் தகப்பனார், அவளையும், அவளது மூத்த குழந்தையாகிய தாராவையும், இளைய கைக் குழந்தையாகிய ஸ்ரீதரனையும் அழைத்து வந்து ராமுவின் வீட்டில் விட்டுவிட்டு ஊருக்குத் திரும்பிச் சென்றுவிட்டார். விமலா தன்னுடன் எடுத்து வந்த சாமான்களை வைப்பதற்கு ராமு தனது தாயாரின்

கட்டளேப்படி ஒழித்து வைத்திருந்த அந்தப் பெரிய அறைகூடப் போதவில்லை. ராமு, அந்த அறையில் ஒரு மேஜையும் விமலாவிற்கும் தாராவிற்கும் இரண்டு கட்டில்கள், கைக்குழந்தைக்கு ஒரு தொட்டில் இவ்வளவு சாமான்கள் மட்டும் ஜோடித்திருந்தான். ஆனல் விமலாவிற்கு அந்த ஒரு மேஜை போதவில்லை. குழந்தையின் பால் புட்டி முதலியவைகளைக் கொதிக்க வைக்கும் பாத்திரம், லேக்டோஜன் டப்பா, 'க்ளூ, கோஸ்' டப்பா, 'காட்லிவர் ஆயில்' 'சர்க்கரை டப்பா' தர்மாஸ்ப்ளாஸ்க் முதலிய சாமான்கள் வைப்பதற்கு ஒரு மேஜையும், குழந்தையின் சாமான்கள் வைப்பதற்கு ஒரு மேஜையும், தான் குடிக்கும் டானிக்குகள், மருந்துகள், தாராவின் டானிக் முதலிய சீசாக்கள் வைப்பதற்கு ஒரு மேஜையும் ஆக மொத்தம் மூன்று மேஜைகளை விமலா அந்த அறையில் கொண்டுவந்து ஜோடித்துக் கொண்டாள்.—கைக் குழந்தையின் துணி மணிகள் நிறைந்த பெட்டி யொன்று, புதிய துணி மணிகள் நிறைந்த பெட்டி, குழந்தையின் அழுக்குத் துணிகளைப் போடுவதற் கொரு பிரம்புக் கூடை, மருந்துப் பெட்டி, தையல் பெட்டி, இவைகளை ஜோடிப்பதற்கு ஒரு நீண்ட பெஞ்சி. இதேபோல் நாகரிக வழியில் ஏற்படுத்திய தாராவின் சாமான்கள், குழந்தைக்கு இரவு நேரத்தில் விரிப்பதற்குப் பெருத்த மெத்தை, மத்தியானப் பொழுதில் விரிக்கும் மெல்லிசான ரஜாய் சால்வை, கை வண்டியில் விரிப்பதற்காக வென்றே பிரத்தியேகமாக ஒரு மெத்தை. விளையாட்டுச் சாமான்கள் நிரப்பிய கூடை முதலியன அடுக்குவதற்கு ஒரு நீண்ட பெஞ்சி—இவ்வளவு சாமான்களையும் அவ்வறையில் அடக்கவேண்டிய கடமை ராமுவுடையதாயிற்று. இவ்வளவு வேலைகள் செய்வதற்குள் ராமுவிற்குக் கச்சேரிக்குச் செல்ல நேரமாய்விடவே அவன் குளிப்பதற்குச் சென்றுன்.

அவன் குளித்து விட்டுவருவதற்குள், குழந்தையின் அறையில் ஒரே கூப்பாடாக விருந்தது. என்னவென்று ராமு பயந்து போய் ஓடிவந்து பார்த்தான். விமலா குழந்தைக்குப் பால்புட்டியில் பால் புகட்டிக்கொண் டிருந்தாள். மற்றவர்கள் குழந்தை பால் குடிப்பதற்காக விளையாட்டுக் காட்டிக்கொண் டிருந்தார்கள். சீதம்மாள் ஒரு கையில் ஒரு தாம்பாளத்தை பிடித்துக்கொண்டு மற்ருெரு கையில் ஒரு கரண்டியைப் பிடித்து தாம்பாளத்தில் அடித்துச் சப்தம் செய்துக்கொண் டிருக்க, தாரா "தட்டா மாலே" சுற்றிக்கொண் டிருந்தாள். வீட்டில் வேலே செய்யும் குட்டி கதவின் நாதாங்கியை "டப, டப" வென்று தட்டிச் சப்தம் செய்து கொண் டிருந்தாள். இவ்வளவு சம்பிரமம் போதாதென்று விமலா இடக்கையில் ஓர் கிலி கிலிப்பியைப் பிடித்து ஆட்டிய வண்ணம் வாயில் பாடிக்கொண் டிருந்தாள்.

"கன்னுயிருக்கு நீ பால் போட்டும் அழகு! அண்டை அயல் வீட்டார் இந்த 'கலாட்டாவைக்' கேட்டால் என்ன நினேப்பார்கள்?" என்று சிரித்தான் ராமு.

"இல்லாவிட்டால் உங்கள் குழந்தை டைமிற்கு சரியாகப் பால் குடிக்க மாட்டேன் என்கிறுன். என் பிறந்தகத்தில் என் தங்கை, தம்பிமார்க ளனேவரும், அவன் பால் குடிப்பதற்கு விளையாட்டுக் காட்டிக் காட்டி அதே வழக்கமாய்விட்டது. ஆபீஸிலிருந்து வரும்பொழுது, அப்படியே டௌனிலிருந்து கொஞ்சம் 'வேபோரப்' வாங்கி வாருங்கள். குழந்தை தும்புகிறுன். ரயிலில் வந்ததில் ஜல தோஷம் பிடித்துவிட்டது. அப்படியே கொஞ்சம் டாக்டரையும் அழைத்து வந்தால் தேவலே."

"குழந்தை ஒரு தடவை தும்பினதற்கே இப்படி பயந்துவிட்டால் எப்படி விமலா? பார்க்கலாம். அம்மா, பரமார வாயேன். ஆபீஸுக்குப் போக ரொம்ப நாழிகை யாய்விட்டதே."

"நன்ன சொன்னீர்கள். குழந்தையை வளர்க்கும் விஷயம் உங்களுக்கென்ன தெரியும். சளியை எப்பொழுதும் திரஸ்கரிக்கப்படாது. இப்படிப் பாருங்கள். குழந்தையின் காலில் சிரங்கு வரும்போல் இருக்கிறது. சாயங்காலம், வரும் போது

ஒரு குட்டிக்குரா ஆயின்ட்மெண்டு டப்பாவையும் ஒரு குட்டிக்குரா ஸோப்பையும் வாங்கி வாருங்கள் மறந்து விடாதீர்கள். ஒரு காகிதத்திலாவது எழுதி ஜோபில் வைத்துக் கொள்ளுங்கள்."

ராமு குழந்தை காலே பிடித்துப் பார்த்து விட்டு "போடி பைத்தியமே! சிரங்கையும் காணோம், ஒன்றையும் காணோம் எறும்பு கடித்திருக்கிறது! அவ்வளவு தான்" என்று சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டு அவசர அவசரமாகச் சாப்பிடச் சென்றான்.

அன்று சாயங்திரம் ராமு கச்சேரியிலிருந்து நேராக டௌனிற்குச் சென்று கடை வீதியில் வாங்க வேண்டிய சாமான்களை வாங்கிக்கொண்டு வீடு வந்து சேர மணி ஆறு அடித்துவிட்டது. அப்பொழுது விமலா குழந்தையைத் தூங்கப் பண்ணிக்கொண்டிருந்தாள். சந்தர்ப்பத்திற்குத் தகுந்தாற்போல் ராமுவும் சத்தம் செய்யாமல் உடுப்பை மாற்றிக்கொண்டு சமயலறைப் பக்கம் சென்றான். அவன் சென்ற ஐந்து நிமிஷத்திற் கெல்லாம் தாரா சமையலறையிலிருந்து இரும்பிக்கொண்டு ஓடி வரவே அவள் இரும்புவதைக் கண்டு விமலாவிற்கு நிரம்ப பயமாய்விட்டது. மடியில் தூங்கிக்கொண்டிருந்த கைக்குழந்தையை உடனே தொட்டிலில் விட்டுவிட்டு ஓடிவந்து தாராவை எடுத்துக்கொண்டு "என் கண்ணே! ஏம்மா இப்படி இரும்புகிறாய். ரயில் அலேச்சல் தாங்கவில்லே. கொஞ்சம் தர்மாமீடராகிலும் வைத்துப் பார்க்கிறேன்" என்று சொல்லிக்கொண்டு படுக்கையை விரித்து தாராவை அதில் படுக்கவைத்துவிட்டு, அவள் வாயில் தர்மாமீடரை வைத்துப் பார்த்தாள். ஜுரம் நூறு டிகிரி ஏறி இருந்தது! விமலாவின் சுபாவமே சற்று பயந்த சுபாவம். அதுவுமன்றி அவளது தகப்பனர் ஹெல்த் ஆபீஸராதலால் அடிக்கடி சிசு பராமரிப்பு, ரோக நிவாரணே முதலிய விஷயங்களேக் குறித்துப் பிரசுரமான புத்தகங்களேக்கொண்டு வந்து பெண்ணிடம் கொடுத்து வாசிக்கச் சொல்வார். அவைகளேப் படித்துப் படித்து விமலாவிற்கு தனது குழந்தைகளே நன்றாகவும் சுகாதார முறையிலும் வளர்க்க வேண்டுமென்று ஆசை ஏற்பட்டுவிட்டது.

ராமு குழந்தையின் உடம்பையும் தலேயையும் தொட்டுப் பார்த்துவிட்டு "உடம்பு "ஜில்" என்றல்லவோ இருக்கு. தர்மாமீடரை இப்படிக் கொடு. இன்னொரு தடவை வைத்துப் பார்க்கலாம். நீ அதை நன்றாகக் குலுக்கி வைத்தாயோ?" என்று வினவினன்.

"நன்றாகக் குலுக்கிதான் வைத்தேன். என்பேரில் சந்தேகமாக விருந்தால் நீங்களே வைத்துப் பாருங்களேன்" என்று முணு முணுத்துகொண்டே தர்மாமீடரைக்கொண்டுவந்து ராமுவின் கையில் கொடுத்தாள்.

ராமு வைத்துப் பார்த்ததில் அந்த அசட்டு தர்மாமீடர் "நார்மல்" காண்பித்தது. அதை மனேவியிடம் தந்து ராமு "பாரடி, நார்மல் அல்லவா காண்பிக்கிறது" என்றான்.

"ஆனல் தர்மாமீடர்தான் சரியாக இல்லே என்று தோன்றுகிறது. எனக்கு ஒரு மாதிரி காண்பிப்பதின் காரணமென்ன?"

"அதிருக்கட்டும், நீ எதற்காக திடீரென்று டெம்பரேசர் பார்த்தாய்?"

"குழந்தை இரும்பிக்கொண்டு வந்தாள். உடம்பு சுட்ட மாதிரி இருந்தது......"

ராமு கலகல வென்று சிரித்த வண்ணம் "நான் காப்பி குடிக்கும் பொழுது அவளுக்கும் கொஞ்சம் கொடுத்தேன். அதை குடிக்கும் பொழுது கொஞ்சம் பொரை ஏறிக்கொண்டு இரும்பினள். அவ்வளவு தான். சுடச்சுட காப்பி குடித்தவுடன் டெம்பரேசர் பார்த்தால் நூறு டிகிரியும் காண்பிக்கும். நூத்திஒண்ணும் காண்பிக்கும். உன் அழகான சிசு பராமரிப்பு விதத்தைப் பார்த்தல்லவா எல்லோரும் கற்றுக்கொள்ளவேண்டும். இனிமேல் உன் தந்தை இந்த விஷயமாக ஏதாவது புத்தகம் அனுப்பட்டும் சொல்கிறேன். உடனே அவைகளேக் கிழித்தெறிந்துவிட்டு தான்

மறுவேலையை பார்க்கப் போகிறேன்" என்றான்.

விமலா முகத்தில் அசடு தட்டச் சிரித்தாள்.

தருமபுரி டி. மு.
கோர்ட்டில். O. P. 180/40

மனுதார் :—சுந்தரம்மாள்

எதிர் மனுதார்கள் :—

1. வெங்கடாசல செட்டி
2. காளியப்ப செட்டி
3. மைனர் ராமனுத செட்டி
   கார்டியன் அமராம்பாள்

மனுதாரின் புருஷன் இறந்த சின்னசாமி செட்டியாரின் சகல சொத்துகளுக்கும் மனுதாரிக்கு பாத்ய சர்டிபிகேட்டு கொடுக்க வேணுமாய் கொடுத்திருக்கும் ஷை மனுவிஷயமாய் ஆக்ஷேபனையுள்ளவர்கள் 27-1-41ல் தருமபுரி டி.மு. கோர்ட்டாரிடம் சொல்லிக் கொள்ள வேண்டியது.

26-12-40. **K. R. NARASIMMACHARI**
மனுதார் வக்கீல்.

மன்னார்குடி டி. மு. கோர்ட்டு
1940 S. C. P. No. 71

ஜெம்பகத்தம்மாள்—மனுதாரி
N. R. சாரங்கபாணி ஐயங்கார்—எதிர்
[மனுதார்

ஷை மனுதார் அட்வகேட் V. ராமச்சந்திர தீக்ஷிதர் தெருவித்துக் கொள்ளுகிறதாவது

ஷை மனுதாரியின் புருஷனை இறந்த N. R. ரெங்காசாரியாருக்கு வரவேண்டிய மன்னார்குடி மேல ராஜ வீதி காதர் மொய்தீன் ராவுத்தரால் எழுதியிருக்கிற பிராமிசரி நோட்டீசின் வட்டி முதல் தொகை ரூ. 2000-0-0மும் ஷை யூர் வாணக்காரகா தெரு, சுப்பிரமணிய பிள்ளையால் எழுதியிருக்கிற பிராமிசரி நோட்டீஸின் வட்டி முதல் ரூ. 168-12-0ம் ஷை N. R. ரெங்காசாரி யாருடைய சம்ஸாரமான ஜெம்பகத்தம் மாள் வாரிசு மூல்யமாய் வசூல் செய்ய வாரிசு ஸர்ட்டிபிகேட் பெறவேணுமாய் ஷை கோர்ட்டில் மனுக் கொடுத்து 20-1-41ல் ஈரங்கி போடப்பட்டிருக்கிறது. அது சம்மந்தமாக ஆக்ஷேபனையுள்ளவர்கள் அன்று வந்து தெரிவித்துக் கொள்ளலாம்.

V. ராமச்சந்திர தீக்ஷிதர்
அட்வகேட்.

மண்டுக நாயகி

[ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ. பி. எல்.]

பாதாளத்தில் வசிக்கும் மண்டுக ராஜனின் பெண் மண்டுக நாயகி அழகிய திவ்ய கன்னிகையின் ரூபமெடுத்துக்கொண்டு மோஹ ராஜனின் அரண்மனைத் தோட்டத்தில் புஷ்பம் பரிக்கலானாள். மோஹ ராஜன் அச் சமயம் உல்லாசமாய்த் தோட்டத்தில் உலாவி வந்த பொழுது அக் கன்னிகையைப் பார்த்தான். அவளுடைய ரூபலாவண்யத்தில் ஈடுபட்டான். அவளருகிற் சென்று இனிய மொழிகளை உரைக்கலானான். ஆனால் மண்டுக நாயகி அவனைப் பொருட்படுத்தாமல் நடந்து சென்று அத் தோட்டத்தில் உள்ள ஓர் சிறிய தாமரை ஓடையில் தாவிக் குதித்து மறைந்தாள். அரசன் அவள் தண்ணீரில் மூழ்கி உயிர் துறந்ததாய் எண்ணி தன் ஆட்களை வரவழைத்து ஜலத்தை இறைக்கச் செய்தான். ஓடையின் ஜலம் முழுவதும் இறைக்கப்பட்டும் சவம் அகப்படவில்லை. ஓடையின் அடிதலத்தில் பெரிய தவளைகளைப் பார்த்தான். இவைதான் தன் நாயகியை விழுங்கி இருக்கவேண்டுமென்று ஊகித்து தவளைகளை கொல்வித்தான்.

பின்பு அரண்மனை சென்ற அரசனுக்கு ஒரே பயித்தியமாகிவிட்டது. அக் கன்னிகையை நினைத்து நினைத்து உருகினான். தவளைகளை நிந்தித்தான். அவைகளாலல்லவா தனக்குக் கிட்டிய ஸுகம் எட்டாததாயிற்று. தனக்குத் தீங்கிழைத்த தவளைகளை உலகத்திலேயே இருக்கக் கூடாதென்று தீர்மானித்தான். உடனே நாடெங்கும் தவளை வேட்டைக்கு உத்தரவு போட்டான். அரசனைப் பார்க்க வருபவர்கள் கொன்ற தவளைகளைக் காணிக்கையாகக் கொண்டு வரலானார்கள். உத்யோகம் அபேக்ஷிப்பவர் தாங்கள் ஸம்ஹாரம் செய்த தவளைகளை முன் அனுப்பிப்பின் வந்தார்கள். அதிக தவளைகளைக் கொன்றவர்க்கு மேல் உத்யோகப் பிராப்தி. தவளை வேட்டையில் சளைத்தவர்க்கு உத்யோக ஹானி. இவ் விதமாகத் தவளை ப்ரளயம் பூலோகத்தில் பரவியது. பாதாள லோகத்திலுள்ள தவளை ராஜனுக்கு தெரிந்து அவன் தன் இனத்தாரின் பெரும் சேதத்தைச் சகிக்காதவனாய் இதற்குக் காரணத்தை விசாரிக்கலானான். தான் வேவுக்காரர்களை மாறுவேடம் பூண்டு பூலோகம் சென்று உண்மையறிந்துவரக் கட்டளையிட்டான். அரசனின் நாயகி சிங்கார வனத்தின் ஓடையில் ஜலக்கிரீடை செய்

யும்போது தவளைகள் அவளை விழுங்கிவிட்டதால் அரசனுக்கு தவளைகளின் பேரில் த்வேஷ மேற்பட்டதாய் தெரிய வந்தது. மண்டுக ராஜன் தன் பிரஜை களைக் கூப்பிட்டு விசாரித்தான். "அரசனின் ஆசை நாயகியைத் தின்ற பாவி யார்" என்று தவளை மஹா ஜனங்கள் மிக்க பரிதா பத்துடன் "நாங்கள் ஒன்றும் அறியோமே. உங்களுக்குத் தெரி யாதா? நம் இனத்தவர் நர சரீ ரத்தை உண்பதுண்டா? நாம் என்ன முதலைகளா? நீங்களே எங்களிடம் இப்படிச் சந்தேகப் பட லாமா?" என்று முறையிட்டார் கள். மண்டுக ராஜனுக்கு ஒன் றும் புரியவில்லை. பூலோகத்தில் தவளை ப்ரளயம் கோரமாக நடக் கிறது. யானைகளுக்கு யுத்தப் பயிற்சி யெல்லாம் போய் தவளை களைக் கால்களால் நசுக்குவதே கார்யமாய்விட்டது.

இந்த வேடிக்கையை அரசன் அக் ராஸனம் வஹிக்க பெரும் ஜனக் கூட்டங்களால் பார்வை யிடப்பட் டது. தெருக்களில் கொன்ற தவளை களைக் கோர்த்துத் தோரணங்கள் கட்டப்பட்டன. இக் கடோரச் செய்திகளைக்கேட்டுக்கேட்டு மண்டுக ராஜனின் மனம் சல்லடைக் கண்ணா கப் போய்விட்டது. அவன் இன் னது செய்வதென்று வகை தெரியா மல் ஏக்கமுற்று வியாதி பிடித்து படுக்கையில் கிடந்து புரண்டுக் கொண்டு "ஹா என்ன செய்வேன். என் இனத்தார் இப்படி மாண்டு போக நான் பார்த்துக்கொண் டிருக் கிறேனே" என்று புலம்பிய வண் ணமா யிருந்தான்.

இவ்வாறு சில நாட்கள் சென்ற பின் தேக பீடையுற்ற தன் பிதாவை உபசரிக்க வந்துகொண் டிருந்த மண்டுக நாயகி இனித்தான் சும்மா இருக்கக்கூடாதென்று நினைத்துப் பேசலானாள்: "அப்பா, இந்த மஹாப்ரளயத்திற்குக் காரணம் நானே"

"ஹா நீயா அப் பெண்ணை விழுங்கினாய்? ஏது அப்படிச் செய் தாய்?"

"பெண்ணையாவது தவளை விழுங் கவாவது. அந்த முட்டாள் அப்படி நினைத்துக்கொண்டான். நான்தான் அந்தப் பெண். நான் ஒரு கன் னிகை வேடம் பூண்டு அவ்வரசன் தோட்டத்தில் உள்ள தாமரை ஓடை வழியாய்ச் சென்று மலர் கொய்தேன். அரசன் என்னை யதிர்ச்சையாய்ப் பார்த்து மோஹம் கொண்டு துரத்தலானான். நான் மீண்டும் ஓடையில் பிரவேசித்துச் சொந்தமான ஸ்வரூபத்துடன் பாதாளம் வந்தடைந்தேன். இது தான் நடந்த விருத்தாந்தம்"

"குழந்தாய், இந்த மண்டுக ப்ர ளயத்தை உடனே நிறுத்தவேண் டும். இது உன் மூலமாய் ஏற்பட்ட தால் நீ அரசனை மணந்துகொண்டு எங்கள் வம்சத்திற்கு அபயம் அளி க்க வேண்டும். மறு பேச்சு பேசாதே. எடுத்துக்கொள் கன் னிகை ரூபத்தை. வாபோவோம் பூலோகத்திற்கு" என்று வேண்டிக் கொண்டான்.

மண்டுக நாயகியும் இசைந்தாள்.

மண்டுகராஜன் பெண்ணை அழைத்துக்கொண்டு திவ்ய சிவிகை ஏறி பூலோகம் வந்து அரசனைப் பேட்டிகண்டான். நடந்த விருத்தாந் தத்தைத் தெரிவித்துத் தன் பெண் ணை அங்கீகரிக்கும்படியும், நிரபராதி யான தவளைகளை ஹிம்ஸிக்காம

விருக்கும்படியும் பிரார்த்தித்துக் கொண்டான்.

அரசன் திவ்யலாவண்ய வதியான மண்டூக நாயகியை மணந்து கொண்டு மண்டூகங்களுக்கு ஸம்பந்தி உபசாரங்கள் செய்வித்துக் கௌரவித்தான். அன்று முதல் அவன் மண்டூக நாயகியின் முகம் கோணுமல் நடந்துகொண்டான். ஆனல் அவளை ஆறு குளம் கிணறுகளுக்கு அருகாமையில் போகவிடாமல் பாதுகாக்க வேண்டியிருந்தது. அரண்மனைக்கு ஒரு மைல் தூரத்திற்கு குளம் குட்டை கண்ணி கிணறு முதலியவற்றைத் தூற்றுவிட உத்தரவிட்டான். மண்டூக நாயகிக்குத் தன் ஜாதி ஞாபகம் வராதபடியும் தேங்கிய ஜலம் கண்ணில் படாதபடியும் வெகுஜாக்ரதையாய்ச் செய்துவிட்டு அவளுடன் ஐகிக போகங்களை வெகுகாலம் அனுபவித்தான் மோஹராஜன்.

பாரத மணி

உயர்தர மாதப் பத்திரிகை.

வருஷ சந்தா { உள்நாடு ரூ. 3 / வெளிநாடு ரூ. 5

இன்றே சந்தாதாரராய்ச் சேருங்கள்!

இந்தக் கூபனைக் கத்தரித்து அனுப்புங்கள்

மானேஜர்,
பாரத மணி

12, பிருந்தாவனம் தெரு,
மயிலாப்பூர்
மதராஸ்.

அன்பார்ந்த ஐயா,

நான் "பாரத மணி''க்குச் சந்தாதாரனகச் சேரவிரும்புகிறேன். இன்று மணியார்டர் மூலம் ஒரு வருஷ சந்தா ரூ. 3-0-0யும் அனுப்பியிருக்கிறேன். தயவு செய்து கீழ்க்கண்ட விலாஸத்துக்குப் பத்திரிகையை அனுப்பவும்.

கையெழுத்து...

விலாஸம்...

....

....

யார் பலசாலி?

("பாஸ்கரன்")

ஒரு பெரிய காட்டில் ஒரு புலி, எலி, நரி, ஓநாய், கீரிப்பிள்ளை ஆகிய இந்த ஐந்து மிருகங்களும் சேர்ந்து மிகவும் ஸ்நேகமாக வாழ்ந்து வந்தன. அவைகள் எங்கே போனாலும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமல் சேர்ந்தே போகும். அந்தக் காட்டில் ஒரு மான் வசித்து வந்தது. அந்த மான் நன்றாய்க் கொழுத்துப் பள பள என்று இருந்தது. அந்த மான் மிக வும் தந்திரமும் பலமுமுள்ளதாகையினால் அதைக் கொல்ல எந்த மிருகத்தினாலும் முடியாமலிருந்தது.

ஒருநாள் புலி தன் நண்பர்களை யெல்லாம் அழைத்து ஒரு சபை கூட்டியது. புலி—"நண்பர்களே! இப்பொழுது நாம் ஒரு முக்கியமான சமாசாரத்தைப் பற்றி யோசனை செய்யவேண்டியிருக்கிறது! நமது காட்டில் ஒரு மான் கொழுத்துப்போய்த் திமிறுபிடித்து அலைகின்றது! அதை எப்படியாவது கொன்று நாம் எல்லோரும் விருந்து சாப்பிடவேண்டும்! அதற்கு ஒரு உபாயம் சொல்லுங்கள்!"—என்று கேட்டது.

நரி எப்பொழுதும் தந்திரசாலி. யோசனை சொல்லுவதில் அதை ஒருவரும் வெல்ல முடியாது! உடனே அதற்கு ஒரு யோசனை தோன்றியது. "புலியாரே, நான் ஒரு யோசனை சொல்லுகிறேன்! அதன்படி நடந்தால் அந்த மானைக் கொன்றுவிடலாம்! நேரில் எதிர்த்துக் கொல்வதென்பது முடியாத காரியம்! தந்திரத்தினால்தான் கொல்ல வேண்டும்! மான் தூங்கும்பொழுது நமது எலி அதன் காலைக் கெட்டியாகக் கடித்துவிடவேண்டும். அப்பொழுது மானால் வேகமாக ஓட முடியாது. அப்பொழுது தாங்கள் வெகு சுலபமாய்க் கொன்றுவிடலாம். பிறகு நமது விருந்து 'பலே குஷி'யாகத்தான் இருக்கும்!" என்று நரி சொல்லியது.

எலி மான் தூங்கும் சமயம் பார்த்து அதன் காலைக் கெட்டியாய்க் கடித்துவிட்டது. உடனே புலி மானை ஒரே அறையில் தீர்த்துவிட்டது. எல்லா மிருகங்களும் மானைத் தின்ன அவசரம் அவசரமாக ஓடிவந்தன. நரி, அவைகளைப் பார்த்து, "நண்பர்களே, அவசரப் படாதீர்கள்! ஆக்கப் பொறுத்தது ஆறப் பொறுக்க வேண்டாமா? எல்லோரும் ஸ்நானம் செய்துவிட்டுச் சுத்தமாகப் புசிப்போம்!" என்றது.

எலி, புலி, ஓநாய், கீரிப்பிள்ளை ஆகிய நான்கும் நரியை மானுக்குக் காவல் வைத்துவிட்டு ஸ்நானம் செய்வதற்குக் குளத்திற்குப் போயின.

புலி முதலில் ஸ்நானம் செய்துவிட்டு வந்தது. இங்கே நரி மிகவும் சோர்ந்த முகத்துடன் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தது. புலி—"நண்பா, என் கவலையுடன் உட்கார்ந்திருக்கிறாய்? மாமிசத்தைப் புசித்துவிட்டு விளையாடுவோம் வா!" என்றது.

நரி. "புலியாரே, என் துக்கத்துக்கு நிவர்த்தியில்லை. எலி இன்று என்னிடம் வந்து 'பராக்கிரமசாலியாகிய புலியினாலேயே கொல்ல முடியாத மானை நான் கொன்றுவிட்டேன்! என் உதவி இல்லையென்றால் புலியினால் மானை ஒன்றும் செய்ய முடியாது. என் சாமர்த்தியத்தையும் பலத்தையும் நினைக்கும்பொழுது எனக்கு என்னையும் அறியாமல் ஆநந்தம் உண்டாகிறது!' என்று சொல்லிக் கூத்தாடியது. அதைக் கேட்டது முதல் என் மனம் படாதபாடு படுகிறது!"—என்று கூறி வருந்தியது.

அது கேட்ட புலி "அப்படியா? எலியும் அப்படிச் சொல்லியதா? அப்படியானால் எனக்கு அந்த மாமிசம் வேண்டாம்! நான் அதைத் தின்றால் எனக்கு மிகவும் கௌரவக் குறைவு! நான் என் கையினாலேயே சம்பாதித்து அதைத்தான் தின்னப் போகிறேன்!" என்று சொல்லிவிட்டுப்

புலி வேறு காட்டிற்குப் போய்விட்டது.

பின்பு எலி வந்தது. நரி "எலியே, ஒரு சமாசாரம்! கீரிப்பிள்ளை சொல்லி யது. இந்த மானின் மாமிசம் விஷமுள்ள தாம்! ஆகையினால் அது உன் மாமிசத் தைத்தான் தின்னப் போகிறதாம்! நீ ஜாக்கிரதையா யிரு. நான் சொல்ல வேண் டியதைச் சொல்லிவிட்டேன்!" என்றது. உடனே எலி பயந்து நடு நடுங்கி வளைக்குள் போய்ப் பதுங்கிக்கொண்டது.

ஓநாய் ஸ்நானம் செய்துவிட்டு சாப்பிடு வதற்கு ஆவலுடன் வந்தது. "ஓநாயே, புலி உன்மேல் மிகவும் கோபம்கொண் டிருக்கிறது! என்ன காரணமோ தெரிய வில்லை. அது இப்பொழுது தன் மனை வியை யழைத்துக்கொண்டு இங்கே வரும். நீ செய்யவேண்டியதைச் செய்துகொள். பிறகு என்மேல் குற்றம் சொல்லாதே!" என்று நரி மிகவும் சாமர்த்யமாகச் சொல்லியது. ஓநாய் இதைக் கேட்டதும் பயந்து அலறிப் புடைத்துக்கொண்டு ஓடி விட்டது.

சற்று நேரத்திற்கெல்லாம் கீரிப்பிள்ளை மிகவும் ஆவலுடன் ஓடிவந்தது. புலியை யும் ஓநாயையும் விரட்டி யடித்த நரி இந்தக் கீரிப்பிள்ளைக்கு பயப்படுமா? "கீரிப்பிள்ளையே, கொஞ்சம் பொறு! மகா பராக்கிரமசாலியாகிய புலியும் ஓநா யும் என்னுடன் சண்டை செய்து தோல்வி யடைந்து வேறு காட்டுக்கு ஓடிவிட்டன! இந்த மானின் மாமிசம் தின்னப் பிரிய மிருந்தால் என்னோடு சண்டை செய்து என்னை ஜயித்துவிட்டுப் பிறகு உன் இஷ் டப்படி புசிக்கலாம்!" என்றது நரி.

உடனே கீரிப்பிள்ளை நரியின் காலில் விழுந்து நமஸ்காரம் செய்து "புலியும் ஓநாயும் உன்னிடம் தோற்று ஓடிவிட் டால் உன்னோடு சண்டை செய்ய யார் இருக்கிறார்கள்? நீதான் பலசாலி! நான் போய்வருகிறேன்". என்று சொல்லி விட்டுக் காற்றாய்ப் பறந்துவிட்டது.

பிறகு நரி ஆனந்தமாய்த் தன் மனைவி மக்களுடன் மானின் மாமிசத்தைத் தின்றுவிட்டுப் பெரிய ஏப்பம் விட்டது.

காஞ்சீபுரம் நிதி லிமிடெட்

ஆடிசன்பேட்டை — காஞ்சீபுரம்

மாதாந்திர ஏலச்சீட்டு பண்டின் அறிக்கை

இந்நிதியில் பிரதி மாதமும் ரூ. 25, 50, 100, 250, 500, 1000/ மதிப்புள்ள பலவித சீட்டுகள் ஏராளமாக நடந்து வருகின்றன.

இந்த சீட்டு பண்டினால் ஏற்படும் பல நன்மைகளில் முக்கியமானவை வியாபாரிகள், உத்தியோகஸ்தர்கள் முதலியோர்கள் தங்களுக்கு தேவை யான பணத்தை வேண்டும்போது இலகுவில் பெற்றுக்கொண்டு, மாதா மாதம் சிரமமில்லாமல் கடனை திருப்பி அடைத்து விடலாம். மீற்றிவைப் போர்களும் இதனால் மிக்க உயர்ந்த லாபத்தை அடையலாம்.

மற்ற விபரங்களுக்கும், ஏஜன்ஸி நிபந்தனைகளுக்கும் எழுதவும்.

K. R. CHARY, B.A.,
செக்ரடரி.

குழந்தைகளுக்கு கவலையற்ற கல்விப்பயிற்சி, பெண்ணின் விவாகம், ரம்மியமான இருப்பிடம், இன்பவாழ்க்கை, இவைகளை எல்லாம் கற்பக விருக்ஷம்போல் உங்களுக்கு அளிக்கத் தழைத்தோங்கி நிற்கும் ஸ்தாபனம்

இந்தியன் மியூச்சுவல் லைப் அஸோஸியேஷன்
லிமிடெட்

டெலிபோன் : **3777**

10, மவுண்டு ரோட், மதராஸ்.